உமா

ஆசிரியர் : ஜி. உமாபதி

576
ஆகஸ்ட் - 1955
மலர் - 3 இதழ் - 4
576/3-55
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 AUG 1955
MADRAS
JL
N55.3-4
192212

use Germex for all SKIN DISEASES
இருமிநாசமளிக்கும் ஆற்றும் தன்மையுள்ள
ஜெர்மெக்ஸ்
சிராய்ப்புகள், வெட்டுகள், படை, சொரி, கரப்பான், கட்டிகள், கடி விஷக்கடி சதைத் தடிப்பு, முகப்பரு போன்ற இதர சரும உபாதைகளுக்கு
Skin Disorders Quickly relieved with GERMEX
எல்லா சரும உபாதைகளுக்கும் ஹிதமளிக்கும் பிரத்யேக மருந்து மூலிகைகளும் கிருமி நாசத்துவ மருந்துகளும் விஞ்ஞான முறைப்படி கலந்து தயாரிக்கப்படும் சிறந்த சரக்கு இது. மிருதுவான சருமத்துவாரங்களுக்குள் ஊடுருவிச் சென்று, புது ஆரோக்கியமான சருமம் வளர ஜெர்மெக்ஸ் உதவி செய்கிறது. ஜெர்மெக்ஸ் மிருகக்கொழுப்பற்றது என்பதற்கு உண்மையான உத்தரவாதம் அளிக்கிறோம்.
படை வியாதி
வலிக்கும் கட்டிகள்
அரிக்கும் தடிப்புகள்
விஷத் தன்மையான வெட்டுகள்
முகப் பருக்கள்
★ இருமியை கொல்லுகிறது
காயத்தை ஆற்றுகிறது
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மசூடிகல்ஸ் லி-ட்.,
சென்னை-2.

இப்பொழுது நடைபெறுகிறது :

ஸ்ரீ கிருஷ்ணா, கெயிட்டி, ராஜகுமாரி, உமா

மற்றும் தென்னாடெங்கும்

INSIST ON
Swastik
TABLE SALT
(REGD NO 1643)
IN 1 LBS, 3 LBS & 164 LBS GUNNY PACKING
SWASTIK TABLE SALT
ஸ்வஸ்திக் டேபிள் ஸால்ட்
கைபடாமல் சுகாதார முறைப்படி
தயாரிக்கப்பட்டது...சமையலுக்கு உகந்தது
PHONE
2463
CONTACT: M/S. MANOHAR & COMPANY
201, GOVINDAPPA NAICK ST, MADRAS. 1
MUTHU

ZAMA RUB
ஜாமா
ஆயில் & றப்
ஜலதோஷம், தலைவலி முதலியவைகளுக்கு
ஜாமா
இன்ஹேலர்
ஜலதோஷத்திற்கு
ZAMA INHALER
AMARCHAND SOBACHAND
POST BOX. 518 .... MADRAS. 3
-moorthy-

இப்பொழுது **துஷார்** இரட்டிப்பு வளம் பெற்றுள்ளது!

இப்பொழுது நீங்கள் பெறும் **துஷார்** முன்னையதைவிட இரட்டிப்பு மடங்குமேல் வைட்டமின் 'A' கொண்டு வளம் பெற்றுள்ளது. மேலும் வைட்டமின் 'D' வளம் பெற்று உங்கள் வழக்கமான உணவிற்கு அதிக புஷ்டியைக் கொடுக்கிறது.

சாஸ்திரோக்தமாக பாக் செய்யப்பட்டது:
அதிக நாட்கள் தரம் கெடாது வைட்டமின் சத்துக்களைக் காப்பாற்றுகிறது.

கையினால் தொடப்படாதது:
உத்திரவாதமான சரக்கு. காற்று புகாத ஸீல் வைக்கப்பட்ட டின்களில் கிடைக்கிறது.



ஒரு அவுன்ஸ் 700 சர்வதேச யூனிட்டுகள் கொண்டது.

ஒரு அவுன்ஸ் 700 சர்வதேச யூனிட்டுகள் கொண்டது.

துஷார் உங்கள் உணவை வளப்படுத்துகிறது என்பதை மறவாதீர்!

இந்திய மூலதனத்தைக் கொண்டு இந்தியத் தொழிலாளிகளால் தென்னிந்தியாவின் மிகப் பெரிய வனஸ்பதி தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டது.

துங்கபத்திரா இண்டஸ்ட்ரீஸ்,

கர்நூல்.

ஜூலை 29-ந் தேதி முதல்

சென்னை சித்ரா, கிரவுன், & மஹாலக்ஷ்மி
(பெரம்பூர்)

மற்றும் தமிழ் நாடெங்கும்



ஸ்ரீமதி பிக்சரின்

ஆசை அண்ணா

அருமை தம்பி

மாதுரி தேவி, டி. ஆர். ராமச்சந்திரன்,
ஏ. பி. நாகராஜன், ராஜ சுலோசனா
ஆகியோர் நடிப்பது

RIGHTS CONTROLLED BY:
ராதாகிருஷ்ணா பிலிம்ஸ் லிமிடெட்
(H. O. ஆலப்புழை)
34. தியாகராயா ரோடு—மதராஸ்-17.

தமிழை ஆட்சி மொழியாக்குவதே
நமது முதல் லட்சியம்

உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

செடி 3 மலர் 4	ஆகஸ்ட் 1955	மன்மத ஹு ஆடி மீ

பொருளடக்கம்

நாட்டை உயர்த்திய உரிமைச் சின்னம்	தலையங்கம்	 9
எல்லைப் போராட்டம்	—	 10
தமிழரசுக் கழக மாநாட்டுப் படங்கள்	—	... 11
இளங்கோ சமணரா?	ம. பொ. சிவஞானம்	 12
பெ. தூரன் (பேட்டி)	பூவை. எஸ். ஆறுமுகம்	 15
கிரகணம் பிடித்தது! (கவிதை)	—	 16
கிரகணம் விட்டது! (கவிதை)	—	 17
ஆங்கிலப்பெயர்களை மாற்றுக!	ஜி. உமாபதி	... 20
எங்கள் இதயங்கள் பேசுகின்றன	—	... 24
ராம்—ரஹீம் (பாப்பா உமா)	தங்கமணி	 25
உங்களுடன் ஒரு கணம்	—	30
தனிக்காட்டு ராஜா	ர. சண்முகம்	 31
என் முதல் கதை	'மாயாவி'	 37
குமாரி பிரேமா	வ. உ. சி. சுப்ரமணியம்	 40
பசுமை நினைவுகள்	த. நா. குமாரஸ்வாமி	 45
இசையும் இசைவும்	ஜெயகாந்தன்	 47
கவிஞர் தரும் காட்சி	ந. சஞ்சீவி எம். ஏ.	... 52
வாத்தியாரம்மா	ராஜம் கிருஷ்ணன்	... 55
அந்தித் தாமரை	'பூவை'	... 61
மனப் புயல் (தொடர் கதை)	யோகி சுத்தானந்த பாரதியார்	... 67
பட உலகம்	—	... 72

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம்
கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சென்னை மாவட்ட தமிழரசுக் கழக மாநாடு

கடந்த ஜூலை 2, 3 தேதிகளில் செயிண்ட் மேரீஸ் ஹாலில் வெற்றியுடன் நடைபெற்ற சென்னை மாவட்டத் தமிழரசுக் கழக மாநாட்டில் தலைவர் திரு ம. பொ. சி அவர்களின் உணர்ச்சிப் பெருக்குக் கொண்ட பேச்சில் மக்கள் கும்பல் மெய்ம்மறந்து கட்டுண்டிருக்கிறது.

மாநாட்டின் சொற்பொழிவுக்குப் பிறகு 'உமா' இல்லத்தில் உண்டு, ஓய்வு பெறும் நேரத்தில், சொல்லின் செல்வர் ம. பொ. சியைச் சூழ அமர்ந்திருக்கின்றனர் திருவாளர்கள்: சின்ன அண்ணாமலை, இளவழகனார், ஐயன் பெருமாள் கோனார், ஜி. உமாபதி, பி. எஸ். மணி, கோ. மோ. ஜனார்த்தனம், கே. விநாயகம், விகடம் நாராயண சாமி ஆகியோர்.

நாட்டை உயர்த்திய உரிமைச் சின்னம்!

அசோக சக்கரம் திகழப் பட்டொளி வீசிப் பறந்து நிற்கும் தேசீயக் கொடி நம் பாரத நாட்டின் உயிர். அதுவே நம் தேசத்தின் லட்சியம்; கனவு; சேம நிதி. அறவாழி பொறித்த தாயின் மணிக்கொடி நம் நாட்டின் சுதந்தர வாழ்வுக்கு ஓர் உரிமைப் பட்டயம்–நினைவுச் சின்னம்.

முப்பத்தேழு கோடி மக்களின் ஒரே குரலாக எதிரொலிக்கும் அருமை பெருமை வாய்ந்த நம் தேசத்தின் புனிதக் கொடியை ஆகஸ்ட் முதல் நாளன்று ஒரு கும்பல்—பைத்தியக்காரக் கும்பல் திராவிடக் கழகத் தலைவர் திரு ஈ. வே. ரா. வின் தலைமையின் பேரில் கொளுத்தப் போகிறதாம்.

திரு ஈ. வே. ராமசாமி நம் நாட்டுக்கு ஒரு துரோகச் சின்னம். சென்ற முப்பது ஆண்டுகளாக அரசியல் அரங்கில், சமுதாய மேடையில் அவர் போட்டுக் கலைத்த வேஷங்கள் பல உண்டு. தேசத்துரோகம் ஒன்றினையே தன் தொழிலாகக் கொண்டதுடன் நிற்காமல், அதுவே தான் தேச சேவை என்று இளைஞர்களை மயங்கச் செய்து, அவர்களைப் பொம்மைகளாக இயங்கும்படியும் செய்து கொண்டிருக்கின்றார்.

திராவிட மக்கள் மீது இந்தியைத் திணிப்பதை எதிர்ப்பதற்காகத் தான் தேசீயக்கொடியைக் கொளுத்தப்போவதாக ஈ. வே. ரா கூறுகிறார். திராவிட மக்கள் என்று கூறுவது, தமிழ்மக்களை மட்டும் குறித்ததுதானா? இல்லையெனில், ஏற்கனவே ஆந்திர, மலையாள, கன்னடப் பிரதேசங்களில் இந்தி ஆதிக்கம் செலுத்துவதை அவர் அறிந்திருந்தும், அங்கெல்லாம் சென்று கொடியை எரிக்க முற்படாமல், தமிழ் நாட்டில் மாத்திரம் தன் கைவரிசையைக் காட்ட ஏன் முயல வேண்டும்? ஆகவே, திராவிடநாடு என்பதெல்லாம் தமிழ் மக்களை ஏமாற்றி, தன் பொய்க் கருத்துக்களை விலையாக்குவதற்கு ஈ. வே. ரா தமிழ் நாட்டை ஒரு சந்தையாக ஆக்கிக் கொண்டிருக்கிறார் என்பதும் தெள்ளத் தெளியத் தெரிகிறது.

''கொடியைக் கொளுத்துவேன்'' என்று ஜம்பமடிக்கும் பெரியார் (!) அதே நேரத்தில், ''வேண்டாம் என்றால், நிறுத்திவிடுவோம்; திண்ணையிலும், வீட்டினுள்ளும் கொளுத்திக் கொள்ளுங்கள்'' என்று தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு ஏதோ ஒரு வேலையைக் கொடுத்து அவர்களை ஆட்டிப்படைக்கிறாரென்பதும் நன்கு புலனாகிறது.

இந்தப் பயங்கரமான தேசத் துரோகச் செயலுக்குப் 'பதில்' சொல்லாத வரையில் ஈ. வே. ராவை நம் நாடு சும்மா விடாது என்பதுமட்டும் உறுதி. ஈ. வே. ரா. மரியாதையாக வாபஸ் ஆனால் பிழைத்தார். இல்லையேல், கொடி காத்த குமரன் வழித் தோன்றல்களாகிய தேசத் தொண்டர்கள் இமயம் முதல் குமரி வரை பரவி நிற்கின்றனர்– இவர்களில் கடைசித் தொண்டனின் இறுதி மூச்சு இருக்கும் வரையில், ஈ. வே. ரா. பகிரங்கமாகக் கொடியை எரித்து விட முடியாதென்பதை அவர் நினைவில் வைத்துக் கொள்ளட்டும் என்று நாம் எச்சரிக்கிறோம்.

எல்லைப் போராட்டம்!

இன்று ஆகஸ்ட் முதல் தேதி. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு வடக் கெல்லைப் பாதுகாப்புக் குழு கொடுத்த தவணை நேற்றுடன் முடிந்து விட்டது. நேருஜி இன்னும் கமிஷனை நியமிக்கவில்லை.

இரண்டாண்டுகள் பொறுத்திருந்து விட்டோம். இனி போராட்டத்தை தவிர, வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழுவுக்கோ, தமிழரசுக் கழகத்துக்கோ வேறு வழியில்லை.

தலைவர் திரு ம. பொ. சி. அவர்கள் இப்பிரச்சினையில் காட்டியிருக்கும் நிதானத்தையும் ராஜ தந்திரத்தையும் நல்ல மனம் படைத்தவர்கள் பாராட்டுவார்கள். போராட்டத்திற்கு அவசரப் படுபவரன்று தலைவர் ம. பொ. சி. ஆயினும் போராட்டத்தைத் தவிர வேறு எதையும் செய்ய முடியாத நிலைமையில் அவரை, மாகாண-மத்திய அரசாங்கங்கள் இன்று கொண்டு வந்து நிறுத்தி விட்டிருக்கின்றார்கள்.

இப்போராட்டம் துவங்கப்பெறுமானால், வேங்கடம் முதல் குமரி வரையுள்ள தமிழ் இன உணர்ச்சி மிக்க இளைஞர்கள் எல்லைப் பிரச்சினை தீரும் வரையில் ஓய்ந்திருக்க மாட்டார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால், எல்லைக் கமிஷன் நியமிக்கும் விஷயம் பரிசீலனையில் இருப்பதாக நேருஜியிடமிருந்து நம் தலைவருக்குக் கடிதம் வந்திருக்கிறது. பரிசீலனை முடிந்து, நல்ல சேதியைத் தெரிவிக்கப் பாரத அரசாங்கம் இம்முறையாவது கட்டாயம் ஆவன செய்யுமென்று எதிர் பார்க்கிறோம்.

திரு ஏ. எல். முதலியாருக்கு ஒரு யோசனை

கல்லூரிகளில் பிரதேச மொழியையே போதனை மொழியாக ஆக்குவதற்கென்று நம் அரசாங்கத்தினர் 'நிபுணர் கமிட்டி' ஒன்றை அண்மையில் நிறுவியிருக்கிறார்கள். அக் குழுவின் தலைவராக டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்களையும், அவருக்கு அடங்கி நடந்து, அவரது தயவில் வாழ வேண்டிய நிலைகொண்டவர்களை அக்குழுவின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

ஒருமித்த மனத்துடன் கட்சிப் பாகுபாடு இல்லாமல் பணியாற்றி வருபவர்கள்யாரையும் கமிட்டியில் ஏன் இணைக்கவில்லை? தமிழ் வாழ ஒரு செயல்கூடச் செய்தறியாத திரு ஏ. எல். முதலியாரின் பொறுப்பில் கமிட்டி அமைக்கப் பட்டிருப்பது இப் பிரச்சினையைத் தள்ளிப்போடவா? அன்றி, பிரச்சினையைக் குழப்பித் தீராப் பிரச்சினையாக ஆக்கவா?

ஆகவே, திரு முதலியார் அவர்களுக்கு ஒரு யோசனை கூற விரும்புகிறோம். அவர் தானாகவே இக் கல்வித் துறையினின்றும் விலகி, தனக்கே உரித்தான மருத்துவத் துறையிலேயே தன் சேவையை நீடித்துச் செய்வாரானால், தமிழ் மக்கள் அவரை 'மருத்துவ மன்னன்' என்று போற்றிப் புகழ்ந்து மரியாதை செய்வார்களென்பது உறுதி! ★

மறைந்த ஓவியர் சந்திரா

'கல்கி' அலுவலக ஓவியர் திரு சந்திரா அகால மரணமெய்திய துயரச் செய்தி கேட்டுப் பேரதிர்ச்சி அடைந்தோம். அமரர் 'கல்கி' அவர்களுடைய அமரப் படைப்புகளுக்கு அமர ஓவியங்கள் தீட்டவே தான் சந்திராவும் அவருடன் சென்றுவிட்டார் போலும். திரு சந்திராவை இழந்து தத்தளிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தென்னாற்காடு மாவட்ட
தமிழரசுக் கழக மாநாடு

கடந்த ஜூலை 16, 17ல் சிதம்பரத்தில் நடந்த தென் ஆற்காடு மாவட்ட தமிழரசுக் கழக மாநாடு வெற்றி பெற வேண்டுமென்ற கடமை உணர்ச்சியுடன் திரண்டிருக்கும் மக்களின் சமுத்திரம் மாநாட்டுப் பந்தலுக்கு அழகு சேர்க்கிறது.

முதல் நாள் இலக்கிய மாநாட்டில் குன்றக்குடி அடிகளார் ஆசியுரை வழங்கினர். இரண்டாம் நாள் மாநாட்டில் யோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் வாழ்த்துரை கூறினர். இவ்விரு பெரியார்களின் வருகை, தமிழரசுக் கழகத்திற்கு பெருமையளித்தது. இலக்கிய மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் லெ. ப. கரு ராமநாதன் செட்டியார் அவர்களின் தலைமை உரையும், தலைவர் ம. பொ. சி யின் 'கம்பனும் இளங்கோவும்' என்ற சொற்பொழிவும் குறிப்பிடத் தக்கன.

அரசியல் மாநாட்டுக்குத் தலைமை வகித்த திரு சின்ன அண்ணாமலையின் சிறந்த பேச்சும், கலைஞர் ஏ. பி. நாகராஜனின் பொருள் நிறைந்த பிரசங்கமும் மக்களைப் பெரிதும் கவர்ந்தன.



மாநாட்டைத் துவக்கி வைத்த 'உமா' ஆசிரியர் ஜி. உமாபதி இலக்கியச் சுவை பொதிந்த அழகான பிரசங்கம் செய்து கொண்டிருக்கிறார். யோகி சுத்தானந்த பாரதியார், தலைவர் ம. பொ. சி, சின்ன அண்ணாமலை புடைசூழ, ரசிகர்க் குழாம் பேச்சை ஆவலுடன் கேட்டுக் கொண்டிருக்கிறது.

இளங்கோ சமணரா?

ம. பொ. சிவஞானம்

சிலப்பதிகாரம், தமிழ் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. கம்பராமாயணத்தைப் போன்று வடமொழியின் வழி நூலன்று; தமிழில் தோன்றிய முதல் நூல். சிந்தாமணியைப் போன்று சமய காப்பியமன்று; சர்வ சமயத்தினருக்கும் பொதுவான சமூகக் காப்பியம். மணிமேகலையைப்போன்று கற்பனைச் சம்பவங்களையே அஸ்திவாரமாகக் கொண்டதன்று; வரலாற்று நிகழ்ச்சிகளையே அடிப்படையாகக் கொண்டது. மற்றும், சிலப்பதிகாரத்தில் போதிக்கப்படுவது கலப்பு நாகரிகமன்று; தமிழ் இனத்தவருக்கே உரிய தனிப்பட்ட நாகரிகம்.

இவ்வளவு சிறப்புகள் எல்லாம் இருந்தும், சமீபகாலம்வரை சிலப்பதிகாரத்திற்கு தமிழ் மக்களிடையே அதிக மதிப்பில்லை. புலவர் பெருமக்களிலும் பெரும்பாலோர் அதைப் புறக்கணித்து விட்டனர். சைவ-வைணவ இலக்கியங்களில் ஆழ்ந்த பற்றுடைய புலவர்கள் சிலப்பதிகாரத்தை தீண்டவும் நினைத்தார்களில்லை. இன்றுங்கூட இந்தத் 'தீண்டாமை' இலங்கைத் தீவிலுள்ள புலவர்கள் சிலரால் கடைப் பிடிக்கப்படுகிறது.

இதற்கெல்லாம் காரணம், ஆசிரியர் இளங்கோவைச் சமணரென்றும், அவர் இயற்றிய சிலப்பதிகாரத்தைச் சமண காப்பியமென்றும் தமிழ்ப் புலவர்களில் பெரும்பாலோர் நம்பியதேயாகும்.

ஆனால், இளங்கோவைச் சமணரென்றோ, சிலப்பதிகாரத்தைச் சமண காப்பியமென்றோ சொல்லுவதற்குச் சான்றுகள் இல்லை. சிலப்பதிகாரம் முழுவதையும் ஆழ்ந்து படித்தால், ஆராய்ந்து பார்த்தால், தனது சமயம் இன்னதென்று இளங்கோவடிகள் கூறவில்லை என்று தெளியலாம். சிலப்பதிகார காலத்தில் மருதம், முல்லை, குறிஞ்சி, நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களுக்குரிய தெய்வங்கள் இன்னவை என்பதைத் தெளிவாகக் கூறுகிறார் இளங்கோவடிகள். அப்படியே சிலப்பதிகார காப்பியத்தின் பாத்திரங்களுக்குரிய சமயங்களையும் தெய்வங்களையுங் கூடத்தெரிவித்திருக்கிறார். ஆனால், தம்முடைய சமயம் யாது? தான் வழிபடும் தெய்வம் எது? என்பவற்றைப் பற்றி இளங்கோவடிகள் சூசகமாகக் கூடச் சொல்லவில்லை.

சிலப்பதிகார காலத்துக்குப்பின் தோன்றிய புலவர்கள், தாம் இயற்றும் நூற்களின் பாயிரச் செய்யுளில் தமது சமயத்தையும் வழிபடு தெய்வத்தையும் குறிப்பிட்டதுண்டு. ஆனால், இளங்கோவடிகள், சிலப்பதிகாரத்தின் துவக்கத்தில், திங்கள், ஞாயிறு, மழை ஆகிய இயற்கைச் சக்திகளையும், பூம்புகாரையும் போற்றுவதன்றி தனியொரு சமயத்துக்குரிய தெய்வத்தை வாழ்த்தி வழிபடுகின்றாரில்லை.

பிற்காலப் புலவர்கள், தாங்கள் வழிபடும் தெய்வத்தையே தங்களுடைய காப்பியத்தின் தலைவனாக்கினர். அப்படிக்கின்றி, சாதாரண வணிக மகள் ஒருத்தியையே தமது காப்பியத்தின் தலைவியாக்கினார் இளங்கோவடிகள். சிலப்பதிகார காப்பியத்தின் கருப்பொருளாக விளங்குவதும் சமய வழிப்பட்ட நெறியன்று; அல்வழிப்பட்ட அரசை அழிக்கும் அரசியல் புரட்சியேயாகும்.

ஆகவே, எவ்வழியில் நோக்கினும் இளங்கோவடிகளின் சமயம் இன்னதெனத் துணிந்து சொல்வதற்குச் சிலப்பதிகாரத்தில் போதிய சான்றில்லை.

சிலப்பதிகாரத்தில் இந்திர விழா நடைபெறுகின்றது. 'இந்திரன்' என்பான் ஆரியர் குலத்தின் ஆதி மன்னன் எனப்படுகின்றான்.

பிற்காலத்தில் அம் மன்னனுக்கு தமிழ் நாட்டிலுள்ள அரச மரபின ரும் விழா நடத்தினர் என்பது சிலப்பதிகாரத்தால் தெரிகிறது. ஆகவே, இந்திர விழவூரெடுத்த காதையில் பூம்புகாரிலுள்ள சகல சமயங்களின் தெய்வங்கள் உறை யும் கோயில்களிலெல்லாம் வழி பாடுகள் நிகழ்த்தப் பெறுகின்றன. இதனால், அரச மரபினரும், அம் மரபில் வந்த இளங்கோவடிகளும் சர்வ சமயங்களையும், அந்தச் சம யங்கள் வழிப்பட்ட தெய்வங்களை யும் சமமாகக் கருதினர் – மதித்த னர் என்பது வெளிப்படை. காப் பிய நாயகனுக்கும், நாயகிக்கும் தெய்வாம்சம் கற்பிப்பது, பிற் காலப் புலவர்களின் வழக்கம். திருமாலும் இலக்குமியும், ராம னும் சீதையுமாக அவதரித்தார் கள் என்று ராமாயணம் கூறுகிற தல்லவா? அதுபோல, இளங்கோ வடிகள் தனது காப்பியத்தின் நாய கியையோ அவளது நாயகனை கோவலனையோ தெய்வங்களின் அவதாரங்களென்று சொல்ல வில்லை.

ஆனால், தெய்வங்களுக்கு நிக ரானவர்கள் என்று உவமை கூறி சிறப்புச் செய்கின்றார். ஆம்; மங் கல வாழ்த்துக் காதையில், 'கண் டேத்தும் செவ்வேள்' என்னும் வரியில், கோவலன் அழகில் தமி ழர் தெய்வமான முருகனுக்கு நிக ரானவன் எனக் கூறுகின்றார். அப் படியே குன்றக் குரவையில் கண் ணகியைக் கண்ட குரவர்கள் 'எம் வள்ளி போல்வீர்'–அதாவது, முரு கனை மணந்த வள்ளி போன்றவளே எனக் கூறியதாகக் குறிப்பிடுகின் றார் இளங்கோவடிகள். அரசியல் புரட்சி முடித்து ஆவேசம் தணிந்த கண்ணகி தேவி, பதினான்கு நாட் கள் காடுகளையும், மேடுகளையும் கடந்தவள் இறுதியில் முருகன் உறையும் திருச்செங்குன்றத் தையே தனது இருப்பிடமாகக் கொள்கின்றாள். அதோடு நில்லா மல், வாழ்த்துக் காதையில், கட வுள் கோலத்துடன் செங்குட்டுவ னுக்குக் காட்சியளித்த கண்ணகி தேவியார் 'வென் வேலான் குன் றில் விளையாட்டு யானகலேன்' என்று தனது நிலையான இருப்பி டத்தை சேர மன்னனிடம் நிச்ச யித்துக் கூறுகின்றாள்.

முருகனும் வள்ளியும் தமிழ் இனத்தவர் எல்லோருக்கும் பொதுவான தனிப்பெருந் தெய் வங்களாதலால், தமிழகத்தின் தேசியக் காப்பியமான சிலப்பதி காரத்தின் நாயகியையும், அவ ளது நாயகனையும் அந்தத் தெய் வங்களோடு இளங்கோ உவமித் துக் கூறினார் போலும். இதனாலும் இளங்கோவின் இன உணர்ச்சி வெளிப்படுகிறதேயன்றி, அவரது சமயம் இன்னதெனத் தெளிவதற் கில்லை.

இளங்கோவடிகளைத் 'துறவி' என நினைத்து, அதன் காரணமாக அவர் சமண சமயத்தைச் சார்ந்த வராக இருக்கலாம் என நிச்சய யக்கின்றனர் சிலர். ஆனால், இளங்கோவடிகளால் செய்யப் பட்டதென்று துணிய முடியாத பதிகத்துள்ளும் 'அரசு துறந்தி ருந்த குடக்கோச் சேரல் இளங் கோவடிகள்' என்றுதான் குறிப் பிடப்படுகிறார். இதனாலும், இளங் கோ, அரசியல் துறவி என்று கொள்ளலாமேயன்றி, உலக இன்பத்தைத் துறந்தவர் என்று கூறுவதற்கில்லை.

சிலப்பதிகாரத்தின் இறுதியில் வரும் 'வரந்தரு காதை'யில்,

பகல்செல் வாயிற்
  படியோர் தம்முன்
அகலிடப் பாரம்
  அகல நீக்கிச்
சிந்தை செல்லாச்
  சேணெடுந் தூரத் (து)
அந்தமில் இன்பத் (து)
  அரசாள் வேந்து

என்று கண்ணகித் தெய்வம் தம் மைப் பற்றிக் கூறியதாக இளங்கோவடிகளே கூறுகின்றார்.

இங்கு, 'அந்தமில் இன்பத்து அர சாள் வேந்து' என்று கூறுவதனா லேயே இளங்கோவடிகள் சமணத் துறவிதான் என்று துணிவதற் கில்லை.

சிலப்பதிகாரப் பதிகத்துள், 'குணவாயிற் கோட்டத்'தில் இளங்கோவடிகள் தங்கியிருந்ததாகக் கூறப்படுகின்றது. 'கோட்டம்' என்பதற்கு அருகன் கோயில் என்று பொருள் கூறியிருக்கிறார் அடியார்க்கு நல்லார். ஆனால், 'கோட்டம்' என்னும் சொல்லால், முருகன்–திருமால் முதலிய தெய்வங்கள் உறையும் கோயில்கள், அரசனுடைய அரண்மனை, குற்றவாளிகள் அடைபட்டிருக்கும் சிறைச்சாலை முதலிய இடங்களும் குறிக்கப் பெறுவதை சிலப்பதிகாரத்தில் காணலாம். ஆகவே. குணவாயிற் கோட்டத்தில் இளங்கோ இருந்தார் என்பதனாலேயே அவர் சமணர்தான் என்று நிச்சயிப்பதற்கில்லை.

மற்றும் பதிகத்துள், 'குடக்கோச் சேரல் இளங்கோ வடிகள்' என்று குறிப்பிட்டிருப்பதனால், 'அடிகள்' என்னும் சொல்லை சமணத் துறவிகளுக்கே அருகதையாக்கி, ஆசிரியர் இளங்கோ சமணரே என்று சாதிப்பார் சிலர்.

ஆனால், சிலப்பதிகாரத்தில் மாதவி கோவலனுக்கு எழுதிய கடிதத்தில், அவனை அடிகள் என்றே குறிப்பிடுகின்றாள். அந்தக் கடிதத்தைத் தனது தந்தைக்குத் திருப்பிய கோவலன், அதே அடிகள் என்ற சொல்லையே தந்தைக்கும் பயன்படுத்துகின்றான். 'கொலைக் களக் காதை'யில், தன் கையால் உணவு சமைத்து வைத்து உண்ண வரும்படி கணவனை அழைக்கும் கண்ணகி, 'அமுதமுண்க அடிகள்' எனக் கூறுகின்றாள். இதிலிருந்து அடிகள் என்பது பெரியோருக்குப் பயன்படுத்தும் மரியாதைச்சொல் என்றே கொள்ளக் கிடக்கிறது. ஆகவே, அடிகள் என்ற சொல்லைக் கொண்டும் இளங்கோ சமணர் என்று துணிவதற்கில்லை.

சிலப்பதிகாரத்தின் இறுதியில் 'தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்....' என்று துவங்கி முடியும் பதினெட்டு வரிகளில், கண்ணகிக்கும் கோவலனுக்கும் நேர்ந்த கடுந்துன்பங்களைச் சான்று காட்டி உலகோருக்குச் சன்மார்க்கம் போதிக்கின்றார் ஆசிரியர் இளங்கோ. அந்தப் போதனையில் கூறும் நெறிகள் சர்வ சமயங்களுக்கும் பொதுவானவையே யாம். ஆகவே, அதைக் கொண்டும், இளங்கோவின் சமயம் இதுவென்று சொல்வதற்கில்லை.

பொதுவாகச் சொன்னால், ஆசிரியர் இளங்கோ சமயச் சார்பற்ற உள்ளத்துடன், 'தமிழர்' என்ற இன உணர்வு ஒன்றை மட்டும் இதயத்தில் கொண்டு சிலப்பதிகாரத்தை இயற்றினார் எனலாம். சேர–சோழ–பாண்டிய நாடுகள் என மூன்றாகப் பிளவுபட்டுக்கிடந்த தமிழகத்தை, ஒன்றுபடுத்தி ஒரே நாடு என்ற உணர்ச்சியைப் போதித்தார். அரச பரம்பரைவழி பிரிந்து நின்று பிணக்கு கொண்டு போரிட்ட மூவேந்தரிடையே இன வழிப்பட்ட ஒற்றுமை உணர்ச்சியை ஏற்படுத்த, செங்குட்டுவன் வடக்கு நோக்கிப் படை எடுத்து, தமிழரைப் பழித்த ஆரிய மன்னரை வென்ற சம்பவத்தை சிலப்பதிகாரத்தில்சேர்த்தார். ஆகவே, இளங்கோவைச் சமயக் கண்ணுடன் நோக்காது இன உணர்ச்சியுடன் நோக்கி, தமிழர் வாழ வழி காட்டிய அந்த வள்ளலை வாழ்த்துவோமாக! ★

மேலட்டைச் சித்திரம் :

மேழி பிடிக்கும் வளைக்கரம்

மங்கையராகப் பிறந்திட மா தவம் செய்திட வேண்டும்— கவிமணியின் அமரவாக்குக்கு ஓர் உருவமாகத் திகழும் இந்தப் பெண் மேழி பிடிக்கிறாள். இவளைக் கைத்தலம் பற்றியவன் இக் காட்சி கண்டு அதிசயப்படுகிறானா?—இல்லை! பெண் குலத்தின் திரு உருவாக, தமிழ்ப் பண்பாட்டிற்கு நல் இலக்கணமாக விளங்கும் இவளைத் தன் அருமை மனையாட்டியாக அடைந்த பாக்கியத்தை எண்ணிப் பெருமைப் படுகிறான்!

பெ. தூரன்

பேட்டிக் கட்டுரை: **பூவை எஸ். ஆறுமுகம்**

சென்ற இரண்டு ஆண்டுகளில் 'தமிழ்க் கலைக் களஞ்சிய'த்தின் முதல் இரண்டு பகுதிகள் வெளி வந்தன. 'கலைக்களஞ்சிய' உருவாக்கத்தின் அருமை பெருமைகளைக் கண்டு இலக்கிய உலகம் அதிசயித்தது. 'கலைக் களஞ்சிய'த்தின் பிரதம ஆசிரியர் திரு ம. ப. பெரியசாமித் தூரன் அவர்களை தமிழ்ப் பற்றுக்கொண்ட அனைவரும் பாராட்டிப் புகழ்ந்தார்கள். 'கலைக் களஞ்சியம்' அத்துணை உழைப்பையும் மதிப்பையும் தன்னுள் அடக்கி வைத்திருக்கிறது. 'கலைக்களஞ்சிய'த்தின் எழுத்துக்களிலே திரு தூரனின் பெயர் பெருமையுடன், பெருமிதத்துடன் எதிரொலிக்கிறது; பிரதிபலிக்கிறது.

கோவை ராமகிருஷ்ண வித்தியாலயத்தில் தலைமை ஆசிரியராக இருந்து பணி செய்ததோடு, அவ்வப்போது கதை, கட்டுரை, கவிதை, நாடகம் முதலிய எழுத்துலகின் பல்வேறு துறைகளிலும் தொண்டாற்றி வந்த திரு தூரன் அவர்கள், பின்னர் இரண்டாவது தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் தலைமைப் பதவியையும் ஏற்றுப் பெருமைகண்டார். தமிழ் வளர்ச்சிக் கழகத்தினரின் பொறுப்பில் இருக்கும் 'தமிழ்க் கலைக் களஞ்சிய'த்தின் பிரதம ஆசிரியராக இந்நாளில் பணியாற்றும் அவருடைய சேவை தமிழின் வளர்ச்சிக்கும் தமிழரின் வளர்ச்சிக்கும் பெருமை பயப்பதாகும்.

அமரகவி பாரதியாரைப் பற்றிய பற்பல புதுக்குறிப்புகளையும், அதிசயச் செய்திகளையும் தயாரித்து, 'பாரதி தமிழ்' என்ற பெரிய நூலொன்றை வெளியிட்டிருக்கிறார். உலகமெல்லாம் பாரதியின் முழக்கம் கேட்கச் செய்த இவருடைய பணிக்கு நன்றி கூறும் அளவிலே, சென்ற ஆண்டு சென்னைத் தமிழ் எழுத்தாளர் மாநாடு இவருக்குத் தங்கப் பதக்கம் ஒன்றினைப் பரிசளித்தது.

ஆசிரியரின் மனம் ஒரு சர்வகலாசாலை மாதிரி. பல்வேறு துறைப் படிப்பு உண்டு; சிந்தனை உண்டு. திரு தூரன் இசைப்பாடல்கள் பலவற்றை இயற்றியிருக்கின்றார். இவை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினரால் இரு தொகுதிகளாகவும், வேறு வெளியீட்டகங்களிலிருந்து இரு தொகுதிகளாகவும் வெளியிடப் பெற்றுள்ளன.

பெ. தூரன்

பாரம்பரிய விளக்கம், குழந்தை உள்ள ஆராய்ச்சி, உளவியல் முதலியனவற்றில் ஆசிரியரின் கைவண்ணம் பொலிவுற்று விளங்குகிறது.

ஆசிரியர் தூரனின் சிறுகதைத் தொகுப்புகள்: 'பிள்ளை வரம்'; 'உரிமைப் பெண்'; 'தங்கச் சங்கிலி'.

இருதுருவக் கவிதை: 1.

கிரகணம் பிடித்தது!

★

ஒரு சுடரை ஒரு கை
மறைத்ததென விண்ணில்
வரு சுடரை வந்து
மறைக்க வரும் திங்கள்!

'குடுகுடென' ஓடும்
குகைப் புலியை இன்று
'விடுவிடென' வந்து
விழுங்கும் விட நாகம்!

வெடிக்க முகில் ஓடும்
வேகமிகு தேரைப்
பிடிக்க வரும்; வந்து
பிழைக்க வரும் திங்கள்;

ஒரு சிறு வெண் மலரில்
ஒரு கரு வண்டு மது
பருகிட வந்தமரும்
படமென வரும் நிழலே!

ஆடும் ஊர்வசியாக விண்ணிடை
ஆடுகின்ற நிலா மகள்!
மூடு கார்இருளூடு செந்தழல்
மூடுகின்ற கலாமகள்!

பகல் என்ற திரை கொண்டு
வந்தாள். அவள் முகம்
பார்த்திடக் கூடவில்லை.
நகலலென்ற நிழலாக
நின்றாள்; அணைந்தாள்;
நடந்த கதிர்ச் செல்வனை!

மோன நாடகங் கண்டீர்;
முகிலென்ற திரை கண்டீர்;
ஞான நாடகங் கண்டீர்;
நற்கிரஹணங் கண்டீர்;

''பிடித்தது கிரஹணப் பெண்
பேய்'' எனப் பழிக்கவேண்டாம்.
படித்தது மறந்து வீணிற்
பழித்திடு மடமை தன்னை
ஒடித்தது காதல் என்ற
ஒரு திரை! ஆழி! சுற்றி
அடித்தது! கதிர் விளக்கம்
அணைந்திட அணைந்த தன்றே!

— தமிழ் ஒளி.

கட்டுரை நூல்கள்: 'பூவின் சிரிப்பு'; 'காட்டு வழிதனிலே'; 'நமது பாரம்பரியம்'; 'குழந்தை உள்ளம்'; 'குழந்தை மனமும் அதன் மலர்ச்சியும்'; 'மனமெனும் மாயக் குரங்கு'; 'குமரப் பருவம்'; 'கருவில் வளரும் குழந்தை'.

இசைப் பாடல்கள்: 'இசைமணி மாலை'; 'கீர்த்தனை மஞ்சரி'; 'தமிழிசைப் பாடல்கள்'.

கவிதைத் தொகுப்பு; 'இளந் தமிழா!'

நாடகத் தொகுப்பு: 'மனக் குகை'; 'சூழ்ச்சி'; 'அழகு மயக்கம்'; 'பொன்னியின் தியாகம்'.

கல்கத்தாவிலிருந்து வெளியாகும் 'மாடர்ன் ரெவ்யூ' என்ற பத்திரிகையைப்போலத் தமிழில் ஒன்று வெளி வரவேண்டும் மென்பது இவருடைய கனவு.

திரு பெ. தூரன் அவர்களது தமிழ்க் கலைத் தொண்டுக்கு தமிழகம் என்றென்றும் கடமை கொண்டது.

அன்புடன் உபசரித்து, பேட்டிக்குரிய கேள்விகளுக்கு ஆர்வத்துடன் பதில் தந்த ஆசிரியர் திரு பெ. தூரன் அவர்களுக்கு 'உமா' வின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பேட்டி:

"கல்லூரிகளில் பிரதேசமொழியில் போதனு முறை நடைபெற வேண்டுமென்ற இன்றையத் திட்டத்தைப் பரிசீலிக்க நியமிக்கப் பட்டிருக்கும் குழுவில் தங்கள் பெயரும் இணைக்கப் பட்டிருக்கிறது. இத்தொடர்பில், மேற்கண்டதிட்டம் பற்றிய தங்கள் கருத்தை அறிய ஆவல்."

"நமது தமிழ் மொழியிலேயே பாடங்களைக் கற்பிக்க வேண்டுமானால், முதலில் அவற்றிற்கு வேண்டிய பாடப்புத்தகங்கள் தமிழில் உண்டாக வேண்டும். பாடப் புத்தகங்களை எழுதக் கூடிய அறிவும்

ஆற்றலும் உள்ள பல அறிஞர்கள் நம்மிடையே இருக்கிருர்கள்.

ஆனல் விஞ்ஞானப் பாடங்களை எழுதுவதற்கு வேண்டிய கலைச் சொற்கள் தமிழில் மிகுதியாக இல்லாமையால், இன்று பாடப் புத்தகங்கள் எழுதுவதற்கு இடைஞ்சலாக இருக்கிறது. ஆதலால் முதலில் கலைச் சொற்களைத் திட்டமாகத் தொகுத்துக் கொடுக்க வேண்டும். அதுவே, நாம் செய்ய வேண்டிய முதல் வேலை. இந்தத் துறையிலும் முன்பே ஓரளவிற்கு வேலை நடந்திருக்கிறது. உயர்நிலைப் பள்ளிப் பாடங்கள் தமிழில்தான் சென்ற பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் நடைபெறுகின்றன. அவற்றிற்கு வேண்டிய கலைச் சொற்களை முன்பே உருவாக்கியும் தொகுத்தும் அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கிருர்கள். அந்தச் சொற்களை அடிப்படையாகக் கொண்டு கல்லூரிப் பாடங்களுக்கு வேண்டிய சொற்களையும் திட்டம் செய்யலாம். கல்லூரிகளில் பெறும் அறிவுநிலைக்கு ஏற்றவாறு, 'கலைக் களஞ்சியம்' தயாரிப்பதில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் முனைந்திருக்கிருர்கள். அதற்காக அவர்கள் எல்லாத் துறைகளிலும் சுமார் 25,000க்கு மேற்பட்ட கலைச் சொற்களைத் தொகுத்திருக்கிருர்கள். அவற்றையும் பயன்படுத்திக் கொண்டு, இன்று ஏற்பட்டுள்ள இக்கமிட்டி வேலை செய்யுமானல், மிக விரைவிலேயே அது தனது பணியை வெற்றிகரமாகச் செய்ய முடியும். அப்பொழுது அடுத்த ஆண்டிலும் அதற்கடுத்த ஆண்டிலும் கல்லூரிகளில் தமிழிலேயே பாடங்களைத் தொடங்கவும் முடியும்.''

''பி. ஸி. ஜி ஊசி குத்தும் விஷயத்தில் திரு ராஜாஜி அவர்களின் விவாதம் குறித்துத் தாங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?''

'''பி. ஸி. ஜி.' பற்றியெல்லாம் அதிகமாகக் கவனம் செலுத்தவில்லை. ஆனல், அண்மையிலே இது பற்றி மூன்று பெரிய டாக்டர்

இருதுருவக் கவிதை : 2.

கிரகணம் விட்டது!

★

உடல் உடல் இன்பம் நாடி
'உயிர் உயிர்' என்று கூடி
விடல் விடல் உண்மை
'வென்றது' பெண்மை பெண்மை!

வென்றதோ பெண்மை? சுட்டு
விட்டதோ அணைந்த தேகம்?
கொன்றதோ காதல் என்ற
குணநலம்? குழைந்து கொஞ்சச்

சென்றதோ பெண்மை? வேறு
திசையினை நாடி! உள்ளம்
தின்றதோ கசப்பை? உண்மை
தெரிந்ததோ வெளிச்சமாக!

விட்டது துன்பம்; அங்கு
விரிந்தது சோதி வானம்.
கெட்டது கொடுமை, இன்று
கிழிந்தது சுடர்க்கையாலே!

வையத்துக் காதலே,
வானத்துச் சுடரே,
மலர் என்ற மங்கைக்கு
மணமூட்டும் அழகே!

'தைய்யத்தை' என்று கடல்
மத்தளம் கொட்ட
'தத்தித்தை' என்று நீ
சதிராட வருக!

எட்டாத மேற்குக்கும்
கிழக்குக்கும் இடையே
இடுகின்ற கோடாக
எழுகின்ற சுடரே!

சுட்டாலும் இனிக்கின்ற
சுவை கொண்ட பொருளே!
சுருதியே, பருதியே,
துரகமே வருக!

—வண்ணன்

களோடு நான் நீண்ட நேரம் பேசும்படியான வாய்ப்புக்கிடைத்தது. ஒளிவு, மறைவு இல்லாமல் அவர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்கள். அவற்றிலிருந்து எனக்கு ஒரு விஷயம் நிச்சயமாயிற்று.

நல்ல ஆரோக்கியமான சூழ்நிலையில் வாழ்ந்து வரும் ஆரோக்கியமான குழந்தைகளுக்கு பி. ஸி. ஜி குத்த வேண்டியதில்லை என்று ராஜாஜி கூறுவது முற்றிலும் உண்மை. சோதனை நிலையில் இருக்கும்படியான ஒன்றை, ஆரோக்கியமான குழந்தைகளையும் கொண்டு பரீட்சை செய்து பார்ப்பது தீமையைத் தேடிக் கொள்வதாக முடியலாம்.

க்ஷயரோகக் கிருமிகள் பரவியுள்ள சூழ்நிலையிலும், அவற்றின் தாக்குதலுக்கு உட்படக்கூடிய சூழ்நிலையிலும் வாழும் குழந்தைகளுக்கு மட்டுமே பி. ஸி. ஜி குத்துவதென்பது சரியாக இருக்கலாம்.''

''மொழி ஆராய்ச்சித் துறையில் தமிழகம் அடைந்துள்ள முன்னேற்றம் யாது?''

''இத்துறையில் கால்டுவெல் போன்ற வெளி நாட்டினரைத் தவிர, இந்நாளில் டாக்டர் மு. வ வின் ஆராய்ச்சி பயன்படும் அளவுக்கு முன்னேற்றம் கண்டிருக்கிறது. மொழி இயலைப் பற்றிய ஆராய்ச்சிவளர்வதோடு, இன்னும் இரண்டு முக்கியமான பணிகளை நாம் செய்ய வேண்டும் என்பது எனக்கு ஆசை. ஒவ்வொரு சொல்லுக்கும் அதன் தனிப்பட்ட சாயலைத் தெரிவிக்கும் வகையில் பொருள் தரும் ஒரு பேரகராதி வேண்டும். உரை நடைக்கு ஒரு புதிய நல்ல இலக்கணம் அவசியம் வேண்டும்.''

''தமிழ் வளர்ச்சி, தமிழக வரலாறு ஆகியவற்றில் இந்நாளைய நம் அரசியலும் சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் செய்து வரும் முன்னேற்றங்கள் யாவை?''

''பழய தேவாரம் முதலியவற்றிற்குள்ள பதிப்புரைகளின் மணிப்பிரவாள நடையை முழுதும் மாற்றி, நல்ல தமிழில் 'ஈடு' என்ற பெயரில் எழுதிய திருபுருஷோத்தம நாயுடுவின் நூலைச் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டது போற்றற்குரியது.

இசைப் பாடல்கள் அடங்கிய 18 தொகுதிகளை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்டமையும் சீரிய தொண்டாகும். தமிழில் விஞ்ஞான நூல்களும் அங்கிருந்து வெளியிடப் படுகின்றன.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் தீர்ப்பளிக்கும் சிறந்த நூல்களுக்குரிய பரிசுத் தொகையைச் சென்னை அரசாங்கத்தினரே கொடுக்கின்றனர். இது இலக்கிய வளர்ச்சியின் தூண்டுதலுக்கு அரசியலாரின் ஈடுபாட்டைக் குறிப்பதேயாகும். 'தமிழ்க் கலைக்களஞ்சியம்' தயாரிப்பதற்கு ஆகும் செலவில் ஒரு பகுதியையும் துரைத்தனத்தார் அளிக்கிறார்கள். ஆஸ்தான கவியை ஏற்படுத்தியதும் தமிழுக்கு அரசாங்கம் செய்த சேவையே ஆகும். தமிழை ஆட்சி மொழியாக திருச்சி மாவட்டத்தில் ஆக்கியதைப் பின்பற்றி பிற மாவட்டங்களிலும் நிலை பெற அரசாங்கம் ஆவன செய்தல் அவசியம். நம் மாகாணத்தில் தமிழ் ஆட்சி மொழியாகி, கல்லூரிகளில் தமிழில் போதனை முறை நடைபெற்று விட்டால், அது தமிழின் வெற்றியே யாகும்!''

''தமிழ் வளர்ச்சிக் கழகம் செய்த தொண்டுகள் யாவை? இன்னும் என்னென்ன செய்யலாம்? செய்யவேண்டும்?''

''தமிழ் வளர்ச்சிக் கழகத்தினரின் குறிப்பிடத்தக்க தொண்டு தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்குதல். தொகை ரூ 500 ஆக குறைந்த அளவிலிருப்பினும் தமிழில் நல்ல

முறையில் சிறந்த நூல்கள் வெளிவர வேண்டுமென்ற உயர் நோக்கை வெளிப்படுத்துகிறது இம்முறையும் ஏற்பாடும். அடுத்தது, ஆண்டுதோறும் தமிழ்விழாக் கொண்டாடி, அதில் சிறந்த நூல்களுக்குரிய பரிசுகளை வழங்குதல் ஆகும்.

'கலைக்களஞ்சியம்' தயாரிப்பது அடுத்த பெரிய வேலையாகும். இதற்குத் தேவைப்படுமெனத் திட்டமிட்டுள்ள 14 லட்சம் ரூபாயில் ஒரு பகுதியை அரசாங்கம் கொடுக்கிறது. மிகுதியை நன்கொடை மூலம் சேர்த்தாகவேண்டும். பொதுமக்கள் பலர் அன்போடு நன்கொடை அளித்தார்கள்.

ஆங்கிலத்தில் கைப்புத்தகங்களாக 'Popular Books' வருகின்றனவே, அம்மாதிரி தனித் தனிச் சிறு புத்தகங்களாகத் தமிழில் பல பகுதிகளையும் பற்றி வெளியிட வேண்டுமென்பது தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் எதிர்காலத் திட்டமாகும். மொழி வரலாறு, இலக்கிய வரலாறுகளை வெளியிடுவதும் மேற்படி திட்டங்களுள் குறிப்பிடத் தக்கது.''

''தமிழில் புது இலக்கியம் தோன்றுவதற்கு இன்றையச் சூழ்நிலைகள் எந்த அளவு சாதகமாக இருக்கின்றன? அது வகையில் தாங்கள் கூறும் அறிவுரைகள் யாவை?''

''சூழ்நிலை ஒருபுறம் இருக்கட்டும். தனக்கேற்ற சூழ்நிலையை ஆக்கிக் கொள்ளும் வன்மை எழுத்தாளனுக்கு இருக்கவேண்டும். சூழ்நிலையை எதிர்த்துத் தீரமாகப் போரிடும் ஆற்றலும் வேண்டும். சுதந்தா இயக்கத்திற்குப் போரிடும் உணர்ச்சி பொங்கி நின்ற சூழ்நிலையிலே பாரதியார் தோன்றினர். புதிய பாரத சமுதாயத்தை உருவாக்கும் சந்தர்ப்பமும் ஆவலும் நிறைந்த சூழ்நிலையில் இன்று நாம் இருக்கிறோம். புதிய பாரதத்தை உருவாக்க நமது எழுத்துக் கலை பயன்பெற்ருல், அது நமக்குச் சிறந்த பாக்கியமல்லவா? மேலும் இன்று கல்லூரிகளிலும் நமது மொழியிலேயே பாடங்களைக் கற்பிக்க முயற்சி நடைபெற்று வருவதால், விஞ்ஞானக் கருத்துக்களையெல்லாம் தமிழிலே கொண்டுவர நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த வாய்ப்பை எழுத்தாளர்கள் பயன்படுத்திக் கொண்டால், தமிழுக்குச் சிறந்த சேவை செய்யமுடியும். எல்லாவிதமான கலைச் செல்வங்களையும் தமிழில் கொண்டு வந்து சேர்க்கவும் முடியும்.''

''நாட்டுப் பாடல்களில்தான் ஒரு நாட்டின் உயிர்நாடியைக் காண முடியும் என்ற கருத்து சரியா? அது பற்றித் தங்கள் கருத்து என்ன? தமிழக நாட்டுப் பாடல்களுக்கும் பிற இந்திய மொழி நாட்டுப் பாடல்களுக்கும் இடையே பொதுத் தொடர்புகள் காணப்படுகின்றனவா?''

''ஒரு நாட்டின் பண்பாட்டையும், உயிர் நாடியையும் வெளிப்படுத்தும் சாதனங்களில் இலக்கியமும் ஒன்று. நாட்டுப் பாடலில் மட்டும் தான் ஒரு நாட்டின் உயிர் நாடியைக் காண முடியும் என்பது சரியல்ல. எளிமையான வாழ்க்கையை உடைய மக்களின், சிறப்பாக நாட்டுப்புற மக்களின் உள்ளத் துடிப்பையும், ஆசைகளையும், எண்ணங்களையும் நாட்டுப் பாடல்கள் நன்கு காட்டும். அவர்கள் தமிழர்களாக இருந்தாலும் சரி, அல்லது வேற்று நாட்டினராக இருந்தாலும் சரி, அவர்களுடைய உணர்ச்சிகள், ஆசைகள் பெரும்பாலும் அடிப்படையில் ஒரே மாதிரியாக இருப்பதை நாம் நாட்டுப் பாடல்களின் மூலம் அறியலாம். ஆந்திர நாட்டு பாடல்கள், வங்காளிநாட்டு பாடல்கள் சிலவற்றின் மொழி பெயர்ப்புக்களை நான் ஆங்கிலத்தில் படித்தேன். அவற்றில் பொதிந்துள்ள கருத்துக்கள் நம் நாட்டின் நாட்டுப் பாடல்கள் பலவற்றில் உள்ளவை போலவே இருந்தன.'' ★

ஆங்கிலப் பெயர்களை மாற்றுக!

ஜி. உமாபதி

சிறப்புடன் நடைபெற்ற சிதம்பரம் தமிழரசுக் கழக மாநாட்டுக்குப் போய் திரும்பியபோது, அங்கிருந்து ஒரு நண்பர் என்னுடன் வந்தார். "சென்னை பூராவையும் நான் சுற்றிப்பார்த்ததில்லை. தமிழ் நாட்டின் தலை நகரின் அழகைப் பூராவும் பார்த்து அனுபவிக்க வேண்டும். எனக்குத் துணையாக நீங்கள் வரவேண்டும்" என்று என்னை அழைத்தார். நீண்ட வீதிகளை எல்லாம் அவர் பெருமையுடன் பார்த்து வந்த அந்நேரத்தில், "இந்த வீதிகளின் பெயரென்ன?" என்று என்னிடம் கேட்டார். அவர் கேட்ட நீண்ட வீதிகளின் பெயரை ஆங்கிலப் பெயராகவே நான் சொல்லி வந்தேன். நான் சொல்லியதை அவரால் நம்பவே முடியவில்லை. வேண்டுமென்றுதான் இப்படிச் சொல்லுகிறேனென்று அவர் திகைத்தார். பிறகு ஒவ்வொரு வீதியின் முனையிலும் பொறிக்கப்பட்ட ஆங்கிலப் பெயர்களைக் காட்டினேன். நண்பர் ஆச்சரியத்தினல் வாயடைத்துப் போனர்.

"தமிழ் நாட்டின் தலை நகரிலா இத்தனை ஆங்கிலப் பெயர்கள்? விடுதலை அடைந்து எட்டாண்டுகளுக்குப் பிறகுங் கூடவா நம் தேசத்தின் தியாகிகளின் பெயர்கள் நம் அரசாங்கத்திற்கு ஞாபகம் வரவில்லை? என்று அந்த நாள் வரும்?" என்று ஏக்கத்துடன் கூறினர்.

வீதிகளுக்குத் தியாகிகளின் பெயர் வைத்துத்தான் அவர்களுக்குப் பெருமை காட்ட வேண்டுமோ என்று பெருமை படைத்த மேதாவிகள் சிலர் கூறலாம். இப்படிக் கூறுபவர்களின் பெயர்களெல்லாம் வீதிகளிலே பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஏன் தெரியுமா? படித்துப் பட்டம் பெற்று, ஒரு குறிப்பிட்ட துறையிலே சிறப்புற்று விளங்கும் காரணத்தால். இவர்கள் தம் சொந்த வாழ்க்கையின் உயர்வுக்காக உழைத்தவர்கள். ஆனல், நாம் சொல்லும் தியாகிகளின் பெயர்களை வீதிகளிலே பொறித்தால், வருங்காலச் சந்ததிகளுக்கு இந்தப் பெயர்களையெல்லாம் படிக்கும்போது, நாட்டின் சுதந்தரத்திற்காக அவர்கள் எப்படி உழைத்து உருவாக்கினர்கள் என்ற ஒவ்வொருவரின் சரித்திரமும் நினைவில் வரும். அடைந்த சுதந்திரத்தை எப்படிக் காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சி அவர்களுக்கு ஏற்படுமல்லவா?

ஒரு நீண்ட சாலைக்கோ அல்லது வீதிக்கோ 'வீரபாண்டியன் கட்டபொம்மன் வீதி' என்று இருந்தால், கட்டபொம்மன் இந்நாட்டிற்குச் செய்த சேவை என்ன, ஏன் இவர் பெயரைப் பொறித்திருக்கிருர்கள் என்றெண்ணும் போது, அது சொல்லும், "இவர்தான் முதல் சுதந்திரப் போராட்டத்தைத் துவக்கிய தலைமகன்; இவர் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடி, தன் நாட்டை இழந்து, ஆங்கிலேயர்களால் கயத்தாற்றிலே தூக்கில் இடப்பட்டுச் சாகடிக்கப்பட்டவர்" என்ற கதையை.

'வ. உ. சிதம்பரனர் வீதி' என்ருல், "ஆங்கிலேயருக்குப் போட்டியாக இவர் கப்பல் ஓட்டினர்; இரண்டு தடவை ஜன்மாந்தரக் கைதியாகி, சிறைச்சாலையில் செக்கிழுத்துக் கல் உடைத்தார். அது மட்டமல்ல; வழக்கறிஞராக, கலைஞனக வாழ்ந்து கையிலிருந்த பொருளையெல்லாம் நாட்டிற்காக அழித்துத் தன் கடைசிக் காலத்தில் வறுமையிலே வாடி மண்டாடு போனர்—இது தான் அவருக்கு

நாடு தந்த பரிசு'' என்பதையும்; 'திருப்பூர் குமரன் வீதி' யென்றால் ''தன் அன்பு மனைவி மக்களை விட்டு தேசியக் கொடியைத் தாங்கி வீதியில் வலம் வந்த போது, கடந்த காலப் போலீஸ் கயவர்களால் தலையில் ஓங்கியடித்து மூளை சிதறடிக்கப்பட்டு உயிர் போகும்வரை தாயின் மணிக்கொடியை விடாது காத்து, உயிர் விட்டவர்'' என்ற வரலாற்றினையும் அறிய முடியும். பகவத் சிங், சுகதேவ், ராஜகுரு போன்ற வீரர்களின் பெயர்கள் என்றால், இந்த மாவீரர்களைச் சிறையிலே அடைத்துத் தூக்கிலிட்டுச் சாம்பலாக்கினார்கள் என்பதும்–பாபுகான் வீதி என்றால் அந்நியத் துணிப் பகிஷ்காரத்தில் லாரியின் கீழ் படுத்து நசுங்குண்டு உயிர் விட்டார் என்ற சுருக்கமும் தெரியவரும். சந்திரசேகர் ஆஸாத் என்ற பெருவீரன் பெயரில் ஒரு தெரு இருந்தால், எத்தனையோ புரட்சி வீரர்களை உருவாக்கிக் கடைசியில் ஆங்கிலப் போலீஸாருடன் சண்டையிட்டு உடலெல்லாம் குண்டுகள் பாய்ந்து உயிர் போக்கிய செய்தி தெரியவரும்.

உதாரணத்துக்காக நாடு அறிந்த ஒரு சிலரைத் தான் இங்கு குறிப்பிடுகிறோம். இன்னும் எத்தனையோ தியாகிகள் தேசத்திற்காகச் சொத்து சுகமெல்லாம் இழந்து மக்கள் நடக்கும் பாதை ஓரத்திலே படுத்துறங்கி மண்ணிலே மறைந்துபோனார்கள்.

பெண்குலத்தின் பெருமை தழைக்க, தாய்மார்களில் எத்தனையோ பேர் தன் கணவனை இழந்து, அன்பு மக்களை இழந்து, நாட்டின் விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தியாகத் தீயில் குதித்த வரலாற்றை கற்பரசிகளான நளாயினி, அருந்ததி, கண்ணகி, சாவித்திரி போன்றாரைப் போற்றும் இந்நாடு மறக்க முடியுமா?

இன்று ஆட்சி புரியும் காங்கிரஸ் மகாசபையின் அறுபதாண்டுச் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால், அது கூறுமே தமிழ் நாட்டுத் தியாகிகளின் எண்ணிக்கையை–அந்நிய நாட்டிலே அன்று நேதாஜி துவக்கிய போர்ப்படையில் தன் கைப்பொருள்களனைத்தையும் ஈந்து தன்ரத்தத்தையெடுத்து அதில் தன் உறுதிக் கையெழுத்துப் போட்டுப் படையில் சேர்ந்த தியாக சீலர்களின் எண்ணிக்கையை!

உலக உத்தமர் மகாத்மாகாந்தி அடிகள் தமிழகத்தின் தனிச் சிறப்பைப் பலமுறை போற்றிப் புகழ்ந்திருக்கிறார். இந்தத் தமிழ் நாடுதான் இன்று பிற மாகாணங்களைக் காட்டிலும் தாழ்ந்திருக்கின்றது. ஏன் தெரியுமா? தமிழன் தமிழனாக வாழாத காரணத்தினால் தான்! தேசியத் தமிழ் மாணவனே! திராவிடன் என்று கூறிக் கொள்ளும் செந்தமிழ்ச் செல்வனே! ஆங்கிலேயனின் பெயர்களைப் பொறித்த வீதிகளின் பட்டியலைக் கீழே தருகின்றேன் —படித்துப் பார்!

கிராஸ் ரோடு, மாகஸீன் ரோடு, நார்த்வால் ரோடு, வால்டாக்ஸ் ரோடு, ஸ்பிரிங் ஹெவன் ரோடு, ஸ்டீபன்ஸ் ரோடு, பாரன்ஸ் ரோடு, கூக்ஸ் ரோடு, ஸ்டாஹான்ஸ் ரோடு, பிஸ்ஸட் ரோடு, பிப்ஸ் ரோடு, டங்கன் ரோடு, மோர்ஸ் ரோடு, போர்டுயஸ் ரோடு, ப்ரூக்லாண்ட்ஸ் ரோடு, சாம்சன் ரோடு, பாம்போர்ட் ரோடு, மார்ஸ் ரோடு, பர்ட்டன் ரோடு, கிளிமன்ஸ் ரோடு, நித்தர்டன் ரோடு, லெட்டாங்க்ஸ் ரோடு, ஜெனரல் காலின்ஸ் ரோடு, ப்ரித்தாபட் ரோடு, ஸ்டிரிங்கர்ஸ் ரோடு, ஸ்டிபன்ஸன் ரோடு, பார்ன்ஸ் ரோடு, ஸ்டாரஹன்ஸ் ரோடு, பிரிக்வில் ரோடு, ரண்டால்மஸ் ரோடு, மாக் நிக்கல்ஸ் ரோடு, ஸ்டர்லிங் ரோடு, கோட்ஸ் ரோடு, உட்ஸ் ரோடு, ஒயிட்ஸ் ரோடு, ஸ்மித் ரோடு, ரேபிரோ ரோடு, மவுண்ட் ரோடு, கிநேடரப் ரோடு, போக் ரோடு, மாட்லி ரோடு, பர்க்கிட் ரோடு, லாக் ரோடு, பிராடிஸ் ரோடு, கிரன்வேல்ஸ் ரோடு, பிரைட்டன்ஸ் ரோடு, காண்ட்ஸ்

ரோடு, டிமெல்லோஸ் ரோடு, சத்ரன்ஸ் ரோடு, பிஸ்கிங்டன் ரோடு, ப்ரூக் ரோடு, யிஷர் ரோடு, ஆல்மஸ் ரோடு, மில்லர்ஸ் ரோடு, ஆம்ஸ் ரோடு, ஆர்லிஸ் ரோடு, கெல்லீஸ் ரோடு, லேன்டர்ஸ் ரோடு, டாம்ஸ் ரோடு, ரிட்ச்சி ரோடு, ஹலர்ஸ் ரோடு, பாந்தியன் ரோடு, மார்ஷல்ஸ் ரோடு, மாண்டீத் ரோடு, ஹால்ஸ் ரோடு, பீட்டர்ஸ் ரோடு, எல்லீஸ் ரோடு, எலியட்ஸ் ரோடு, பெல்ஸ் ரோடு, பைக்ராப்ட்ஸ் ரோடு, மாய்ட்ஸ் ரோடு, ஸென்தோம் ஹைரோடு, நிம்மோ ரோடு, ஆடம் ரோடு, மௌபரீஸ் ரோடு.

இந்தப் பெயர்களை யெல்லாம் திடீரென்று மாற்றினல், தபால் தந்திகள் பெறுவதற்குத் தாமதம் ஏற்படும் என்று சிலர் எண்ணலாம். 'பாங்க்விட்டிங் ஹால்' என்பதை இன்று 'ராஜாஜி ஹால்' என்று மாற்றி விடவில்லையா? 'சைனு பஜார்' என்றிருந்தது இன்று 'நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு' என்று மாற்றியமைக்கப் படவில்லையா? இந்த வீதியில் தானே பெரிய பெரிய வியாபாரிகள் கூடியிருக்கிருர்கள்? அவர்களுக்கெல்லாம் இந்த பெயர் மாற்றத்தினுல் தபால் தந்திப் போக்கு வரத்து தடைப்படவோ, அல்லது வியாபாரம் தடைப்படவோ இல்லையே.....!

ஆங்கிலேயர்களின் பெயர்கள் சூட்டப் பட்டிருக்கும் தெருக்களின் பெயர்களைப் படிப்படியாக அழித்து, அவற்றிற்கு உத்தமத் தியாகிகளின் பெயர்களைப் பொறிக்க வேண்டுவது நம் அரசாங்கத்தின் தலையாய கடமையாகும். 'நாம் இன்று அமர்ந்திருக்கும் காங்கிரஸ் அரியாசனம் அன்று அந்தத் தியாகிகளின் தியாகத்தின் விளைவாக அமைக்கப்பட்டதேயல்லவா?' என்ற இன்ப நினைவு ஒன்று, சம்பந்தப்பட்டவர்களுக்கு ஞாபகமிருந்தால் போதும், இப்பணி கட்டாயம் வெற்றியடைந்துவிடும் என்பதில் சந்தேகமேயில்லை! ★

உமா

அடுத்த இதழில்:

பேட்டி:
ரா. பி. சேதுப்பிள்ளை

*

'தம்பிக்கு':
ஜி. உமாபதி

*

புதிய தொடர்கதை:
'ரங்கூன் கமலம்'
எல்லார்வி

*

புதிய சிறுவர் தொடர்கதை:
'கோஹினூர்'
பாலா

*

என் முதல் கதை:
அகிலன்

*

பசுமை நினைவுகள்:
டாக்டர் ஏ. சிதம்பரநாதன் செட்டியார்

*

இலக்கியப் பகுதி:
ந. சஞ்சீவி

*

சிறு கதைகள்:
வேம்பு
ரதி
கே. ஆர். கௌசல்யா
நா. ஜகந்நாதன்
பூவை எஸ். ஆறுமுகம்

*

இரு துருவக் கவிதை:
வி. துரைசாமி; துறைவன்

ரங்கூன் கமலம்
எல்லார்வி
எழுதும்
தொடர் கதை
செப்டம்பரில் ஆரம்பம்
-I. MALI-

எங்கள் இதயங்கள் பேசுகின்றன

....புத்தம் புதிய பல பகுதிகள் ஆவலையும் மகிழ்ச்சியையும் தூண்டும் வகையில் அமைந்து, இந்த ஜூலை இதழ் ஒரு தனிச் சிறப்புடன் விளங்குகிறதென்பதில் சந்தேகமில்லை.

கே. ஆர். கௌசல்யா,
சென்னை-5.

*

....இந்த இதழில் சிறந்த பல மாறுதல்களைக் கண்டு, ரசித்துப் படித்து மகிழ்ச்சி அடைந்தேன். பேட்டிக் கட்டுரை தொடர்ந்து வர வேற்கப்படவேண்டிய பகுதி. நண்பர் 'பூவை' எழுதிய 'முதல் பூ'வின் எழுத்தில் புது மெருகு ஏறி இருக்கிறது. எல்லாவற்றிற்கும் சிகரமாக விளங்குகிறது அச்சக வேலையின் நேர்த்தி.

ஓவியர் உமாபதி,
தஞ்சை.

*

....ஜூலை இதழ் ஓர் இலக்கியப் பேழை. பேட்டிக் கட்டுரை, முதல் கதை, பசுமை நினைவுகள், இரு துருவக் கவிதை முதலியன சிறப்புற்றிருக்கின்றன. தலையங்கத்தில் ஏ. எல். முதலியாரைப் பற்றிப் பட்டவர்த்தனமாகக் கூறியிருப்பதைப் பாராட்டாமலிருக்க முடியாது. பக்கத்துக்குப் பக்கம் திகட்டாத விருந்தளிக்கின்றாள் 'உமா'.

சி. கே. ராதாகிருஷ்ணன்,
சென்னை-1.

*

....தி. ஜ. ர. பேட்டியை ரசித்தேன். பி. வி. ஆர், 'பூவை' எழுதிய கதைகள் எனக்குப் பிடித்திருந்தன.

எம். கோபால்ரத்னம்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை-10.

*

....தங்கள் 'உமா' சஞ்சிகை 'கலை மகள்' போலவே சலியாது தொண்டு செய்து, தமிழுலகில் நற்பெயரையும் புகழையும் வெற்றியையும் எய்தும் என்பதற்கு இந்த ஜூலை இதழ் ஓர் அடையாளம்.

மு. சோமசுந்தரன்,
பூவைமாநகர்.

*

....'உமா' தரித்து வந்த 'ஔவை வழி நேரு' வெகு அழகாக அமைந்திருக்கிறது.

வி. வசந்தா,
அயனாவரம்.

*

.... கண்ணிற்கும் கருத்திற்கும் விருந்தென அமைகிறது ஜூலை இதழ் மேலட்டை ஓவியம். போற்றத் தக்க மாறுதல்களுடன் விஷயங்கள் அடங்கியிருப்பது 'உமா'வின் முன்னேற்றத்தை நன்கு எடுத்துக் கூறுகிறது.

புனர்வசு,
சென்னை-1.

*

.... 'பூவை 'யின் 'முதல் பூ'வில் தென்றல் வீசுகிறது. இரு துருவக் கவிதை வரிசை இனிய விருந்து.

எச். வைத்தியநாதன்,
மாயவரம்.

*

'சுட்ட வினை',' பசுமை நினைவுகள்', 'முதல் பூ', தி. ஜ. ர. பேட்டி முதலியன என் மனத்தை விட்டு அகலவில்லை. 'செல்லப் பிள்ளை' பட விமரிசனம் மிக நன்றாக அமைந்து இருக்கிறது.

பி. ஆதிமூலம்,
சென்னை-5.

உங்களுக்கு எங்கள் நன்றி

பாப்பா உமா:

ராம்-ரஹீம்

தங்கமணி

திகிலென்றது, ராமுவுக்கு: "என்ன, ரஹீமைக் காண வில்லையா?"

2

ராமுவின் அப்பாவும், ரஹீமின் அப்பாவும் பால்யத் தோழர்கள். ஆரம்பப் பள்ளியிலிருந்து கலைக் கூடப் படிப்புவரை ஒன்ருகப் படித்துப் பட்டம் பெற்று, பதவி பெற்று, பவிசு பெற்று வாழ்க்கையும் பெற்று, இணை பிரியாமல் வாழ்ந்த ஈடில்லாத் தோழர்கள். மனிதர்களுள் வேற்றுமை காட்டும் மதம், மொழி இவைகளால் களங்கப்படாத கண்ணியமான, தூய்மையான ஆருயிர்த் தோழர்கள்.

ஒரு சமயம், திடீரென்று ஊரைச் சூறையிட்ட வைசூரி நோயினுல் ரஹீமின் அப்பாவின் சிறிய குடும்பம் சிதைந்தது. தான் கண்ணை மூடுவதற்குமுன் தன் அருமை மகன் ரஹீமைத் தன் ஆருயிர் நண்பரான ராமுவின் அப்பாவிடம் ஒப்படைத்துவிட்டுப் போய்விட்டார் ரஹீமின் தந்தை. அப்போது ராமுவை விட ரஹீம் ஒரு வயது இளையவன்– அதாவது மூன்று வயதுக் குழந்தை. அந்தக் குழந்தைப் பருவத்திலிருந்து ராமுவும், ரஹீமும் அண்ணனும் தம்பியுமாக, அருமையும் அன்புமாக வளர்ந்து வந்தார்கள்.

காலம் வளர்ந்தது. அவர்களும் வளர்ந்தார்கள். அவர்களின் மனப் பண்பும் வெவ்வேறு விதமாக வளர்ந்தது.

சுமார் பனிரெண்டு ஆண்டுகளுக்குப் பின், ராமு பத்தாம் வகுப்பிலும், ரஹீம் எட்டாம் வகுப்பிலும் படித்து வந்தார்கள். ராமு, ஒழுக்கம், உயர்ந்த எண்ணம் இவைகளுடன் விளங்கினுன்.

ரஹீம், பகட்டு, படாடோபம் இவைகளில் மூழ்கிக் கிடந்தான். ஒரே வீட்டில் ஒரே விதமான கண்காணிப்பில் வளர்ந்து வரும் இரு பிள்ளைகளிடையே ஏன் இந்த வித்தியாசம்....?

கத்தி இரும்பால் செய்யப்பட்டதுதான். 'வெட்டுவது' என்ற ஒரே நோக்கத்தைக் கொண்டதுதான். ஆனுல், அதைக் கையாள்பவன் சமையல்காரனுயிருந்தால் கத்தரிக்காய் நறுக்கவும், கள்ளனுயிருந்தால் கழுத்தை அறுக்கவும் பயன் படுத்துகிருன். அதுபோல, ராம்-ரஹீம் இருவரின் ஏற்றத் தாழ்வுள்ள பண்புகளுக்கு, கத்தியைப் போன்ற உள்ளம்தான் காரணம் எனலாம் அல்லவா....?

ரஹீம் யாருக்கும் அஞ்ச மாட்டான்; எதற்கும் விட்டுக்கொடுக்க மாட்டான். ஓட்டல், சினிமா, டிராமா என்று தினந் தினமும் ஊதாரித்தனமாகச் செலவழிப்பான். காசு கிடைக்கவில்லையென்ருல் கடன் வாங்குவான். கடனைத் திருப்பிக் கேட்டால் கையை நீட்டுவான்!

இதையெல்லாம் அறிந்த ராமுவின் அப்பா மிகவும் வருத்தமடைந்தார். ஆசைக்கு அடிமையாகி அறிவுகெட்டதனமாக நடந்து கொள்ளும் ரஹீமைத் திருத்த அவர் எடுத்துக்கொண்ட பாடு கொஞ்சநஞ்சமல்ல.

ஆனுல், பலன் பூஜ்யம்தான்!

தீமை என்னும் தீக்குழியில் விழுந்து சீரழியும் ரஹீமைத் திருத்த ராமு தீவிரமாக ஈடுபட்டான். அதட்டினுன். மிரட்டினுன். உருட்டினுன். "இனிமேல் ரஹீமுக்கு ஒரு சல்லிக்காசும் கொடுக்க வேண்டாம்" என்று அப்பாவிடம் 'தடை உத்தரவு' போட்டான். "இனிமேல் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டிற்கு வந்ததும்

வெளியே எங்கேயும் போகக் கூடாது'' என்று ரஹீமுக்குச் சட்டம் போட்டான். சட்ட திட்டங்களை மீறி நடந்த ஒருசில சமயங்களில் அடிக்கவும் அடித்தான்!

ஆனால், அன்பும் அக்கறையும், வருத்தமும் வாஞ்சையும் கொண்ட ராமுவின் இந்தத் திடீர் அடக்கு முறைகள் ரஹீமின் நெஞ்சில் கீழ்த் தரமான எண்ணங்களை உருவாக்கின. 'எனக்குச் சட்டம் போட இவன் யார்?' என்று உறுமினான். 'உப்பைத் தின்றவன் தண்ணீர் குடிக்கிறான். இவனுக்கென்ன வந்தது?' என்று குமுறினான். 'என்னயிருந்தாலும் நான் அனாதை தானே? அன்னியன் தானே? கதியற்றவன்தானே? இந்த நினைப்பில் தான் இவன் இவ்வளவு அட்டகாசம் பண்ணுகிறான். இவனுடைய ஹிட்லர் தர்பாருக்கு இணங்கிப் போக நான் என்ன மானங் கெட்டவனா? ரோஷமற்றவனா? என் உடலில் ஓடுவது சாக்கடை நீரல்ல; ரத்தம்!....' என்று சீறினான். 'அடக்கு முறைச்சட்டம் தாண்டவமாடும் இந்த

இழவு வீட்டில் இனிஒரு கணமும் இருக்கமாட்டேன்'' என்று கொந்தளித்தான்.

பிறகு, ரஹீம் ஓடிப்போய் விட்டான்!

3

மதுரைக்கு வந்து நான்கு நாட்கள் ஓடிவிட்டன. வேலை கிடைக்கவில்லை. வேதனையைச் சகிக்க முடியவில்லை. சுடுமணலில் சிக்கிய புழுவைப் போலத் தத்தளித்தான். தவித்தான். பாவம், ரஹீமுக்கு அழுது அழுது கண்ணெல்லாம் வீங்கிப் போயிற்று. கொடுந் துயரமும், கடும் பசியும் உயிரையும் உடலையும் மயக்கியடித்தன. பேசாமல் கோயில் குளத்தின் படிக்கட்டின் மீது ரஹீம் சுருண்டு படுத்தான்.

4

"தம்பி, ரஹீம்!...''

அன்பும் ஆவலும் ததும்பி வழியும் இந்தத் திடீர்க் குரலைக் கேட்டதும், ரஹீம் திடுக்கிட்டான். துள்ளினான், துடித்தான், எழுந்தான், உட்கார்ந்தான், திரும்பினான். அருகில்

அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக நின்றுகொண்டிருந்தவன்—ஆம்; ரஹீமின் அன்பு அண்ணன் ராமுவேதான்!

ரஹீம் பிரமித்துப் போனான். கண்ணீர் வடித்து நிற்கும் ராமுவை இமையசையாமல் பார்த்தபடி கல்லாய்ச் சமைந்து நின்றான். அவன் மனக்கண் முன்னால் ராமுவின் நேசமும் பாசமும் தவழ்ந்த அதட்டல், உருட்டல், மிரட்டல் எல்லாம் ராட்சத உருவத்தில் காட்சியளித்தன. ரஹீமின் உள்ளம் குமுறியது; கொந்தளித்தது. பாசமே உருவாக நிற்கும் ராமுவை ஏறிட்டு வெறித்து நோக்கினான்.

''யார் நீ?'' என்று ஒன்றும் தெரியாதவனைப் போலக் கர்ஜித்துக் கேட்டான்.

ரஹீமின் இந்த முரட்டுத்தனமான கேள்வியைக் கேட்டதும் ராமுவுக்குத் தூக்கிவாரிப் போட்டது!

''தம்பி ரஹீம், என்னடா இப்படிக் கேட்கிறாய்? என்னைத் தெரியவில்லையா? நான்தாண்டா உன் அண்ணன் ராமு. தம்பி, தம்பி!.... உன் உடம்புக்கு ஏதாவது...'' என்று தேம்பி அழ ஆரம்பித்தான்.

'உன் அண்ணன் ராமு' என்ற சொல்லைக் கேட்டதும் ரஹீமுக்கு ஆத்திரம் சீறிக்கொண்டு வந்தது. கோபம் பீறிட்டுக்கொண்டு வந்தது:

''நீயா என் அண்ணன்....? உம் என்றால் உதையும், அம் என்றால் அடியும் கொடுத்து ஓர் அடிமையைப்போல் என்னை அநியாயமாக வாட்டி வதக்கிய நீயா என் அண்ணன்...? அண்டிப் பிழைக்கும் அனாதைதானே என்றெண்ணிக் கொண்டு என்னை அக்கிரமமாக ஆட்டி அலைக்கழித்த நீயா என் அண்ணன்....? வேளைக்கொரு சட்டம் போட்டு என்னை வேதனைக்குள்ளாக்கி, நாளைக்கொரு கட்டளையிட்டு என்னை நடைப்பிணமாக்கி

போட்டி அரங்கம்

★

நேருஜியின் ரஷ்யப் பயணத்தில் நடந்த அதிசயங்கள் என்னென்ன?

பரிசு: வழக்கம்போல்.

முடிவு தேதி: ஆகஸ்ட், 22.

*

சென்ற ஜூலை 'உமா' போட்டி அரங்கத்திற்குச் சரியான விடைகள்:

கணக்கு

முதல் கூடையில் இருந்த மாம் பழங்கள் 7. இரண்டாவது கூடையில் இருந்த மாம்பழங்கள் 5.

விடுகதைகள்

1. பலாப்பழம். 2. இலந்தைப் பழம். 3. வடை.

ஏழு அதிசயங்கள்

ராமசந்திரன், மதி, ராசன், ரதி, மந்தி, சதி, மந்திரராசன்.

எல்லாவற்றுக்கும் சரியான விடைகள் அனுப்பிய கிழ்க்கண்ட அன்புத் தம்பி தங்கைகளுக்கு 'உமா' இதழ் ஆறு மாதங்களுக்குத் தொடர்ந்து அனுப்பப்படும்.

டி. சுப்பிரமணியம், சென்னை-1.
எஸ். சரோஜினி, அறந்தாங்கி.
சி. கணேசன், திண்டிவனம்.
எம். பூபாலன், புதுக்கோட்டை.
எஸ். கே. நாராயணசாமி, சென்னை-11.
ஜி. சாரதா, மதுரை.
ஏ. விரசிங், தட்டப்பாரை.
ஆர். பாலசந்திரன், சென்னை-1.
கே. சுப்பையா, கோயம்புத்தூர்.

இம்சித்த கொடுங்கோலனை நீயாடா என் அண்ணன்...?''

''தம்பி, ரஹீம்! நானு உனக்கு அநியாயம் செய்தேன்....? புரிந்து கொள்ளாமல் பேசுகிருயேடா, தம்பி. கெட்டுப் போகிருயே என்று உன்னைக் கட்டுப்படுத்தினேன். இது அநியாயமா, அக்கிரமமா? தம்பி, ரஹீம் நன்ருகச் சிந்தித்துப் பாரடா! நானு உனக்குத் தீங்கு செய்வேன்? அன்று, ஓடும் பஸ்ஸிலிருந்து கீழே குதித்துக் காயமடைந்து சாகப் பிழைக்கக் கிடந்தாய். அப்போது என் ரத்தத்தைக் கொடுத்து உன்னைக் காப்பாற்றிய நானு உனக்கு அக்கிரமம் செய்வேன்? கடலில் குளிக்கும்போது சுழலில் சிக்கித் தவித்த போது, தன்னந்தனியனுக வந்து உன் உயிரை மீட்டேனே—அப்படிப்பட்ட நானு உனக்கு அக்கிரமம் செய்வேன்....? நாம் மட்டும் பத்தாம் வகுப்பிலும், நம் தம்பி எட்டாம் வகுப்பிலும் படிக்கிருனே என்பதற்காக, ஒரு வருஷம் வேண்டுமென்றே பரீட்சையில் தேருமலிருந்துவிட்ட நானு உனக்குக் கொடுமை செய்வேன்....? ரஹீம், வேற்றுமை சொல்லி என் நெஞ்சை வேக வைக்காதேடா. தம்பி, தம்பி, தம்பி....'' என்று முகத்தைப் பொத்திக் கொண்டு கதறினுன் ராமு.

5

அச்சமயம்—

''அடேய், தம்பீ தம்பீ....'' என்று, படிக்கட்டில் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்த ரஹீமை ஒரு பண்டாரக் குடுக்கை உலுப்பி எழுப்பினுன்.

ரஹீம் திடுக்கிட்டு எழுந்தான். கண்களைத் துடைத்துக் கொண்டு பரபரப்புடன் அருகில் பார்த்தான். ராமுவைக் காணும்!

கண்ட கனவை நினைவுக்கு இழுத்துக்கொண்டே ரஹீம் நடந்தான். ராமுவின் தியாகச் செயல்கள் அணிவகுத்துப் புறப்பட்டன அவன் நெஞ்சரங்கில்.

இவற்றையெல்லாம் நன்கு நினைவு படுத்திக்கொண்ட ரஹீமின் உள்ளம் குழம்பியது. 'இத்தகைய உயிரன்பு வைத்திருக்கும் ராமு, உனக்குக் கனவிலும் தீங்கு கருதவும் மாட்டானே. அவனின் தூய்மையான அன்பையும், தும்பைப் பூ உள்ளத்தையும் அறியாமல், அவன் அநியாயம் செய்தான், அக்கிரமம் செய்தான் என்று முட்டாள்தனமாக எண்ணி விட்டாயேடா, 'மடையா' என்று அவன் உள்மனம் சீறியது. 'ஆமாம், அது சரிதான். இவ்வளவு பாசம் வைத்திருப்பவன் எனக்கு எதற்காகத் தீமை செய்யப் போகிறான்? நான் தான் அவனின் அன்பை உணர்ந்து கொள்ளாமல் ஏடாகூடமாக ஏதேதோ எண்ணி விட்டேன். அது தப்புத்தான்! தம்பி தப்பிதம் பண்ணுகிறான என்றால், அவனை அதட்டி மிரட்டி, அடித்து உதைத்துத் திருத்த அண்ணனுக்கு உரிமை கிடையாதா, என்ன!' என்று எண்ணிப் புழுங்கினான் ரஹீம்.

6

ஆனால், மறுகணம் நடந்தது...?

''தம்பி, ரஹீம்!....''

அன்புத் துடிப்பும் ஆவல் பதைபதைப்பும் நிறைந்த இக்குரலைக் கேட்டதும், ரஹீம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். கலைந்த தலை; கண்ணீர் ததும்பும் கண்கள்; ஒட்டிய கன்னங்கள்; அழுக்குப் பிடித்த சட்டை-இக்கோலத்துடன் அருகில் நின்றிருந்தவன் — ஆம், ராமுவேதான்! மூன்று நாட்களாக தம்பியைத் தேடித் தேடி ஊர் ஊராக அலைந்து திரியும் அன்புள்ள அண்ணன் ராமுவேதான்!

உடனே—

''அண்ணா...'' என்று தாவிப் பாய்ந்து, ராமுவின் செம்மண் புழுதி படிந்து வீங்கிப்போயிருந்த கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறிக் கதறி அழுதான் ரஹீம்.

மகாத்மா காந்தியும், முகமது நபியும் ஒருவரை யொருவர் பார்த்துப் பூரிப்புடன் புன்னகை புரிந்து கொண்டிருந்தார்கள்! ★

உங்களுடன் ஒரு கணம்

சம்பிரதாயத்தை ஒட்டிச் சொல்லவில்லை — மேஜை மீது குவிந்து கிடந்த வாசக நேயர்களுடைய இதயங்களின் உள்ளுறைகள் என்னை ஆச்சரியக் குறிக்குள் திக்குமுக்காடச் செய்ய வில்லை. இப்போது நீங்கள் வியப்படைவீர்கள்.

பொருளின் தரம் அறிந்து எடைபோடுபவர்களாயிற்றே நீங்கள்! உங்களுக்கு மாதந்தோறும் விலை மதிப்புடைய இலக்கியப் படைப்பை வழங்கிக் கொண்டிருக்கும் 'உமா' வுக்கு உங்களது அன்பான வரவேற்பும், நல்லெண்ணம் கொண்ட ஆதரவும் நிறைந்த அளவிலே கிடைப்பதில் அதிசயம் ஏது?

லட்சியம் ஒரு கனவுப் புள்ளி. அதன் சுற்றுச்சார்பில் பல திட்டங்கள் கருக்கொண்டிருக்கின்றன. இப்போது அவை ஒவ்வொன்ருகச் செயல்ப் படுத்தப்பட்டு வருகின்றன.

சென்ற ஜூலை இதழ் எங்கள் திட்டக் குறிப்புகளுக்கு ஒரு முன்னேடி — வெள்ளோட்டம். இந்த ஆகஸ்ட் இதழ் ஓர் உரைகல்.

திரு பெ. தூரன் அவர்களின் பேட்டி பயனுள்ள புதுச்செய்திகள் பலவற்றினைச் சொல்கிறது.

'மாயாவி' என்ற புனைப்பெயரில் மறைந்திருக்கும் பம்பாய்த் தமிழ் அன்பர் திரு எஸ். கே. ராமன் அவர்கள் அண்மையில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் பரிசைப் பெற்ருர். பரிசு 'வாடா மலர்' என்ற நவீனத்துக்கு. 'மாயாவி' யின் சிறுகதைகள் இலக்கிய உலகப் பிரசித்தம். அவர் தன் முதல் கதை பிறந்த சரித்திரத்தை அழகாகச் சொல்லுகிருர்.

திரு த. நா. குமாரஸ்வாமி—திரு தாகூர் சந்திப்பு சுவை சொட்டும் பசுமை நினைவு.

இருதுருவக் கவிதை வரிசையில் கவிஞர்களின் ஜோடிக் குரல் பேசுகிறது. 'அந்தித் தாமரை' ஒரு குணச்சித்திரம். இக்கதையின் அடுத்த தொடரில் எதிர்பாராத திருப்பம் ஏற்படப்போகிறது.

வரப்போகும் செப்டம்பர் இதழில் 'ரங்கூன் கமலம்' என்ற புதிய தொடர்கதை ஆரம்பமாகிறது. அழகான குடும்பச் சூழலில் உருவாகி, உருக்கமான கதைப் போக்குடன் 'ரங்கூன் கமலம்' அமைந்திருக்கிறது என்பதை மட்டும் அன்பர்களுக்கு ரகசியமாகச் சொல்லி வைக்கிறேன்.

வரும் இதழ் அன்புத் தம்பி—தங்கைகளுக்கும் 'பாதம் அல்வா'ப் போல. ஆமாம்; 'கோஹினூர்' தொடர் கதையின் பிறப்பு வளர்ப்பு புதுமையாக — மிகப் புதுமையாக இருக்கும். சில இதழ்களாக நின்றிருந்த 'தம்பிக்கு' என்ற கடிதத் தொடர் அடுத்த இதலிருந்து புதிய முறையில் மீண்டும் தொடங்குகிறது.

'எங்கள் இதயங்கள் பேசுகின்றன' பகுதி ஒவ்வொரு இதழிலும் இடம் பெறும். அன்ருட வாழ்க்கையின் அதிசயங்கள், அரசியல் சித்து விளையாட்டுகள் முதலிய எந்த விஷயத்தைப் பற்றியும் இப்பகுதியில் தெரிவிக்கலாம். சொல்லும் செய்தியில் தேன் சொட்ட வேண்டும் — அவ்வளவுதான்!

வணக்கம்.

ஆசிரியர்.

தனிக்காட்டு ராஜா

ர. சண்முகம்

"நீ நாசமாய்ப் போக!" ஜட்கா வண்டிக்காரக் கந்தசாமி திட்டினான். அவன் பற்கள் பயங்கரமாகக் கிறீச்சிட்டன. எதிரே ஆத்திரம் பொங்கப் பார்த்தான். அங்கே அவனுடைய எதிரி வேலப்பன் நின்றால்தானே....!

புதிய ஜட்காக்காரன் வேலப்பன் அந்தப் பகுதிக்கு வந்து மாதம் ஒன்றுகூடப் பூர்த்தி பெறவில்லை. ஆனால், போட்டி வண்டிக்காரன் வேலப்பனால் கந்தசாமியின் தொழில் சிறிதும் பாதிக்கப்படவில்லை. ரயில் வரும் நேரத்திற்கு வேலப்பன் வண்டியுடன் ஸ்டேஷனுக்கு வருவான். யாராவது வலிய வந்து வண்டி கேட்டால் கந்தசாமியின் பக்கம் பார்ப்பான். அங்கே அவனுக்குச் சவாரி கிடைத்திருந்தால்மட்டுமே, தன்னைத் தேடி வந்த சவாரியை ஏற்றிக் கொண்டு புறப்படுவான். வந்தது முதல் இப்படியே கந்தசாமியுடன் சிநேக பாவத்துடன் நடந்து கொள்ளத்தான் முயன்றான் வேலப்பன். ஆனால் கந்தசாமியோ வேலப்பனுடைய விட்டுக்கொடுக்கும் பண்பை தனக்குப் பிரதிகூலமாகக் கற்பனை செய்து கொண்டு, அவன் தன்னைக் கையாலாகாதவன் என்று நினைப்பதாக எண்ணி மேலும் ஆத்திரமடைந்தான்.

போட்டி வண்டியினால் வருமானம் பாதிக்கப்பட்டால்கூடக் கந்தசாமிக்கு நஷ்டம் ஒன்றுமில்லை. அவனுக்குக் கொஞ்சம் நிலபுலன்கள் இருந்தன. அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் அவன் சுய வாழ்வுக்குப் போக எவ்வளவோ மீதமாகும். அவனுடைய ஒரே மகன் குமாரசாமி சிங்கப்பூரில் தொழில் செய்துகொண்டு நல்ல நிலையில் இருந்தான். மாதம் பிறந்தால் ஐம்பதோ அறுபதோ தவறாமல் தகப்பனார் கைச்செலவுக்காக அவன் அனுப்பி விடுவான். தவிரவும் தான் சம்பாதித்த திரண்ட செல்வத்தோடு விரைவில் சொந்த ஊர் திரும்புவதாகவும் இருந்தான். எந்த வகையில் பார்த்தாலும் வண்டி ஓட்டியேதான் வயிறு வளர்க்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் கந்தசாமிக்குக் கிடையாது—கொடுத்து வைத்தவன்.

அவனுக்கு ஏற்படும் ஆத்திரத்திற்கு அடிப்படைக் காரணம் இதுதான்: அவனுடைய தனிக்காட்டு ராஜா வாழ்வுக்குப் புதிய வண்டிக்காரன் களங்கம் விளைவித்து விட்டானே என்ற உரிமை உணர்ச்சிதான் அவன் கோபத்தைக் கிளறிவிட்டது.

அந்தச் சிறிய ரயில்வே ஸ்டேஷன் ஏற்பட்டுப் பத்து ஆண்டுகள் ஆகின்றன. முதன் முதலில் ரயில் வண்டி அந்த ஸ்டேஷனில் நின்ற காலம் முதற்கொண்டு அன்றுவரை கந்தசாமி ஒருவன்தான் அந்தப் பிராந்தியத்தில் சவாரி வண்டிக்காரன். அந்த வட்டாரத்தில் 'வண்டிக்காரன்' என்றால், அது கந்தசாமியை மட்டுமே குறிக்கும் காரணப் பெயராகவும் மாறிவிட்டது.

ராஜா கொலுவுக்கு வருவது போல நாள் தவறாமல் தன் வாகன சகிதம் ஸ்டேஷனுக்கு வந்துவிட்டுத் திரும்புவதில் அவனுக்கு ஓர் ஆத்ம திருப்தி. ஏதாவது அசௌகரியத்தினால் ஒரு நாள் அப்படி வரத் தவறினால் அவன் மனம் அன்று நிம்மதியிழந்து தவிக்கும்.

அவன் வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்ட ஒரு தொழிலுக்குப்



போட்டிவந்துவிட்டது என்று நினைப்பதையே அவனல் சகிக்க முடியவில்லை. இந்தத் தனிக்காட்டு ராஜா வாழ்வைக் குலைப்பதினின்று வேலப்பன் விலகிக் கொள்வதாக இருந்தால், தன் அன்ருட வருமானம் அவ்வளவையும் அவனுக்கே தத்தம் செய்துவிடக்கூடக் கந்தசாமி தயாராக இருந்தான்.

வேலப்பனுடைய வாழ்வுநிலை கந்தசாமிக்கு எந்த வகையிலும் குறைந்ததல்ல. அவனுக்கும் கிட்டத்தட்டக் கந்தசாமியின் வயதுதான் இருக்கும். கந்தசாமியைப் போல நிலபுலன்கள் இல்லாவிட்டாலும், வியாபாரத் துறையில் ஈடுபட்டு நல்ல பணத்தைச் சேர்த்து வைத்திருந்தான்.

வேலப்பனுக்கு முத்தம்மாள் என்ற பெண் இருந்தாள். அவள்மீது அவன் உயிரை வைத்திருந்தான். அவனுடைய வாழ்வின் லட்சியம் முழுவதும் முத்தம்மாளின் திருமணத்திலேயே ஐக்கியமாகி விட்டிருந்தது.

முத்தம்மாளை யோக்கியமான ஒரு இளைஞனைகையில் பிடித்துக்



கொடுத்து, தன் சேமிப்பு நிதியையும் அவனிடம் ஒப்படைத்துவிட்டால், அப்புறம் எந்த நிமிஷமும் நிம்மதியாகக் கண்ணை மூடி விடத் தயார் என்று அவன் அடிக்கடி கூறினான்.

ஒருநாள் இரவு வேலப்பன் வீட்டில் இல்லாத சமயத்தில் கந்தசாமி அவன் வீட்டு வாசலில் வந்து நின்று வேலப்பனைத் தாறுமாறாகத் திட்டத் தொடங்கிவிட்டான். அப்போது முத்தம்மாள் மட்டுமே தனியே வீட்டில் இருந்தாள். கந்தசாமியின் வசவுப் புராணம் எல்லைமீறிப் போவதைக் கவனித்த அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் கந்தசாமியை மெல்லச் சமாதானப்படுத்தித் திருப்பி அனுப்பி விட்டனர்.

வெளியே சென்றிருந்த வேலப்பன் வீடு திரும்பியதும் முத்தம்மாள் நடந்த நிகழ்ச்சியைக்கூறிவிட்டுக் 'கோ' வென்று கதறியழுதாள். கோபத்

திருமணம் ஒருவித இயற்கை வழிபாடு. உலக வளர்ச்சிக்குத் துணை புரிவது. இயற்கைத் தெய்வத்தை வழிபடுவதாகும். இவ் வழிபாடு பெரும் பெரும் வழிபாட்டுக்குக் கால் கொள்வது. —திரு வி. க.

தையே கண்டறியாத வேலப்பனின் மனத்தில் முதன் முதலாகக் கோபக்கனல் பற்றி எரியத் தொடங்கியது.

அதன் பின்னர் தினந்தோறும் இருவருக்கும் இப்படிப்பட்ட போட்டிச் சண்டைகள் வலுக்கத் தொடங்கின. கந்தசாமி பொறுமையுணர்ச்சியால் ஆவேசமடைந்திருந்ததால், அவனால் வேலப்பனை வாய் வலிக்கத் திட்டுவதைத் தவிர வேறொன்றும் செய்ய இயலவில்லை. வேலப்பனோ வைராக்கிய உள்ளத்துடன் போட்டி போட்டதால் வெற்றி அவன் பக்கம் கொடி நாட்டியது.

நாட்கள் ஓட ஓட, கந்தசாமியின் பழைய பெருமை அறவே போய் விடும் போலாகி விட்டது. ஊரில் எல்லோர் மத்தியிலும் இப்பொழுது வண்டிக்கார வேலப்பன் பிரசித்தி பெற்றுவிட, கந்தப்பனைப் பற்றிய நினைவே அவர்களுக்கு அற்றுப் போய்விட்டது.

கந்தசாமி கிட்டத்தட்டப் பைத்தியம் பிடித்தவனின் நிலையை அடைந்து விட்டான். அவனுடைய மனத்தில் வேலப்பனுக்கு எதிராகப் பயங்கர நினைவுகளெல்லாம் நிறைந்து சுழன்றன. அவனுடைய உயிருக்கே ஆபத்து விளைவிப்பதைத் தவிர அவனை வெல்ல வேறு வழியிருப்பதாகக் கந்தசாமிக்குத் தோன்றவில்லை. இந்த எண்ணம் ஒவ்வொரு வினாடியும் அவனுடைய உள்ளத்தில் விசுவரூபமெடுத்து வளர்ந்து கனன்று கொண்டிருந்தது.

ஒருநாள் காலை கந்தசாமி ஸ்டேஷனுக்கு வரச் சற்று தாமதமாகி விட்டது. அதற்குள் ரயில் வந்து விட்டது. கந்தசாமி ஸ்டேஷனை நோக்கி வண்டியை விரட்டினான்.

அதற்குள் வேலப்பனுக்கு சவாரி கிடைத்து, எதிரே சற்று தொலைவில் வண்டியுடன் வந்து கொண்டிருந்தான்.

வேலப்பனுடைய வண்டி ஒரு செங்குத்தான மேட்டுப்பாதையில் வந்து கொண்டிருந்தது. அங்கே ஒரு பக்கத்தில் கிடுகிடு பள்ளம். அந்தப் பக்கத்தில் சற்று ஜாக்கிரதையாக ஓட்டாவிட்டால் வண்டி நிச்சயம் பள்ளத்தில் விழுந்து விடும்.

அந்தப் பள்ளத்தையும் வேலப்பனுடைய வண்டியையும் பார்த்தவுடன் கந்தசாமியின் மனத்தில் கனன்று கொண்டிருந்த மிருக உணர்ச்சி குபீரென மேலெழும்பியது. வேலப்பனைத் தொலைத்துக் கட்ட இதைவிட நல்ல வாய்ப்பு இனிக் கிட்டாது என்று அவனுடைய உள்ளுணர்வு சொல்லி அவனை உந்தித் தள்ளியது. வேலப்பனுக்கு ஏற்படும் ஆபத்து வண்டிக்குள் உட்கார்ந்திருக்கும் அப்பாவிப் பிரயாணிக்கும் ஏற்படுமே என்ற எண்ணங்கூடக் கந்தசாமிக்கு எழவில்லை.

பள்ளத்திற்கு எதிர்ப்புறம்—வேலப்பன் வண்டிக்குப் பக்கத்தில் கொஞ்சம் இடம் இருந்தது. அந்த இடத்தில் நிச்சயம் மற்றொரு வண்டி போகக்கூடிய வசதியேயில்லை.

கந்தசாமி குதிரையைத் தட்டி விட்டவாறு அந்தப் பக்கத்தை நோக்கிப் புயல் வேகத்தில் பறந்தான்.

எதிரே வந்த வண்டியைக் கண்டதும் வேலப்பன் பீதியடைந்து திகைத்து விட்டான். எதிரியின் வண்டி அவனுடைய வண்டியைக் கடக்க முயற்சித்தால் நிச்சயம் தன் வண்டியுடன் மோத நேரிடும் என்பதும் தெளிவாகத் தெரிந்தது.

மோதினல் அப்புறம் வண்டி பள்ளத்தில் உருள வேண்டியதுதான்!

வேலப்பனுடைய இந்தச் சிந்தனை முடிவதற்குள் அவன் நினைத்தது நடந்தேவிட்டது. கந்தசாமியின் வண்டி 'படா'ரென்று வேலப்பனின் வண்டி மீது இடித்து மோதிவிட்டு அப்பால் ஓடியது. அடுத்த வினடி அந்த அதிர்ச்சியைச் சமாளிக்க முடியாமல் தடம் புரண்டு பள்ளத்தில் உருண்டுவிட்டது. வண்டியிலிருந்த பிரயாணியும் வேலப்பனும் போட்ட கூக்குரல் கூடக் கந்தப்பனின் செவிக்கு எட்டவில்லை.

கந்தசாமி ஸ்டேஷனுக்கு வண்டியை ஓட்டாமல், நகரத்தை நோக்கித் திருப்பி ஓட்ட ஆரம்பித்தான். பொழுது விடியும் வரை டவுனிலேயே சுற்றிக் கொண்டிருந்து விட்டு இருட்டிய பிறகு வீடு திரும்பினன். அப்பொழுது வாசலில் இரண்டு போலீஸ்காரர்கள் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் கந்தசாமிக்குப் பயம் பிடித்துக் கொண்டது. ஒரே எட்டில் வண்டியை விட்டுக் குதித்து ஓடத் தொடங்கினன். போலீஸ்காரர்கள் விடவில்லை. தொடர்ந்து சென்று பிடித்து, அவனைக் கைது செய்துவிட்டனர்.

*

வேலப்பனுடைய வீட்டில் கயிற்றுக் கட்டிலில் இளைஞன் ஒருவன் மயக்க நிலையில் படுத்திருந்தான். அவன் தலையிலும், கைகளிலும் பலமான கட்டுப்போடப்பட்டிருந்தது. பக்கத்தில் 'அரிக்கேன் விளக்கு' ஒன்று வைக்கப் பட்டிருந்தது. அதற்கு அருகே சாய்வு நாற்காலியில் வேலப்பன் சாய்ந்திருந்தான். அவன் தலையிலும் கட்டு கட்டப்பட்டிருந்தது. ஆனல் அப்படியொன்றும் பலமான அடியில்லாததால் தெளிவாகவே உட்கார்ந்திருந்தான். இளைஞன் படுத்திருந்த கட்டிலின் அருகே அமர்ந்து முத்தம்மாள் அவன் தலைக்கு ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

வண்டி கவிழ்ந்தவுடன் வேலப்பன் சொற்ப காயத்துடன் உயிர் தப்பிவிட்டான். அதில் வந்த இளைஞனுக்கு மட்டும் நல்ல அடி. அதிருஷ்டவசமாகக் குதிரைக்கும் வண்டிக்கும் பிணைக்கப்பட்டிருந்த தோல் பட்டை அறுந்து விட்டதால், குதிரை விபத்திலிருந்து விலகிவிட்டது. வண்டிக்கும் அதிக சேதமில்லை.

வண்டியை நிலைப்படுத்தி மேட்டுக்கு இழுத்து வந்து குதிரையைப் பூட்டி, நினைவு தப்பிக் கிடந்த இளைஞனைத் தூக்கி வந்து வண்டியில் கிடத்தி அருகிலிருந்த சர்க்கார் வைத்திய சாலைக்குக் கொண்டு சென்முன் வேலப்பன்.

இளைஞன் சற்று அசைந்து கொடுத்துப் புரண்டான். எழ முயற்சித்தான். முத்தம்மாள் அவனைத் தாங்கிப் பிடித்து கட்டிலிலேயே உட்காரவைக்க உதவினள். இளைஞன் கண்களை அகல விரித்து அந்தச் சூழ்நிலையைப் புரிந்து கொள்ளப் பிரயத்தனப் பட்டான். பக்கத்தில் தயாராக இருந்த சூடான காப்பியை முத்தம்மாள் அவனுக்குப் புகட்டவே அவன் கொஞ்சம் உணர்வு பெற்றான்.

இளைஞனுக்கு நிலைமையைச் சுருக்கமாக விளக்கிக்கூறி, அவனுடைய பெட்டி படுக்கை சாமான்கள் தன் வீட்டிலேயே இருப்பதாகக் கூறினன் வேலப்பன். பிறகு அவனை நோக்கி, "நீங்கள் யாருக்காவது செய்தி சொல்லி அனுப்ப விரும்பினல், நான் போய் அவர்களை அழைத்து வருகிறேன். நீங்

ஒவ்வொரு மனிதனும் தனக்கெனச் சில லட்சியங்களை வைத்திருக்கிறன்; அதன்படியே தன் அபிலாஷைகளையும் தன் தீர்ப்புக்களையும் உருவாக்கிக் கொள்கிறன்.

—ஐன்ஸ்டீன்.

கள் காலையில் வீட்டுக்குப் போக லாம்'' என்ருன்.

''இங்கே கந்தசாமியை உங்க ளுக்குத் தெரியுமா?....'' என்று மெல்லிய குரலில் கேட்டான் இளை ஞன்.

''எந்தக் கந்தசாமி?....'' என்று வியப்புத் ததும்ப வினவினுன் வேலப்பன்.

''வண்டிக்காரக் கந்தசாமி என் ருல் இங்கே புரியும். நான் அவ ருடைய மகன்...''

வானமும் பூமியும் சேர்ந்து சுழல்வது போலிருந்தது வேலப் பனுக்கு. என்ன பதிலளிப்ப தென்று தோன்ருமல் பிரமை பிடித்துப் போய் அவன் முகத் தையே பார்த்தான்.

''நான் சிங்கப்பூரில் தொழில் செய்து கொண்டிருந்தேன். ஒரு மாதம் கழித்து ஊர் திரும்புவதாக இருந்தேன். அங்கே உடனே புறப் பட்டாக வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டுவிட்டதால் நான் புறப் பட்டுவிட்டேன். அப்பாவுக்குக் கடிதம் போடக் கூட நேரம் கிடைக்கவில்லை...'' என்று தொடர்ந்து கூறினுன் இளைஞன்.

வேலப்பன் தன் மனக் குழப் பத்தை அடக்கிக்கொண்டு, அவனது தந்தைக்குத் தகவல் தரு வதாகக் கூறிவிட்டு வெளியே வந்தான். அவனுடைய நல்ல உள் ளத்தில் ஒரு விஞடி விஷ எண்ணம் ஒன்று தலையெடுத்தது. தன் உயி ரைப் போக்க முயன்ற பரம வைரி யின் மகன் தன் பாதுகாப்பில் இருக்கிருன் - அப்பனுக்குப் பதில் மகனைப் பழிவாங்க அவன் எண்ண மிட்டான். வாய்த்த சந்தர்ப்பத்தை வாயார வாழ்த்தினுன். அப் பொழுது இளைஞன் பலமான காயங்களுடன் உயிருக்கே ஆபத் தான நிலையில் இருப்பதால், அவன் உயிருக்குச் செயற்கை முறையில் ஏதாவது ஆபத்து என்ருலும் பழி அவனைச் சேராமல் ஒதுங்கிவிட வழி இருக்கிறதே! எதையோ நினைத்துக்கொண்டு உள்ளே வந்த போது, அங்கே அவன் கண்ட அக் காட்சி அவனை மெய்சிலிர்க்க வைத்தது.

அந்த இளைஞன் முத்தம்மாளின் மடியில் தலையை வைத்துக் கொண்டு கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தான். முத்தம்மாள் ஆர்வமும் ஆசையும் ததும்ப அவன் முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

வேலப்பனுடைய மனத்தில் துளிர்த்த விஷ எண்ணம் கண்ணை மூடித் திறப்பதற்குள் மடிந்துவிட் டது. அங்கே வேறுவிதமான இன் பச் சித்திரம் ஒன்று உருவாகி நின்றது.

விடிந்ததும் விடியாததுமாக வேலப்பன் போலீஸ் ஸ்டேஷ னுக்குச் சென்று, கந்தசாமியை விடுதலை செய்துகொண்டு மீண் டான். வரும் வழியில் கொஞ்சங் கொஞ்சமாக விஷயத்தைக் கந்த சாமிக்கு விளக்கினுன் வேலப்பன். இந்தச் செய்தி கேட்டு கந்தசா மிக்கு மகிழ்ச்சிப் பூரிப்பினுல் மூர்ச்சையடையும் நிலைகூட ஏற் பட்டுவிட்டது. மெய்ம்மறந்து வேலப்பனைத் தழுவிக் கொண்டு, ''வேலப்பா, நான் ஒரு மிருகம். என் வினை என்னையே சுடப் பார்த் தது. நான் வாழ்வதெல்லாம் என் மகனுக்காகத்தானே. ஐயோ, அவன் உயிருக்கு நானே எமனுகி விடப் பார்த்தேனே.... தெய்வமே, உனக்கு என்பேரில் கருணை இருக் கிறதா? இல்லையென்ருல், என் மகன் எப்படி விதியிலிருந்து தப்பித் திருக்கமுடியும்!'' என்று கதறினுன்.

*

கொட்டு மேளம் முழங்கியது.

கந்தசாமியின் திருக்குமாரன் குமாரசாமி, வேலப்பனின் மகள் முத்தம்மாளின் கழுத்திலே மூன்று முடிச்சுகள் இட்டான்.

ஊர் வாய் முணுமுணுத்தது: ''தனிக்காட்டு ராணிக்கு ஒரு தனிக் காட்டு ராஜா கிடைச்சிட்டான். பலே....!'' ★

என் முதல் கதை

'மாயாவி'

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் தினசரி எத்தனையோ சம்பவங்கள் நிகழ்கின்றன. ஆயினும், எக்காலத்திலும் நினைத்துப் பெருமை கொள்ளக்கூடிய சம்பவங்கள் எல்லோருடைய வாழ்விலும் நிகழ்ந்திருக்கும் என்று சொல்வதற்கில்லை. ஆனால் ஒரு சாராருக்கு அது நிச்சயமாக இருந்தே தீரும் என்று நான் அனுபவபூர்வமாகச் சொல்கிறேன். அவர்கள்தாம் எழுத்தாளர்கள். எழுத்தாளர்களுக்குப் பெருமை அளிக்கக் கூடிய சம்பவம் என்றால், அது அவர்களுடைய கதையைப் பற்றியதல்லாமல் வேறு எதாக இருக்க முடியும்? தன் முதல் கதையை எழுதி முடித்து, அதை அச்சிலும் கண்டபோது எழுத்தாளனுக்கு ஏற்பட்ட பெருமைக்கு —பெருமிதத்துக்கு ஈடாக, இணையாக வேறு எதையுமே சொல்ல முடியாது.

பாயசம் இனிப்பான பதார்த்தம். அதை எத்தனை தடவை குடித்தாலும் மனிதருக்கு ஆசை விடுவதில்லை. தன் முதல் கதையைப் பற்றிச் சொல்வதும், பாயசம் குடிப்பது போன்றதுதான். அதை எத்தனை தடவை யார் யாரிடம் சொல்லியிருந்தாலும், மீண்டும் ஒரு தடவை சொல்ல வேண்டும் என்றால் எழுத்தாளருக்கு ஆனந்தந்தான் ஏற்படுகிறது.



ஆகவே மீண்டும் ஒரு தடவை 'உமா' வாசகர்களுக்காக அதை இங்கே சொல்கிறேன்.

***

கதை எழுத வேண்டும் என்ற ஆர்வம் எனக்குப் பள்ளிப் பிராயத்திலே ஏற்பட்டது. அக்காலத்தில் தமிழில் எண்ணி எடுத்து நாலைந்து கதைப் பத்திரிகைகளே இருந்தன. குழந்தைப் பிராயத்திலிருந்து கதை கேட்பதில் எனக்கு ஏற்பட்டிருந்த ஆர்வம், எழுதப் படிக்கக் கற்றதும் கதைகளைப் படிப்பதற்குத் தாவியதால், அக்காலத்தில் பள்ளிக்கூடப் புத்தகங்களைவிடக் கதைப் பத்திரிகைகளையே நான் அதிகமாகப் படித்தேன் என்றால் அது பொய்யல்ல. இப்படி, பல்வேறு சுவையுடைய கதைகளைப் படிக்கப் படிக்க என் உள்ளத்தில் முளைத்த ஆர்வந்தான், 'நாமும் கதை எழுத வேண்டும்; நம்முடைய கதைகளும் பத்திரிகைகளில் வரவேண்டும்' என்று என்னைத் தூண்டிற்று. ஆயினும், பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு சென்னைக்குவந்து உத்தியோகம் ஏற்று சில காலம் ஆகும் வரையில் பேனாப் பிடித்துக் கதை என்று எதையும் எழுதினேன் என்று குறிப்பிட்டுச் சொல்வதற்கில்லை.

நான் சென்னைக்கு வந்த காலத்தில் தமிழ்

நாட்டில் ஏராளமான பத்திரிகைகள் முளைத்துவிட்டன. அக்காலத்திலும்கூட நான் அநேகமாக எல்லாப் பத்திரிகைகளையும் வாங்கிப் படிப்பதுண்டு. ஆனால் நெடுங்காலமாக, விதம் விதமான கதைகளைப் படித்து என் மனம் பக்குவம் அடைந்து விட்டதால், அப்பொழுது படித்த அத்தனை கதைகளையும் ரசித்தேன் என்று சொல்லமாட்டேன். தனி முத்திரை தாங்கிய ஒரு சில எழுத்தாளர்களின் கதைகளையே நான் விரும்பிப் படிப்பது வழக்கம். அத்தகைய எழுத்தாளர்களில் சிலர் இன்றும் அதே விதமான அமரக் கதைகளைச் சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலரைக் காலம் பறித்துக் கொண்டு விட்டது. மறைந்த எழுத்தாளர் வரிசையில் என்னை மிகவும் கவர்ந்தவர் திரு கு. ப. ராஜகோபாலன் அவர்கள்.

அப்பொழுது நான் திருவல்லிக்கேணியில் பைக்ராப்ட்ஸ் ரோடில் வசித்து வந்தேன். அருகில் (அக்பர் சாகிபுத் தெருவில் என்று ஞாபகம்) வசித்து வந்தார் அந்தக் கதைச் சிற்பி. அநேகமாக ஒவ்வொரு நாளும் மாலை வேளையில், கோயம்புத்தூர் கிருஷ்ணயர் கடை வாசலில் இருக்கும் வெற்றிலை-பாக்குக் கடைக்கு அவரும், இன்னும் சில எழுத்தாள நண்பர்களும் வருவார்கள். சரியாக அந்தச் சமயத்தில் நான் அங்கே ஆஜராகி விடுவேன். தாங்கள் எழுதிய, எழுதப் போகிற கதைகளைப் பற்றி அவர்கள் பேசிக் கொள்வதை ஆர்வம் பொங்கக் கேட்டுக்கொண்டு நிற்பேன். கதை எழுத வேண்டும்; எழுத்தாளன் ஆக வேண்டும் என்று உள்ளடங்கிக் கிடந்த ஆவல் என்னுள் உருப்பெற்றதற்கு இந்தச் சம்பவமே காரணம்.

இடையே ஏதோ ஒரு விசேஷத்துக்காக நான் எங்கள் கிராமத்துக்குப் போக நேர்ந்தது. அங்கே இருந்தபோது நிகழ்ந்த ஒரு சம்பவம் என் முதல் கதைக்கு வித்தாயிற்று. குடியானவர் தெருவில் ஓர் இளம்பெண் தன் கணவனால் கோரமாகக் கொலை செய்யப்பட்டாள்.

காரணம் உண்டு: அப்பெண்ணை மணந்த சில நாட்களுக்கெல்லாம், அவளுடைய கணவன் பிழைப்புக்காக வெளியூர் சென்றான். எங்கள் ஊர்க் குடியானவர்களிடையே சில பைத்தியக்காரத்தனமான சம்பிரதாயங்கள் உண்டு. மணமான பெண், கணவன் உயிரோடிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, உள்ளூரிலே தன் பிறந்த வீடு இருந்தாலுங்கூட, புகுந்த வீட்டில்தான் வாழ்ந்தாக வேண்டும் என்பது அவற்றுள் ஒன்று. இந்தப் பெண் உள்ளூர்க்காரியேயாயினும், புகுந்த வீட்டிலே கணவன் ஊரில் இல்லாத சமயத்தில் வசித்து வந்தாள். அவளுடைய மாமனார் ஒரு விடன்; தாரமிழந்தவன்; நாற்பது வயதுக்கு மேற்பட்டவன்; ஆனாலும் கட்டுவிடாமல் இருந்து வந்தவன். இவ்வளவெல்லாம் இருந்துங்கூட, ஜாதி வழக்கம் காரணமாக அப்பெண் அவனுடனே வசிக்க வேண்டியதாயிற்று. இளம் பெண்; கணவனைப் பிரிந்திருந்தாள்; கயவனான மாமனுக்குக் கட்டுப்பட்டு வசிக்கவேண்டிய அவசியமும் இருந்தது. எல்லாம் சேர்ந்து, அவளை அவனுக்கு இரையாக்கி விட்டன.

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் இரவு வெளியூர் சென்றிருந்த அவள் கணவன் திரும்பிவந்து வீட்டுக் கதவைத் தட்டினான். அவனுடைய தந்தையே வந்து கதவைத் திறந்தான். எதிரே நிற்பது மகன் எனக் கண்டதும், அவனை "வா" என்று கூட வரவேற்காமல் வெளியே போய்விட்டான். தந்தையின் விசித்திரப் போக்கை அங்கே விரிக்கப்பட்டிருந்த படுக்கைகள் மகனுக்கு உரைத்தன. அவ்வளவுதான்; அவனுக்கு-மகனுக்கு வெறி வந்து விட்டது. வீட்டிலிருந்த அரிவாளைத் தேடி எடுத்து வந்து, தூங்கிக்கொண்டிருந்த மனைவியை ஒரே வெட்டாக வெட்டிப் போட்டுவிட்டு,

நேரே போலீஸ் ஸ்டேஷனில் சரண் அடைந்தான்.

இதுதான் நடந்த கதை. ஜாதி வழக்கத்துக்குப் பலியான அந்தப் பேதைப் பெண்ணின் கதையையே என் முதல் கதையாக எழுதிவிடுவது என்று தீர்மானித்து, அவ்வாறே நடந்ததை நடந்தவாறு எழுதி, என் முதல் கதையை முடித்து விட்டேன்.

***

சென்னைக்கு வந்த அன்றைக்கு கு. ப. ரா. அவர்களை என் முதல் கதையுடன் சந்தித்து, அது உண்மைச் சம்பவம் என்றும். பெயர்களை மாத்திரமே மாற்றி எழுதியிருப்பதாகவும், படித்துப் பார்த்துக் குற்றம்—குறைகளை எடுத்துக் காட்டித் திருத்தித் தர வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொண்டேன். அவர் கதையைப் படித்துப் பார்த்தார்; பிறகு சொன்னார்: ''நடை நன்றாக இருக்கிறது. சொல்கிற விஷயத்தைக் கோவையாகச் சுவையுடன் சொல்லியிருக்கிறீர்கள். இருந்தாலும் பச்சையாக இருக்கிறதே! உண்மையான சம்பவங்களைக் கொண்டு கதை எழுதுவதாக இருந்தால், அதில் விரசமான கட்டங்களையும் நடந்தது நடந்தவாறேதான் எழுத வேண்டும் என்று வைத்துக் கொள்ளக் கூடாது. கதையின் தத்துவத்துக்குப் பங்கம் விளைவிக்காதபடி, விரசமாக உள்ள பாகங்களை மாற்றி, அந்த இடங்களைக் கற்பனையால் நிரப்பவேண்டும். உங்கள் கதையையே எடுத்துக் கொள்ளுங்கள்: நீங்கள் இதன் மூலம் சொல்ல விரும்புவதெல்லாம், கண்மூடித்தனமான பழக்க வழக்கங்கள் கூடாது என்பதுதான். அந்தப் பெண்ணை இழிந்துபோக வைத்துத்தான் அதை விளக்க வேண்டுமா? எத்தனைதான் நிர்ப்பந்தத்தால் அவள் இழிந்தாள் என்றாலும், கறைப்பட்டவள் கறைப்பட்டவள் தானே....? ஆகவே, உங்கள் தத்துவமே வாசகர்களுக்கு உரைக்காது போய்விடலாம். இதற்கு நேர் மாறாக, அப்பெண்ணை அவள் மாமனார் கெடுக்க முற்படுவதாகவும், அவள் வீட்டுக்கு வந்து அழுவதாகவும், ஆனால் பெற்றோர் ஜாதி வழக்கத்தை மீறலாகாது என்று மாமன்காரனை எச்சரித்து, அவளை மீண்டும் அவனுடனேயே வசிக்க அனுப்பி விடுவதாகவும், அன்றிரவே, அக்கயவன் மறுபடியும் அவளைத் தொந்தரவு செய்ய முயலவே, அவள் தற்கொலை செய்துகொண்டு உயிரைப் போக்கிக் கொண்டதாகவும் இந்தக் கதையை மாற்றி எழுதினால், உங்கள் தத்துவமும் பலம் பெறும்; உண்மைச் சம்பவத்தை ஒட்டி எழுதியது போலவும் இருக்கும்; விரசமான பகுதியும் நீங்கிப் போகும்.'' என்று விரிவாக எடுத்துச் சொல்லி, என் கற்பனைக் கண்களைத் திறந்து விட்டார்.

என்னுடைய முதல் கதை 'ஜாதி வழக்கம்' 'மணிக்கொடி'யில் பிரசுரத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தது. ஆனால் என் துரதிருஷ்டம் அப்பத்திரிகை நின்றுவிடவே, அக்கதை 1939ல் 'சந்திரோதய'த்தில் இடம் பெற்றது.

இவ்வாறு ஆறேழு மாதங்கள் பல கதைகளை எழுதிய பிறகு, எனக்குக் 'கலைமகள்' பத்திரிகையுடன் தொடர்பு உண்டாயிற்று. 'கலைமக'ளில் முதலாவதாக வெளியிடப்பட்ட 'சாமுண்டியின் சாபம்' என்ற என் கதையை ஆசிரியர் பாராட்டி எழுதியதோடு, அன்று முதல் இன்று வரையில் என்னை இடைவிடாது ஊக்கியும் வருகிறார்கள். திரு கு. ப. ரா. அவர்கள் என் எழுத்துத் தொழிலுக்கு அட்சராப்பியாசம் செய்து வைத்தார்கள்; 'கலைமகள்' ஆசிரியர் திரு கி. வா. ஜகந்நாதன் அவர்கள் இன்றளவும் எனக்கு ஆசிரியராக வழிகாட்டி முன்னேற்றி வருகிறார்கள். அவ்விரு பெரியார்களையும் நான் என்றுமே மறக்க முடியாது.

★

குமாரி பிரேமா

வ. உ. சி. சுப்பிரமணியம்

★

அவள் பெண் புதிர்-புதிர்ப் பெண். அவள் வாழ்க்கைப் பாதையில் சில சம்பவங்கள் குறுக்கிடுகின்றன. ஒரு திரும்பு முனை! முடிவு— புதிர்! அந்தப் புதிர் கதை சொல்கிறது........!

*

குமாரி பிரேமா பி. ஏ அந்த வட்டாரத்தில் பூக்கடை மாதிரி. அதாவது, அவளைத் தெரியாதவர் இருக்க முடியாது. பணமிருந்தது; படித்தாள். கல்லூரி வாசலிலிருந்து நேராக சர்க்கார் வேலையில் குதித்தாள். அவளை வரவேற்கத்தான் தலைமைத் தபாலாபீசில் அந்த உபசரணை அதிகாரி வேலை காலியாயிருந்தது போலும்! பிரேமா மிகவும் முற்போக்கானவள்; புதுமைப் பெண். ஆணுக்குப் பெண் சளைத்தவளல்ல என்கிற சித்தாந்தத்தில் உறுதி பூண்டவள்.

நூற்றுக் கணக்கான பேர் வேலைபார்க்கும் அந்த அலுவலகத்தின் தலைமை அதிகாரி யார் என்று எல்லோருக்கும் தெரிந்திருக்க முடியாது. ஆனால் குமாரி பிரேமாவைத் தெரியாதவர் அந்த ஆபீசில் மட்டுமல்ல, சுற்று வட்டாரத்திலுள்ள காரியாலயங்களில் கூட யாருமே இருக்க முடியாது. இவ்வளவுக்கும் அவள் ஒருத்தி மட்டும் தான் அங்கு பெண் சிப்பந்தி என்று நினைத்துவிட வேண்டாம்; ஒரு டஜன் குமாரிகளுக்குக் குறையாமல் அங்கு பணிபுரிந்து கொண்டு இருந்தனர்.

பிரேமா அழகின் சிகரம் என்று சொல்ல முடியாது. ஆனல் ஒரு முறை பார்த்தவர் திரும்ப நாலைந்து தடவை பார்க்கப் போதுமான அழகு அவளிடம் இருந்தது. போதாதா? பிறர் பார்வையைக் கவரும் தாமரை வதனம். அதில் மொய்க்கும் இரு கண் வண்டுகள்; எடுப்பான நாசிக்கு அழகு கூட்டும் தங்கப் பிரேம் மூக்குக் கண்ணுடி. அறிவு விகசிக்கும் நெற்றி; நடுவே செஞ்சாந்துப் பொட்டு. சிறிது கலைந்து நெற்றியில் அசைந்தாடும் சுருண்ட கருங்குழல் கற்றைகள்; கரும் வலைக்குள் கட்டிப்போட்ட அளக பாரத்தை அதிகமாக்கும் பிச்சிப் பூச்சரம்; உடம்பில் ஒட்டி அழகை விளம்பரம் செய்யும் வாயில் ரவிக்கை, புடவை. கால் நிறத்தை மிகைப் படுத்தும் கறுப்பு வெல்வெட்

'ஸ்லிப்பர்'. இவ்வளவுதான் ஸார், குமாரி பிரேமா. அவளது ஏறு போன்ற நடை, அட்டகாசச் சிரிப்புகள், பட்டாசு வெடிப் பேச்சுக்கள், ஆண்களைச் சட்டை செய்யாத நடையுடை பாவனைகள் ஆகியவையும் சேர்ந்து அவளுக்குப் பிரபலத்தை ஈட்டித் தந்தன. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், அவள் பெண் புதிர் — புதிர்ப் பெண்....!

2

சிற்றுண்டி விடுதி மேஜையில் 'குமாஸ்தினிகள்' தாழ்ந்த குரலில் ரகசியம் பேசிக் கொண்டனர்.

அவர்கள் ஏதோ சதி செய்வதாக இளைஞர்கள் கருதினர்.

பொதுவாகப் பார்க்கப் போனால் விஷயம் ஒன்றும் பிரமாதமில்லை. ஆனால் பெண்கள் வட்டாரத்தில் அது பெரும் புரட்சியைக் கிளப்பி விட்டது. ஆந்திராவிலிருந்து மாற்றலாகி வந்த சூப்பிரண்டெண்ட் விசுவநாதன், பிரேமாவுடன் எதிர்முகம் கொடுத்துப் பேசிவிட்டான் என்ற செய்திதான் பெண்கள் வட்டாரத்தின் கொந்தளிப்புக்குக் காரணம்.

சொல்லப்போனால் விசுவநாதன் பரம சாது. இயற்கையிலேயே சங்கோஜி. ஆனால் வேலை வாங்குவதில் மட்டும் கண்டிப்புப் பேர்வழி. அவன் உண்டு; அவன் வேலை உண்டு. யாரிடமும் அனாவசியமாகப் பேசமாட்டான். வேலையில் பிரேமா கவனக் குறைவாகயிருப்பது பற்றி அவளிடமே கண்டித்து விட்டான் விசுவநாதன்.

கடமை மூலமாக அவன் செய்த இக் கண்டனத்துக்குப் பெண்கள் வட்டாரம் பலவிதமான நோக்கங்களையும், குமாஸ்தாக்கள் கூட்டம் தவறான அர்த்தங்களையும் கற்பித்துக் கொண்டன. ஆனால் யாருடனாவது சூப்பிரண்டெண்ட் பழகினால் தானே, இவ்விஷயம் அவருக்குத் தெரியப் போகிறது!

3

அன்று விடுமுறை. 'சர்க்யூட்' அடித்து விட்டு வீட்டுக்குத் திரும்பிய பிரேமாவுக்குத் தன் கண்களை நம்ப முடியவில்லை. வெளி வராந்தாவில் அவள் தகப்பனாருடன் பேசிக் கொண்டிருந்தது விசுவநாதன் தான். அவள் நெஞ்சு சஞ்சலப் பட்டது இதுவே முதல் தடவை.

''நமஸ்காரம், ஸார். வாருங்கள்'' என்று கூறிய வண்ணம் வீட்டுக்குள் நுழையப் போனாள் பிரேமா. அவள் பூங்கரங்கள் அவளது மேலாக்கைத் திருத்திக் கொண்டன.

''வாம்மா. நீயும் வந்துவிட்டாயா? சூப்பிரண்டு வந்து அரை மணி நேரமாகக் காத்திருக்கிறார். உன் சம்மதம்பற்றி ஒரு வார்த்தை கேட்டுச் சொல்வதாகச் சொன்னேன். நல்லவேளை, அவர் புறப்படுவதற்குள் நீயே வந்துவிட்டாய்!'' என்றார் சர்மா. பிரேமாவின் அன்புத் தந்தை அவர்.

பிரம்பு நாற்காலிகளில் ஒன்றைச் சற்றுத் தள்ளிப் போட்டுக் கொண்டு அதில் உட்கார்ந்தாள் அவள். உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

''அப்பா, நீங்கள் சொல்லுகிறதை நான் தட்டப் போகிறேனா, என்ன?'' என்று அவள் கேட்டாள், நெஞ்சு படபட வென அடித்துக் கொள்ள.

''எல்லாம் கல்யாண விஷயமாகத்தான். விசுவநாதனின் கொள்கை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. நேராக என்னிடமே அவர் வந்தது பற்றி எனக்கு மிக்க சந்தோஷம்'' என்றார், விசுவநாதன் பக்கம் திரும்பியவாறு.

விசுவநாதன் ஆமோதிப்பதாகத் தலையை அசைத்தான்.

பரபரப்பு நீங்கி சகஜ நிலைக்கு வந்து கொண்டிருந்தாள் அவள்.



''பங்கராச்சாரி கல்யாண மண்டபம் உனக்குத் தெரியுமா, பிரேமா?''

''ஆமாம், அப்பா''

''அது வரை நாம் போய் வர வேண்டும். சூப்பிரண்டு இப்போதானே மாற்றலாகி வந்திருக்கிறார். அவர் வீட்டுப் பெண்களெல்லாம் வர ஒரு வாரம் ஆகுமாம்'' தனிக்காட்டு ராஜாத்தியின் உடம்பில் ஒரு வித புதிய உணர்ச்சி வெது வெதுப்பை ஏற்படுத்தியது. மாங்கல்யச் சரட்டுக்குள் தன் கழுத்தைக் கொடுப்பதாக அவள் கற்பனை செய்து பார்த்தாள்.

''இப்பவே புறப்படணுமா, அப்பா?''

''நல்லா இருக்கு நீ கேட்கிறது, நல்ல காரியத்துக்கு அட்டி சொல்லாமல் புறப்படம்மா.''

பிரேமா பதில் சொல்லவில்லை. விசுவநாதன் எங்கேயோ பார்த்துக் கொண்டிருப்பது போல் பாவனை செய்தான். அவனை ஒரு முறை உச்சி முதல் உள்ளங்கால் வரை இரு விழிகள் பார்வையிட்டன. ஒரு முடிவுக்கு வந்துவிட்டவள் போல் பிரேமா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். ''சரி அப்பா'' என்றது அவள் வாய்.

''போய் சிக்கிரமா 'டிரஸ்' பண்ணிக் கொண்டு வந்து விடு, பெண்ணைப் பார்த்து விட்டு வந்திடலாம். கல்யாண காரியத்துக்குப் பெண் துணைக்குப் போவது பெரிய புண்ணியம் அம்மா!'' என்றார் சர்மா.

பிரேமா பெரும் ஏமாற்றம் அடைந்தாள். அவள் பெண்மை முதல் முறையாகத் தோல்வி கண்டது. சே! பெண் பார்க்கத் துணை செல்லத்தானா சூப்பிரண்டெண்ட் அவளைக் கூப்பிட வந்திருக்கிறான்? அதற்குள் அவள் என்னென்ன மனக்கோட்டை கட்டிவிட்டாள்....!

ரசனையிழந்து, முகம் வெளுக்க, ''போய் வருவோமே!'' என்றாள்.

''நான் போய் ஒரு 'டாக்ஸி' கொண்டு வருகிறேன்'' என்று விசுவநாதன் எழுந்து போனான். அவன் நடையில் கம்பீரத்தைக் கண்டாள் பிரேமா. தன்னையறியாமலே நீண்ட பெருமூச்செறிந்தாள்.

4

''ஏம்பா டிரைவர், இவ்வளவு அவசரமாகவா பிரேக்போடுவது? மெள்ளப் போனால் என்ன கொள்ளை?'' என்று திட்டிக் கொண்டே இறங்கினான் விசுவநாதன். அவன் முகம் வழியாக ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்ததைக் கண்ட பிரேமா துடித்துவிட்டாள். அவளாகவே ஓடி விசுவின் நெற்றியில் பட்டிருந்த காயத்தில் தன் கைக்குட்டையை வைத்து அழுத்திக் கொண்டாள்.

''விடு, விடு ஆஸ்பத்திரிக்கு.... அப்பா, நீங்க பின்னாலே ஏறிக் கொள்ளுங்கள்...'' என்று கூறி முன் ஆசனத்திலேயே அவள் உட்கார்ந்து கொண்டாள், நெருக்கியடித்துக் கொண்டு.

ரஸ்தாவின் ஊடே ஒரு ரிக்ஷா திடீரென்று வந்துவிடவே, டிரைவர் 'பிரேக்' போட்டுடாக்ஸியை நிறுத்

தினன். ஆனல் அஜாக்கிரதையாக உட்கார்ந்திருந்த விசுவநாதன், காற்றுத் தடுப்புக் கண்ணுடியில் மோதித் தன் மண்டையை லேசாக உடைத்துக் கொண்டான். கார் ஆஸ்பத்திரிக்கு விரைந்தது.

5

"அப்பா"

"என்னம்மா, பிரேமா?"

"நம்மால்தானே சூப்பிரண்டெண்ட் ஸாருக்கு இந்தக் கஷ்டம் அப்பா?"

"நாம் என்ன செய்வது? நான் எதிர்பார்த்தபடி நடந்து விட்டது. இதைக் கடவுள் செயல் என்று நான் சொன்னல் நீ ஒப்புக் கொள்ள மாட்டாய். இல்லையா? வந்து இந்தத் தையில்...."

"வந்துமாச்சு, போயுமாச்சு.... அப்பா, நான் ஒரு திடீர் முடிவுக்கு வந்து விட்டேன்"

"என்ன கண்ணு? சொல்லு...."

"நான் வந்து சூப்பிரண்டெண்ட் ஸாரையே மணந்து கொள்வதென்று தீர்மானித்து விட்டேன் அப்பா...."

"எல்லாம் அவன் செயல் அம்மா. தாயில்லாத பெண். உன்னை நான் வளர்த்துப் படிக்க வைத்தேன். உனக்கேற்ற ஒருவனிடம் உன்னை ஒப்படைக்க வேணுமென்பதுதான் என் கவலையெல்லாம்... நீயோ இதுவரை இந்தக் கிழவன் சொல்லைக் காது கொடுத்துக் கேட்டதில்லை. தாய் இல்லாததால் செல்லமாக வளர்ந்து விட்ட நீ உன் சுதந்திரப்படி நடக்க நான் அட்டி சொல்லியதில்லை. உன் விருப்பப்படியே உத்தியோகத்துக்குப் போனய். அக்கம் பக்கத்திலே உள்ளவர்கள் எல்லாம் ஏதேதோ பேசினர்கள். சில சமயம் என் மனம் கஷ்டப்படும். ஆனல், உன் மனசையும் கஷ்டப்படுத்த நான் விரும்பவில்லை. இப்போ, நீயே உன் விருப்பத்தைத் தெரிவித்துவிட்டாய். எனக்குச் சம்மதம்—சந்தோஷம்! பெரிய பொறுப்பும் என்னை விட்டு நீங்கிவிடும். உன் நல் வாழ்வுக்குத்தானே அல்லும் பகலும் நான் கவலைப்படுகிறேன். கடவுள் கிருபையால் சூப்பிரண்டுக்குக் குணமாகி விடட்டும். எல்லாம் மங்களமாக நடக்கும். அவர் சம்மதத்தையும் நானே கேட்டு விடுகிறேன். பின் அவர் குடும்பத்தாரிடம் கேட்கிறேன்."

"அப்பா என்ருல் அப்பாதான்!"

விசுவநாதன் சில தினங்களில் பூரண குணமடைந்து விட்டான். ஆனல் சர்மா எதிர் பார்த்தபடி எல்லாம் நடக்க வில்லை. தான் பிரேமாவை மணந்துகொள்ள விரும்பவில்லை என்று கூறி விட்டான் விசு.

இந்தச் செய்தி தலைமைத் தபாலாபீசில் கம்பியில்லாத் தந்தி மூலம் எட்டிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது, பிரேமாவின் நடையுடை பாவனைகளும் மாறி விட்டன. அவள் தோழிகளும், பிற



மிருதங்க வித்வான்: ஏம்ப்பா, நீ வீட்டிலே சாதகம் பண்ணறியா? கொஞ்ச நாளா அடிச்சு வாசிக்கிறியே?

சிஷ்யன்: சாதகம்னு பண்றதில்லே. நம்ப அடுத்த வீட்டுக்கார அம்மாள் கொஞ்ச நாளா தன் திருவாயைத் திறந்தா மூடறதே இல்லை. இடி முழக்கம் காதிலே பட வேண்டாம்னு மிருதங்கத்தை அடிக்கற பழக்கத்தைப் பண்ணிக்கிட்டேன்.

ரும் அவளது 'காதல் படையெடுப்பு' தோல்வியடைந்தது பற்றி நேரிலும் மறைமுகமாகவும் நையாண்டி செய்தனர்.

6

குமாரி பிரேமா வேலையை ராஜினாமா செய்துவிட்டாள். இச்செய்தி கேட்டு தலைமைத் தபாலாபீஸ் மட்டுமன்றி அருகிலுள்ள ஆபீஸ்களும், 'காண்டீ'னும் கூடக் களையிழந்து விட்டன.

''நமஸ்காரம், சார்'' என்று கூறியபடி சூப்பிரண்டெண்ட் வந்தான். சில தினங்களுக்கு முன் அவன் நெற்றியில் ஏற்பட்ட காயம் இப்போது வடிவாக மாறி அழகு கூட்டியது. பிரேமா உள்ளறையில் இருந்துகொண்டே அவன் வந்ததைக் கவனித்தாள்.

''வாருங்கள். சௌக்கியந்தானே?'' என்று வரவேற்று நலம் விசாரித்தார் சர்மா.

''எல்லாம் உங்கள் புண்ணியம்தான். பிரேமா வேலையை விட்டது முதல் எனக்கு வேலை அதிகமாய் விட்டது..... அவள் வேலையை விட்டிருக்க வேண்டியதே யில்லை.''

சர்மா பதில் சொல்லவில்லை. சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

''போகட்டும், சார். நான் என் கடமையை நிறைவேற்ற வேண்டிய தர்மசங்கடத்தில் இப்போது சிக்கிக் கொண்டிருக்கிறேன். உங்கள் தயவு தேவை...''

''என்னால் என்ன முடியும்?''

''அதற்கில்லை. என் அம்மா வாழ்க்கையில் ரொம்பக் கஷ்டப் பட்டவர்கள். அவர்கள் சொல்கிறதை நான் தட்ட முடியவில்லை. எனக்குக் காயம் பட்ட சமயம் ஊரிலேயிருந்து வந்த என் தங்கையும் அம்மாவும் துடித்துப் போய் விட்டார்கள். நீங்கள்தான் பார்த்தீர்களே! ஆனால் பிரேமா என்னைக் கவனித்துக்கொண்ட தன்மை அம்மாவை ரொம்பவும் கவர்ந்து விட்டது. பிரேமாவே தனக்கு மருமகப் பெண்ணாக வரவேணும் என்று பிடிவாதம் பிடிக்கிறாள். இந்த சங்கடத்துக்கு நான் என்ன செய்கிறது?''

சர்மாவின் கண்களில் ஒளி பிரகாசித்தது. ''எல்லாம் தெய்வ சங்கல்பம்!'' என்று மட்டும் கூறினார். உள் அறையிலிருந்து பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாள் பிரேமா. தன் உள்ளத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த தன் தாயின் படத்தின் கீழே குனிந்த வண்ணம் கைகூப்பி நின்றாள்.

7

சூப்பிரண்டெண்ட் விசுவநாதன் மணக்கோலத்தில் காட்சியளித்தான். அசல் பாரதப் பெண் திலகமாகக் காட்சி தந்தாள் பிரேமா.

ஒரு ரகசியம் — பிரேமாவிடம் இந்த நல் மாற்றத்தைத்தான் விசு எதிர்பார்த்தான். அதற்காகவே அவன் அவளை விரும்பாதது மாதிரி அந்த நாடகத்தையும் நடத்தினான். ஆம்; அவனுடைய முதல் மனமாற்றமே அவளுடைய முதல் மனமாற்றத்திற்கு வழி சொல்லிவிட்டது!

★

த. நா. குமாரஸ்வாமி சொல்லுகிறார் :

செம்பழம் போல் சூரியன் மேற்கு வானில் தொங்கிக்கொண்டிருந்தது.

எட்டி, இலவம், ஈகை, சூரை, காரை படர்ந்து, உள்ளங்காலை உறுத்தும் பரலும் கூழையும் நிறைந்த பாலை வெளி.

சிவிகையைத் தாங்கிக் கடுவேகமாக ஆட்கள் சென்றுகொண்டிருந்தனர். சிவிகையினுள் இருப்பவர் மனத்துள் அவ்வழகிய சூர்யாஸ்தமனம், சுத்த வெளியில் 'ஓ' வென்று ஒலிக்கும் பிரணவம் போல் பேரமைதியைத் தந்தது.

"நில்லுங்கள் இங்கே!" என்று கட்டளை பிறந்தது. நின்றனர் ஆட்கள். கீழே இறங்கினார் அப்பெரியவர். பக்கத்திலிருக்கும் அந்த எழிலைப்பாலையின் அடியில் ஒரு கல்லின்மீது அமர்ந்து தியானத்தில் இரண்டறக் கலந்தார். சுற்றிலும் ஒரே இருட்குவை. பல்லக்கைச் சுமந்த ஆட்களுக்கோ பயம்.

திடீரென்று "பிடி, பிடி, பிடி!" என்று கூச்சல் கேட்டது. கொள்ளைக் கூட்டத்தினர் தீப்பந்தங்களுடன் வந்துவிட்டார்கள். பல்லக்குத் தூக்கும் ஆட்கள் மூலைக்கு ஒருவராக முட் புதருக்குள் மறைந்தனர். கள்ளர்கள் உடனே சிவிகையைச் சூழ்ந்து கொண்டனர். அதில் ஒன்றுமே இல்லை.

மரத்தின் கீழ் தன்னையே மறந்து சிலைபோல வீற்றிருக்கும் பெரியவரைக் கண்டனர். ஏனோ அவர்களுக்குத் துணிவு பிறக்கவில்லை? ஒதுங்கினர். கள்வர் தலைவன் அவருக்குத் தண்டம் சமர்ப்பித்துவிட்டு நழுவினான். இரவெல்லாம் அவர் அந்த இடத்திலேயே அமர்ந்து என்றும் பெறாத ஓர் அமைதியை நுகர்ந்தார்.



"இந்த இடத்திலேயே ஓர் ஆசிரமம் கட்டிக்கொண்டு என் நாட்களைக் கழிப்பேன்!" என்று உறுதி பிறந்தது அவர் மனத்துள். அந்த இடமே இன்று 'சாந்திநிகேதன'மாக நிலவுகிறது. அந்தப் பெரியாரே கவியரசர் ரவீந்திரரின் தந்தையார் மகரிஷி தேவேந்திரநாத் டாகுர் ஆவர்.

'ஜீவனஸ்மருதி'யில் ரவீந்திரர் தரும் இந்த வரலாறு, சாந்திநிகேதனை நேரில் காண என்னைத் தூண்டியது. வங்க மொழி பயின்று கவியரசரின் ஒப்பற்ற இலக்கியங்களைப் படித்து இன்புற்ற எனக்கு ரவீந்திரரை நேரில் காணும் பாக்கியம் கிட்டியது.

'உத்தராயண்' அவர் இல்லம். அங்கு, சுகாதனத்தில் இருள் நிறமுடைய நீண்ட அங்கியுடன் உலகம் போற்றும் நம் கவிவாணர் காட்சி அளித்தார். அவருடைய பாத பங்கயங்களைத் தொட்டு வணங்கினோம். அச்சமயம் என்னிடத்துப் பொங்கி எழுந்த உவகையை என்னவென்று சொல்லுவது? வெள்ளி வெண் சிகை தாடியுடன் தேசோமயமான வேதகாலத்து ரிஷி ஒருவர் இன்றை உலகத்தில் வந்து இருக்கிறார் என்றே பிரமை மூண்டது. அவரது தோற்றத்தில் வேந்தர்க்குரிய காம்பீரியம்; மகுடம் வகிக்க வேண்டிய உன்னதமான நெற்றி; அறிவுச்சுடர் வீசும் விசாலமான கண்கள்.

குருதேவருக்கு என்னை அறிமுகப்படுத்தினார் டாக்டர் சட்டர்ஜி. கவியரசர் கேட்டதற்குத் தட்டுத் தடுமாறி வங்காளியிலேயே பதில் கூறினேன். அவர் ருஷியா

வில் தான் கண்ட விசித்திர அநுபவங்களைப் பற்றிப் பேசினர்.

வெளியே அசையும் தென்றலின் மெல்லோசை அவரது அற்புதமான பேச்சுக்குப் பின்னணிச் சுருதி மீட்டியது. செதுக்கிய சிலை போன்ற வடிவம். அந்த முக மண்டலத்தில் முக்கியமாக நம்மைக் கவர்வது வளைந்த அவ்வழகிய நாசியே. மலர் மணம் கமழும் அவ்விரலில் அவர் உள்ளம் எழுப்பும் யாழ் இசையை நாங்கள் மெய்ம்மறந்து கேட்டோம். பரிபக்குவம் நிரம்பி முதுமை பழுத்த இந்தக் கற்பக விருக்ஷத்தில் கவிதைக் கனிகள் தோன்றுவது ஓர் அதிசயமோ? எட்டாத சித்துருவைக் கண்டறிந்த மெய்ஞ்ஞானம் அம்மொழிகளில் பிரதிபலித்தது. எளிய வாழ்க்கையையே அவர் கடைப்பிடிப்பவர் என்பதை அவை அறிவுறுத்தின. ஞானக்கடல் எழுப்பும் பேர் அலை ஒன்று விசித்திர வர்ணங்களைச் சிதற விடுவது போல் இருந்தது. வெளிவரச் சக்தியற்று நம் மனத்துள் எழும் எண்ணங்களை, வண்ணத்திப் பூச்சியினது இறகின் லாகவத்துடனும் பெரிய நீர்வீழ்ச்சியின் விசையுடனும் அவர் ஒப்பிட்டு அநாயாசமாக எடுத்துச் சொன்னதுதான் அதிசயமாக இருந்தது. பொன் இறகு படைத்து, நாங்களும் கவிதை வானில் சில கணம் பறந்து திரிந்தோம். அழியாததோர் லட்சியத்தை நோக்கிச் செல்லும் நித்திய யாத்திரிகர்களுள் அவரும் ஒருவர் என்பதை நான் உணர்ந்தேன்.

அப்பால் இருபது ஆண்டுகள் கழிந்துவிட்டன.

நான் இப்போது முதுமையின் எல்லைக்குள் வந்து விட்டேன். ஆனல் அன்று நான் கண்ட அந்த அற்புதக் காட்சி என் நயனம் விட்டு இன்றும் அகலாமல் இருக்கிறது. அவருடைய தீங்கவிதைகளில் ஊறும் இன்சுவையே இந்த நினைவை வாட விடாமல், என் மனத்துள் பசுமை காட்டிக் காத்து வருகிறது! ★



மாப்பிள்ளையின் தகப்பனர்: வரதட்சிணை விஷயம் தீர்ந்திடுச்சு. பெண்ணும் பிடிச்சிருக்கு. ஆன ஒரே ஒரு நிபந்தனை! எங்க பையனின் பாட்டுக் கச்சேரி நடக்கும் சமயத்தில் மட்டும் தாங்கள் உற்றார் உறவுடன் குடும்ப சமேதராக வந்து, கடைசி வரை இருந்து கச்சேரியை ரசிக்க வேணும்........!

இசையும் இசைவும்

ஜெயகாந்தன்

'எந்த்தவேடு கொந்து ஓ, ராகவா' என்ற கீர்த்தனை அடிகளின் இன்பநாதம் காற்றில் மெல்லெனக் கலந்து மிதந்து கொண்டிருந்தது.

அப்பொழுதுதான் ஆபீசிலிருந்து வந்த ராகவன் சட்டையைக் களைந்துவிட்டு, துண்டையெடுத்து மேலே போர்த்துக்கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தான்.

'.... ஓ, ராகவா... !' — சரஸ்வதி மனோகரி ராகத்தில் அந்தக் கடைவார்த்தை குழைவுடன் புரண்டு கொண்டிருந்தது. ஒலி எங்கிருந்து வருகிறது என்று அவனுக்குத் தெரியும். அந்த அறைக்கு அவன் குடிவந்த தினங்களிலிருந்து இன்றுவரை அவனுக்குப் பரிச்சயமான குரல்–பரிச்சயமான பாடல்–பரிச்சயமான உணர்ச்சி.

எதிர் வீட்டு மாடி ஜன்னலில் பசுமையும், நிறமற்ற பளபளப்பும் இழைந்து மின்னும் இரட்டைவர்ணப் பட்டுப் புடவையின் முன்றானை காற்றில் அசைந்தாடுகிறது. கொடியில் கிடக்கும் துணிகளை அவள் மடித்து வைக்கிறாள். இத்தனை நாட்களாக வீட்டிலுள்ள வேலைக்காரிதான் அந்த வேலையைச் செய்து வந்தாள். கொஞ்ச நாட்களாகத் திடீரென்று இவளுக்கு குடும்பப் பொறுப்பு வந்துவிட்டது – ஜன்னல் புறத்தைப் பொறுத்த வரைதான் !

'எந்த்தவேடு கொந்து ஓ, ராகவா'—ராகவன் தனக்குள் மெள்ளப் பாடிக்கொண்டான். அவனுக்குச் சங்கீதம் தெரியும்; பாடத்தெரியாது. குரல் நன்றாக இருக்காது என்ற எண்ணம் அவனுக்கு. அதனால் பாடுவதில்லை. ஆனால் ரசிக்காமல் இருக்க முடியுமா?

அந்த அறைக்கு வந்த சில மாதங்களாகத் தினசரி காலையிலும் மாலையிலும் நல்ல இசை விருந்து ராகவனுக்கு.

எதிர்வீட்டுப் பிராமணர் வேலை பார்த்து ஓய்வு பெற்ற டாக்டர். நிறையப் பணம். தனி வீடு, கார், ரேடியோ இத்யாதி வசதிகள். ஜானு அவருக்கு ஒரே பெண். கல்லூரியில் படித்தவள்; பட்டம் பெற்றவள்; சங்கீதம் கற்றவள்; நாட்டியம் ஆடப் பயின்றிருக்கிறாள். அவளுக்கென்ன, நினைத்தது நடக்கும் !

* * *

ராகவன் குடியிருந்த அறைக்குப் பின்புறமிருந்த சிறிய வீட்டில் வசிக்கும் அலமேலு அம்மாள் தான் அவனுக்குச் சாப்பாடு போட்டு வருகிறாள்.

அலமேலு ஏழை; கணவனை இழந்தவள்; ஆதரவற்றவள். ராகவனைப் போன்ற வெளியூர்க்காரப் பிள்ளைகள் சிலருக்குச் சாப்பாடு போடுவதன் மூலம் அவளுக்கும் அவள் மகளுக்கும் சாப்பாட்டுப் பிரச்னை சிரமமின்றித் தீர்கிறது.

அபிராமி, அலமேலுவின் ஒரே புத்திரி. பெண்தான் என்றாலும், அலமேலுவுக்கு அபிராமி பாரமில்லை; பிடிப்பு–வாழ்வின் நம்பிக்கை. அபிராமிக்கு வயது பதினைந்துதான். வளர்ந்து விட்டாளே ஒழிய, குழந்தைக் குணம் போகவில்லை. எவ்வளவு கஷ்டப்பட்டாவது தன் மகளைப் 'பத்து கிளாஸ்' வரைப் படிக்க வைத்துவிட வேண்டுமென்ற ஆவலுடைய அலமேலுவைத் தரித்திரம் பிடுங்கித் தின்றது.

பள்ளிக்கூடத்துக்குப் போனால் பட்டுப் பாவாடை வேண்டாமா? காதில் மூக்கில் ஒன்றுமில்லா விட்டாலும், எல்லோரும் போட்டுக் கொள்ளும் 'எக்ஸிபிஷன் முத்து மாலை' யாவது வேண்டாமா? நகைகளைப் பூட்டித் தன் மகளைக் கண் குளிரப் பார்க்க அலமேலுவுக்கு ஆசைதான். வழி ....?

நகையும் நட்டும் இல்லாமல் பட்டும் ஜரிகையும் இல்லாமல் அபிராமி அழகாக இருந்தாள். அழகு என்றால் ஆளை மயக்கிக் கிறக்க வைக்கும் மோகன வசிகரம்.

இத்தனை அழகு இருந்தும், குரல் ராகவனின் குரல் மாதிரிதான். சகிக்க முடியாத கரகரப்பு. அவளுக்குப் பாட வேண்டுமென்ற ஆசை. ஓயாமல் கத்திக் கொண்டிருப்பாள். அவளுக்கு ராகம் தெரியுமா, தாளம் தெரியுமா, ஸ்வரம் தெரியுமா, லயம் தெரியுமா? பாடத் தெரியுமென்று மட்டும் அவளே நினைத்துக்கொண்டாள். பலன்? ராகவனின் காது கிழிபடும்.

அந்த மாதிரிச் சமயத்தில்தான் எதிர் வீட்டு மாடியிலிருந்து, ஆர்மோனியப் பெட்டி சகிதமாக சுருதி கெடாமல் தாளம் பிறழாமல் லயத்துடன் இனிமையை வாரி வழங்கும் அந்த மோகனத் தோற்றம். ராகவன் எதிர்வீட்டு இசையில் அப்படியே மயங்கிக் கிடப்பான்.

'ஸரஸ.... ஸாம.... தான.... பேத.... தண்ட சதுர....' — மெல்லக் கிளம்பி அவன் உள்ளத்தைக் கவ்வும் அந்த இசையில் அவன் அப்படியே லயித்துக் கிடப்பான்.

"என்ன ராகம்?" என்று அவன் மனம் ஆராயும்.

"காபி நாராயணி ராகம்... ஆகா....!" – தாளம் போட்டுக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விடுவான்.

திடீரெனப் பாட்டு நின்றுவிடும். அவன் பார்வை எதிர்வீட்டு மாடி ஜன்னலை நோக்கித் திரும்பும்.

'ஓ, ராகவா' என்று வேறொரு ராகத்தில் அவள் குரல் இழையும்; குரலில் குறும்பு துள்ளும். எந்தச் சமயத்திலும் அந்த ஒரு பாட்டு குறுக்கே விழுந்து இடைமறிக்கும். அதுவும் அந்த 'ஓ, ராகவா...' மட்டும் தெளிவாக ஒலிக்கும்.

அவனும் அவளை முகம் திருப்பிப் பார்க்க ஆரம்பித்தான். அப்பொழுதெல்லாம் சங்கீதம் தடைப்படும். மெல்லிய புன்னகை இதழ்களில் அரும்பித் துடிக்கும். முன்றானை காற்றில் படபடக்கும்.

இப்படியே அறுபது நாட்கள்!

* * *

இப்பொழுதெல்லாம் ஒருவரை ஒருவர் பார்ப்பதும், சிரிப்பதும், அவளுடைய சங்கீதத்துக்கு அவன் 'சபாஷ்' போடுவதும், இலை மறை காயாய்ப் பேசுவதும் சகஜமாகி விட்டது. ''ஜானு.... ஜானு'' என்று அவன் மனம் அவளுக்காக மறுகுவதும் அதிகமாகி விட்டது. 'அவள் மட்டும் என் வாழ்க்கையில் எப்பொழுதும் என் கூடவே இருந்து விட்டால்.... ஆகா, அவள் சங்கீதத்துக்கே என் வாழ்வை அர்ப்பணித்து விடலாமே....' என்றெல்லாம் அவன் மனம் பாண்டி விளையாடும். அவள் இல்லாதபோது தன்னிடமிருந்து ஏதோ விலகி வெகுதூரம் போய்விட்டது போன்ற உணர்வு. அவனுக்குத் தெரிந்தோ தெரியாமலோ அவளுள் அவனுகிக் கொண்டு வந்தான் ராகவன்.

'ஸ்ரீ ஸரஸ்வதே நமஸ்துதே....' ஆரபி ராகம் அலாதியான இனிமையுடன் இசை எழுப்பிக் கொண்டிருந்தது.

ராகவன் மெய்ம்மறந்து போனான். சங்கீதம் அசரீரியாக இருந்தால் எல்லோராலும் அதை ரசிக்க முடியுமா? சுருதியுடன் லயமும் கூடினால் மாத்திரம் போதுமா? இசையுடன் இசைவாணியின் எழிலும் இணையும் போதுதானே 'ஆஹா!' என்ற பாராட்டுதல் புறப்படுகிறது!

அப்பொழுதுதான் அங்கே வந்தாள் அபிராமி. அவளுக்கு சங்கீதம் தெரியுமா? சாஸ்திரம் தெரியுமா? எது தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் ராகவனின் நிலை, பலவீனம் தெரிந்துவிட்டது.

''எல்லோரும் வந்து சாப்பிட்டுப் போயாச்சே.... நீங்க வர்லே?'' என்று அவள் திடீரென்று கேட்கவே, ஜானுவின் கண்களில் — இசையில் மயங்கிக் கிடந்த ராகவன் திடுக்கிட்டுத் திரும்பினான்.

''ம்.... அதுக்குத்தான் புறப்பட்டேன்....'' என்று சொல்லி அவன் சமாளித்தான். அவள் சிரித்ததும், பார்த்ததும் ராகவனுக்கு என்னவோ போல் இருந்தது. ஜானுவின் பார்வைக்கு மாற்றுப் பார்வையாக, மாற்றுச் சிரிப்பாக, மாற்றுத் தோற்றமாக அவள் காட்சி தந்தாள்!

* * *

''இன்னிக்கு வத்தல் குழம்பு எப்படி இருக்கு?''

''பிரமாதம்!''

''என்ன பிரமாதம்?''

''வத்தல் குழம்புதான்!''

''எதிராத்து சங்கீதமோன்னு நெனைச்சேன்''

ராகவன் தலை நிமிர்ந்து பார்த்தான்.

அவள் குழந்தை மாதிரி அழகு சிந்தச் சிரித்தாள்.

தண்ணீர் குடிக்கும் போது அவள் முகத்தைப் பார்த்

தான். அவள் முகம் சோர்ந்து இருந்தது.

"உன் சமையல் ரொம்ப நல்லாயிருக்கு...."

"போதும் சர்ட்டிபிகேட். அந்த ஜானு போட்டிருக்காளே முத்து மாலே, ரொம்ப நன்னருக்கில்லே. அவ அப்பா வாங்கிப் போட்டது."

"உனக்கு நகை மேலேயே ஞாபகம்"

"உங்களுக்கு?"

".... ...."

"என்ன அப்பிடிப் பார்க்கறேள்?"

"உனக்கு ஒரு முத்து மாலே போட்டா எப்படி இருக்கும்னு பாத்தேன்...."

அவன் வெளியே சென்று கை அலம்பினுன். அபிராமி இலேயெடுத்துச் சென்றவள், அவனேப் பார்த்த வண்ணம் அப்படியே நின்ருள். அவள் கண்கள் கலங்கின. அடுக்களேயில் இருந்த ஹரிக்கேன் விளக்கின் மங்கிய ஒளி அவர்கள் நின்ற இடத்தில் வீசிக்கொண்டிருந்தது.

"இன்னிக்கு ஸ்கூலுக்கு பீஸ் கட்டணும். இல்லேன்னு ஆத்துக்கு வர வேண்டியது தான்" என்று அவள் விம்மினுள்.

"அசடே, ஏன் அழறே?....நான் பணம் தர்ரேன்" —அவன் கைகள் அவளுடைய தளிர்க் கரங்களேப் பற்றின. அவன் மார்பில் அவள் முகம் புதைத்தாள். அவன் மனம் அவளுக்கு உதவி செய்யத் துடித்தது. தன் மீது அவள் கொண்டுள்ள அன்பைப் புரிந்துகொண்டதில் அவன் எக்களித்தான். ஜானுவை விட அபிராமி அழகி தான். அழகைக் கொடுத்தவன் ஐசுவரியத்தைக் கொடுக்கவில்லே!

* * *

திருப்பள்ளியெழுச்சிப் பாசுரம் எதிர்வீட்டு மாடியிலிருந்து மிதந்து வந்து கொண்டிருந்தது. அங்கே ஜானு நின்று கொண்டிருந்தாள். பந்தமற்று உணர்ச்சியற்று அவன் பார்வை அவள்பால் சென்று திரும்பியது. கழுத்தில் ஒளி வீசிய முத்து மாலே அவன் கண்களில் பட்டுத் தெறித்தது.

ராகவனின் நண்பன் பாலு வந்தான்.

"என்ன ராகவா, ஒரு மாதிரியா இருக்கே, காதல் ஜுரமா?"

"போடா, உனக்கு எப்பவும் விளேயாட்டுத்தான். நம்ப அபிராமி இல்லே, அவ ஸ்கூலுக்கு பீஸ் கட்டணம்னு பணம் கேட்டா. என்கிட்டே பணம் கேட்க்கறத்துக்குள்ளே பாவம் அழுதுட்டா...."

"அவ அழுதா; நீ கண்ணேத் தொடைச்சியாக்கும்"

"ஆமாம்டா, ஆமாம். இப்போ அவ என்கிட்டே அப்படித்தாண்டா பழகரு"

"சரிதான்"

"என்ன சரி தான்?"

"போடா மண்டு, அவ அப்படித் தான். போன மாசம் என் கழுத்தைக் கட்டிக்கிட்டு அழுது பீஸுக்கு பணம் வாங்கிட்டுப் போனுள். நான் கூட உன் போலத் தான் பெரிசா நினேச்சேன். ம்...., அவ கொழந்தைடா!"

"குழந்தை! ம், நீ அவளேக் காலேயில்வரச்சொல்லு; பணத்தை வாங்கிட்டுப் போகட்டும். பாவம், அபிராமி!"

"அபிராமிக்கு நம்ம மாதிரி ஆண்கள் மனம் நன்ருகப் புரிஞ்சிருக்கு!" என்று சிரித்தான் பாலு. ராகவனுக்குச் சிரிக்க முடியவில்லே.

'அபிராமியின் எதிர்க்காலம்'—ராகவனுக்குப் 'பகீ'ரென்றது.

அபிராமி வந்தாள்.

"இந்தா அஞ்சு ரூபா"

"ரொம்ப தாங்க்ஸ்!"

''அபிராமி நான் கேக்கறதுக்குப் பதில் சொல்லணும். எம்மேலே உனக்கு விருப்பமா?...''

அவள் தலை குனிந்து நின்றாள். கையிலிருந்த ஐந்து ரூபாய் நோட்டு நடுங்கியது. கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன.

''இல்லே! ஸ்கூல் பீசுக்குத்தான் பணம் கேட்டேன்.''

''பின்னே நேத்திக்கு ஏன் அப்படி நடிச்சே?''

''அ்ப்பா... அப்பா ஞாபகம் வந்தது... அதனாலே.... ஹீம்...''

சிறு குழந்தை மாதிரி முகத்தை மூடிக் கொண்டு அழுதாள் அபிராமி.

ராகவனுக்கு மனத்தை என்னவோ செய்தது.

''அசடே, எதுக்கு அழறே?... வெளையாட்டுக்குன்னு நான் கேட்டேன். இதுக்காக அழறியே! உன்னைத் தெரியாதா எனக்கு?.... சாயங்காலம் வரச்சே கட்டாயம் உனக்கு முத்து மாலை வாங்கிண்டு வர்ரேன்.''

''வேண்டாம், எனக்கு முத்து மாலை வேண்டாம்'' என்று விம்மலுக் கிடையே கூறிக் கொண்டு அவள் போய் விட்டாள்.

ராகவனின் கண்கள் கலங்கின.

அவளைப் பற்றி ஏதும் தவறாகக் கணித்து விட்டோமோ என்றெண்ணிய பொழுது, அவன் மனம் பதைத்தது, பாவம், அபிராமியின் ஏழ்மைதானே அவளைப் பற்றி எதையும் நினைக்கத் தூண்டுகிறது.

இரவு, மணி பதினொன்று.

'எந்தவேடு கொந்து ஓ ராகவா...' என்ற இனிய கானம் எதிர்வீட்டிலிருந்து வழக்கம் போலக் காற்றில் மிதந்துவந்தது. அவனால் இப்போது அதை ரசிக்க முடியவில்லை. அழகு ஒளி சிந்த, ஆபரணங்கள் கண் சிமிட்ட ஜன்னலருகே நின்றிருந்தாள் ஜானு. அவள் கழுத்திலிருந்த முத்துமாலை கண்ணைப் பறித்தது. 'ஜானு

வாடிக்கைக்காரர்: என்ன கடைக்காரரே, இத்தனை நாளா நீங்கள் தயிர் தந்ததில் இன்னிக்குக் கொடுத்த தயிர்தான் நன்றாக இருந்துச்சு!

கடைக்காரர்: அப்படின்னா, இன்னிக்குத் தந்த தயிரையே எடுத்துவச்சு நாளைக்கும் தந்திடறேனுங்க!

வாழும் உலகத்தில்தான் அபிராமியும் வாழ்கிறாள்....' என்று நினைத்த ராகவனின் மனம், ஜானுவின் அந்தத் தோற்றத்தை, அந்த இசையை, அவளையுங் கூட வெறுத்தது!

'ஐயோ, அபிராமி!' என்று முகத்தை மூடிக்கொண்டான் ராகவன்.

''ஓ, ராகவா...''

''ஐயோ, அபிராமி....''

''ஓ, ராகவா....''

ஜன்னல் கதவைப் படீரென்று மூடினான். அவன் மனக் கதவும் மூடிக் கொண்டது.

* * *

அதோ! அபிராமி கள்ளங் கபடமற்ற உள்ளத்துடன் பேதைக் குரலில் பாடிக் கொண்டிருக்கிறாள். ஏதோ ஒரு பாட்டு. ராகம் இல்லை; தாளம் இல்லை. அபஸ்வரம்!– அபிராமியின் இதயத்தில் மாத்திரம் ராகம்! ★

கவிஞர் தரும் காட்சி

3. நெடுநல்வாடையில் அரண்மனை

'நெடுநல் வாடை'யில் நாடும் மக்களும் வழங்கிய காட்சியை வனப்புமிக்க சொல்லோவியமாகத் தம் நூலின் முற்பகுதியில் முதல் எழுபத்து மூன்று அடிகளில் சித்திரித்துக் காட்டிய நக்கீரர், அடுத்துப் பாண்டியன் அரண்மனையையும் அந்தப் புரத்தையும் நாற்பத்தொரு அடிகளில் நற்றமிழ் ஓவியமாய்த் தீட்டிக்காட்டும் திறம் தமிழ் உணர்ச்சி படைத்தார்க்குப் பெரு விருந்தாக அமைந்துள்ளது.

சித்திரை மாதம். முதல் பத்து நாட்களும் கடைசிப் பத்து நாட்களும் போக, இடைப்பட்ட பத்து நாட்களில் ஒருநாள். பதினைந்தாம் நாழிகை, நல்ல நேரத்தில், சிற்ப நூல் வல்லார் நூல் பிடித்துப் பார்த்தனர். திசைகளின் திறம் அறிந்தனர். அத்திசைகட்கு உரிய தெய்வங்களை வழிபட்டனர். தெய்வ வழிபாட்டு உணர்ச்சியோடு திருவுடை மன்னர் வாழ்தற்கு உரிய பெருமை படைத்த மனைகளையும் வாயில்களையும் மண்டபங்களையும் வகுத்தார்கள். அவற்றையெல்லாம் உயர்ந்த மதிலொன்று வளைத்து நின்றது. அதன் வாயில் ஆணிகளும் பட்டங்களும் ஆகிய இரும்பால் கட்டப்பட்ட செவ்வரக்கு உருக்கிப் பூசப்பெற்ற தாழ்ப்பாள்களோடு கூடிய இரு பெருங் கதவுகளைக் கொண்டிருந்தது. உத்தரமென்னும் நாளின் பெயர்பெற்ற உத்தரத்தின் நடுவில் இலக்குமியும், இரு புறங்களிலும் செங்கழுநீர் மலர்களை ஏந்திய இரு பிடிகளின் உருவங்கள் அமைந்த கஜலட்சுமியின் தோற்றமும் பெருமிதம் பொங்க விளங்கியது. நிலைகளில் உறையும் தெய்வங்கட்கு வெண்சிறு கடுகும் நெய்யும் நிரம்ப அப்பப் பெற்றிருந்தன. மதிலின் வாயில்கள் மலையை இடையே குடைந்தாற் போலத் தோற்றம் சான்றனவாயிருந்தன. வெற்றிக்கொடி ஏந்தி யானைகள் மீதமர்ந்த வீரர்கள் தம் கொடியினைச் சிறிதும் தாழ்த்தாமல் நேரே உட்புகும் அளவிற்கு ஓங்கி உயர்ந்த நிலை வாயில்களைப் பெற்றிருந்தன அம்மதில்கள். வாயிலிடத்தே நெடிய மயிரும் தூய நிறமும் உடைய வரிமாவும், குறிய காலினையுடைய அன்னமும் தாவித் திரிந்தன. வெண்மணல் பரந்த அழகிய முற்றம் இலக்குமி தங்கும்எழிலும் ஏற்றமும் பெற்றிருந்தது. அருமையும் பெருமையும் சான்ற இவ்வழகிய காட்சியை நக்கீரர் தம் கவிதைக் கண்ணாடியில் கவினுறக் காட்டும் தகைமையினைக் காணுங்கள் :

நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப
                    மனைவகுத்
தொருங்குடன் வளைஇ ஓங்குநிலை
                    வரைப்பிற்
பருவிரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇத்
துணைமாண் கதவம் பொருத்தி
                    இணைமாண்டு
நாளொடு பெயரிய கோளமை
                    விழுமரத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி
                    காலமைத்துத்

ந.சஞ்சீவி, எம்.ஏ.

தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்
தையவி யப்பிய நெய்யணி நெடுநிலை
வென்றெழு கொடியொடு வேழஞ்
சென்றுபுகக்
குன்றுகுயின் றன்ன ஓங்குநிலை வாயிற்
திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பில்
தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து
நெடுமயிர் எகினத் தூநிற வேற்றை
குறுங்கால் அன்னமோ டுகளு முன்கடை.
(76–92)

[ஐயவி—வெண்சிறு கடுகு; வேழம்—யானை; எகினம்—கவரி மா; உகளும்—தாவித் திரியும்; நாளொடு பெயரிய—உத்தரமென்னும் நாளின் பெயர் பெற்ற]

இனி, அரண்மனையின் உள்ளே அமைந்துள்ள காட்சிகளைப் பார்ப்போமா?

வரிசையிலே நிற்றலை வெறுத்த பலவாகிய பிடரி மயிரையுடைய குதிரைகள் புல்லாகிய உணவைக் குதட்டுங்கால் ஓசை எழும். அவ்வோசையில் அவற்றின் தனிமை உணர்ச்சி எதிரொலிக்கும். அரண்மனையின் மேல்தளத்தில் பாண்டி மன்னன் திங்களின் பயனை நுகரும் நெடிய வெள்ளிய நிலா முற்றம் இருந்தது. அம் முற்றத்தில் நீர் நிறைந்து, கொப்பளிக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட குழாய் மீனின் அங்காந்த வாய் போல் விளங்கியது. அக் குழாயில் நீர் பெருகிக் கலங்கி வீழ்வது அருவியின் ஓசையை ஒத்திருந்தது. அதன் அருகே தழைத்த தோகையும் மெல்லிய இயல்பும் உடைய கலாப மயில்கள் அகவும் ஓசை, ஆரவாரிக்கும் கொம்பின் இசை போன்றிருந்தன. இத்தன்மையால் பாண்டி நாட்டு வேந்தனின் அரண்மனை, செறிந்த பெரிய மலையின் ஆரவாரத்தைப் போல் இருந்தது.

அரண்மனையின் நெடிய சுவர்கள் செம்பினால் செய்தாற் போன்று அமைந்திருந்தன. அவற்றில் விளங்கிய அழகிய வேலைப்பாடுகளின் அருமை சொல்லும் தரமன்று. ஆங்காங்கே பற்பல இடங்களிலும் வெள்ளி போன்ற நிறம் படைத்த சாந்தினை வாரிப் பூசப் பெற்ற அச் சுவர்களில் வடிவழகினை யுடைய பல பூக்கள் நிறைந்த வல்லி சாதியாகிய எழில் பூத்த கொடிகள் வரையப் பெற்றிருந்தன.

விண்முட்ட உயர்ந்த பாண்டியனின் கோயிலில் பட்டொளி வீசிக் கொடிகள் பறந்த வண்ணம் இருந்தன. ஓங்கி உயர்ந்த மலைகளில் பன்னிற இந்திரவில் கிடந்தாற் போல அவை இருந்தன. அரண்மனையில் யவனர் செய்த வேலைப்பாடமைந்த பாவை விளக்குகள் பொலிந்தன. அவற்றின் கையில் பொருந்திய பெரிய தகளிகளில் நிறைய நெய் வார்க்கப்பட்டிருந்தன. அவ் விளக்குகளில் போடப்பட்டிருந்த பருத்த திரிகளில் ஏற்றிய தீபம் சிவந்த நிறத்தோடு தலை நிமிர்ந்து மேனோக்கி எரிந்து, ஒளி பரப்பிப் பாண்டியன் புகழ் போன்று பிரகாசித்தது. அச்சுடர்கள் 'சிட்டை' கட்டியதாலோ நெய் வற்றியமையாலோ ஒளி மங்குமேல், நெய் வார்த்துத் தூண்டி, எங்கும் ஒளி பாயச் செய்பவன் பெருமை பொருந்திய தலைமை சான்ற பாண்டியனே ஆவான். ஆம்; அவனையன்றி அரண்மனையிலேயே இருந்து சிறு குறுந்தொழில் செய்யும் ஆண் மக்களும் அணுக முடியாது. அவ்வளவு அரிய காவல்கள் நிறைந்த கட்டுக்கள் மிகுந்தது, விண்ணினும் மண்ணினும் விஞ்சு புகழ் வாய்ந்த வழுதியின் பெருங் கோயிலுக்குக் கருவாய் அமைந்த அந்தப்புரம்.

இவ்வாறு பழந்தமிழ் வேந்தனின் மாட்சியைப் பல்வகையாலும் தெரிவிக்கும் காட்சியாக அமைந்த அவன் கோயிலை நம் அகக் கண்களின் முன்னே அழியா ஓவியமாய் என்றென்றும் விளங்குமாறு செய்துள்ள நக்கீரனரின் இலக்கியம், பயில் தொறும் பண்புடையார் தொடர்பு போல் நவில் தொறும் நயம் பயப்பது என்ற

உண்மை பின்வரும் அடிகளாலும் விளங்குவது உறுதி.

பணைநிலை முனைஇய பல்லுளைப் புரவி
புல்லுணாத் தெவிட்டும் புலம்புவிடு குரலொடு
நிலவுப்பயன் கொள்ளு நெடுவெண் முற்றத்துக்
கிம்புரிப் பகுவாய் அம்பண நிறையக்
கவிழ்ந்துவீழ் அருவிப் பாடுவிறந் தயல
ஒலிநெடும் பீலி ஒல்க மெல்லியல்
கலைமயில் அகவும் வயிர்மருள் இன்னிசை
நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில்
யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கையேந் தையக நிறையநெய் சொரிந்து
பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி
அறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிருள் நீங்கப்
பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை யல்ல
தாடவர் குறுகா அருங்கடி வரைப்பின்
வரைகண் டன்ன தோன்றல வரைசேர்பு
வில்கிடந் தன்ன கொடிய பல்வயின்
வெள்ளி அன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரள் திண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பின் நல்லில்.
(93–114)

இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த அரண்மனையில்— அந்தப்புரத்தில் வாடையால் வாடி வருந்தும் தலைவியின் நிலையையும், அவள் உள்ளத்தில் கோயில் கொண்ட உத்தமனின்— வீரத் தலைவனின் நிலையையும் அடுத்த கட்டுரையில் காண்போம். ★

வாத்தியாரம்மா

ராஜம் கிருஷ்ணன்

"நேத்துங் கூடத்தான் ராவு அந்தப் பய வூட்டுக்கு வாரையிலே கூட்ஸ் வண்டி போயிருச்சு. கண்ணு செவேல்ன்னு இருந்திச்சு; வாடை கூட அடிச்சுது."

"அட பாவமே!"

"பாவமாவது, புண்ணியமாவது, ஆத்தா? அவ தலைவிதி" என்று கூறிக்கொண்டே பருத்திக்காரச் செங்கமலத்தம்மா வெற்றிலைச் சாற்றை உமிழ்வதற்காக எழுந்தாள்.

"கேட்டாயா, கண்ணம்மா? மாணிக்கத்தின் மகனைப் பத்திக் காலமே சுப்பையா சொன்னது நிசந்தானும்."

"அப்படியா, செங்கமலத்தம்மா? சிறு பையன், அப்படித் தப்புத்தண்டாவுக்குப் போவானு? சட்டத்துக்கு மீறிச் செஞ்சா இந்தக் காலத்திலே அம்பிட்டுச் சுலபமாகப் போயிடுமா?" என்றேன் நான்.

"சிறு பையன். என்ன சிறு பையன்? தை நோம்புக்கு வயிசு பத்தொம்பதாச்சே?" என்ருள் செங்கமலத்தம்மாள். குரலில் கனத்த கோபம்.

"காசு பணத்தைக் கொண்டாந்து அம்மாளிடம் கருக்காக் கொடுக்கிருனே இல்லையோ?"

"அதானே ஆத்தா இல்லே. அப்பன் எப்படி இருந்தானே, அதே அச்சுத்தான். அவன் சாமர்த்தியம், பேச்சு, போக்குவரத்து எல்லாம் அதேதான். இனிமே என்ன கேள்வி, கண்ணம்மா? அந்த நாளிலே பள்ளிக்கொடம் போறேன்னுட்டு, அது இதுன்னு அவகிட்டக் காசு வாங்கிப் போயி கோயமுத்தூர் காபிக் கடையிலும் சினிமாவிலும் தொலைச்சிட்டு வருவானே, அப்பவே அந்தப் பய எப்பிடி முன்னுக்கு வருவான்னு எனக்கு தெரியும். என்ன செய்யிவா அவதான்?"

"ஐயோ, பாவம். அவங்க கஷ்டத்துக்கு முடிவே கிடையாது போலிருக்குது."

"அது அவ பாக்கியம். ஏ கண்ணம்மா, பள்ளிக்கொடத்துப் பணம் அவளுக்கு ஆயிரத்துக்கு மேலே வருமாமே? நிசந்தானு?" என்று ஆவலுடன் தலையை நீட்டி விசாரித்தாள் செங்கமலம்.

"இருக்குமே; இருபது வருஷத்துக்கு மேலா வேலை செய்திருக்கிருங்கல்லே?"

நான் தேநீரைக் குடித்துவிட்டு வெளியே வந்தேன்.

*

எனக்குத் தெரிந்து செங்கமலத்தம்மாள் கணக்கில் கூட்டுறவுப் பாங்கி நிதியில் இரண்டாயிரத்துச் சொச்ச ரூபாய்கள் இருக்கின்றன. மடி நிறையச் சில்லறையைக் கட்டிக்கொண்டு முச்சந்தியில் உட்

கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்கிருன் ஒருவன். அந்த ஒருவனுள் விசித்திரமான குணச்சித்திரங்கள் மூன்று உள்ளடங்குகின்றன. பெண் குரல் சொல்லும் துயரக் கதைக்குச் சில பக்கங்கள் இதோ.........!

7

கார்ந்து கூலிக்காரர்களிடம் பருத்தி வாங்குகிறாள். பொதி பொதியாகச் சேர்த்து மில்லில் கொண்டு போய்க் கொடுத்துப் பணம் பண்ணுகிறாள்: கொடுக்கல் வாங்கல் செய்கிறாள். வீடு இருக்கிறது. சோளம் விளையும் காடு இருக்கிறது. அவளோ ஒண்டிக் கட்டை. கிளையோ, காயோ, பூவோ, கொம்போ ஒன்றும் கிடையாது. இருந்தும், மாணிக்கத்தின் வாடகைப் பணம் சொள்ளைக் காசு முப்பது ரூபாய் வந்துதான் கிணறு ஒரு முழம் வெட்டவேண்டும், ஓடு மாற்றவேண்டும் என்று சொல்லுகிறாளே?

அவளுக்குப்பின், அவள் பாடுபட்டுச் சேர்க்கும் அந்தப் பொருளை யாரோ அடையப் போகிறார்கள்! மாணிக்கத்தின் கஷ்ட நஷ்டங்களைக் குறித்து வீடு வீடாகப் போய் வம்பு பேசும் அவள், கொஞ்சம் அந்தக் கஷ்ட நஷ்டங்களை உணர்ந்தவளாக நடக்கக் கூடாதா?

பெண் பொல்லாதவளாக இருந்து, அவளைக் கொண்டவன் அவளால் அல்லலுறுபவனாக இருந்தால், அவன் பக்கம் கூடி இருந்து கொண்டு அந்தப் பெண்ணைப் பற்றி ஏசிப் பேச ஊரார் கச்சை கட்டிக் கொள்கிறார்கள். வீட்டுப் பொறுப்பு, வெளிப் பொறுப்பு என்ற இரு மகத்தான பொறுப்புக்களையும் நிர்வகித்துப் புன்னகை மாறாமல் நிற்கும் பெண்ணொருத்திக்கு, விலங்காத் தொல்லை கொடுக்கும் கொண்டவனை ஏசவோ, அவள் பக்கம் அநுதாபமாகப் பேசவோ அதே ஊரார் முன் வருவதில்லை. அவள் தலைவிதியின் பேரிலோ, அவள் செய்த பாக்கியத்தின் பேரிலோ பழியைப் போடுகிறார்கள். இதே பள்ளிக்கூடத்தில் இன்று நான் வகிக்கும் பதவியில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்வரை மாணிக்கம் இருந்தாள். வீட்டிலே 'அப்பாடா' என்றிருக்க எண்ணிப் பெற்றோர்களால் விரட்டிவிடப்பட்ட நாற்பதுக்கு மேலான வினைத் தெரியாத குழந்தைகளுக்கு அறிவைப் புகட்டும் பணியில் இருபது வருஷங்களாக ஈடுபட்டிருந்தாள். இப்போதும் அவளாக விட்டுவிடவில்லை.

கடந்த இருபது வருஷங்களில் அவளுடைய உடல் சத்தை எல்லாம் உறிஞ்சிய உழைப்பும், துயரமும், பட்டினியும் நோயாக மாறி அவளையே உருக்குலைத்துக்கொண்டிருக்கிறது. ஈடு கொடுக்க முடியாமல் அவள் ஒதுங்க நேர்ந்துவிட்டது.

*

நான் இந்தப் பள்ளியில் சிறுமியாகக் கல்வி பயின்ற நாட்களில் மாணிக்கத்தைக் கண்டிருக்கிறேன். அதிகம் சதைப் பிடிப்பில்லாத உருவம். நீண்ட முகம்; அன்பு தவழும் விழிகள்; புன்னகை மங்காத உதடுகள். வாரி முடிந்திருக்கும் கொண்டையில் ஒரு சிலும்பல் தெரியாது. கழுத்திலே பருமனை ஒற்றை மஞ்சள் சரடும் கைகளிலே கட்டைக்காப்பும் நெற்றியிலே ஒளிர்ந்த குங்குமப் பொட்டும் அவளுடைய பொலிவைத் தூக்கிக் காட்டும்.

ஒரு நாள் இடை நேரம். வகுப்புக்கள் எல்லாம் காலியாய்க் கிடந்தன. எங்கள் வீட்டில் ஏதோ விசேஷம். நான் காலையில் கடைசி மணி அடித்த பின் தான் பள்ளிக்கு வந்திருந்தேன். இடைவேளைக்கு வீட்டிற்குப் போகவில்லை. ருக்மணி அம்மாள் என்ற ஆசிரியையும் மாணிக்கமும் மட்டுமே ஏதோ படித்துக்கொண்டும், பேசிக்கொண்டும் வகுப்பறையில் உட்கார்ந்திருந்தார்கள். வாசல் படியில் அரவம் கேட்டது. வாய்ப்பாடு எழுதிக் கொண்டிருந்த நான் நிமிர்ந்து பார்க்கையில் ஒருவன் தட தடவென்று வகுப்பறைக்குள் நுழைந்தான். அவனுடைய உடலெல்லாம் புழுதி மண் மூடியிருந்தது. கண்கள் ரத்தமாகச் சிவந்திருந்தன. அவனைச் சுற்றிக் கூச்சலிட்டுக் கொண்டு வந்த சிறுவர் கும்பலும் பள்ளிக்கூட வாசலில் நுழைந்தது. நான் அரண்டு நிற்கையிலே அவன் மாணிக்கம் 'டீச்சரி'ன்மீது பாய்ந்தான். அவளுடைய கொண்டையைப் பிடித்து உலுக்கினான். அப்போது என்னால் புரிந்து கொள்ள இயலாத சொற்களைப் பொழிந்தான்.

மாணிக்கம் அவன் கைகளிலிருந்து விடுவித்துக் கொள்ள மட்டும் முயன்றாள். ஆனால் அவன் விடவில்லை. அப்படியே அவளைத் தெருவோடு இழுத்துச் சென்றான். தெருவில் நின்று பார்த்த ஜனங்களில் எவரும் மாணிக்கத்தை விடுவிக்க முன் வரவில்லை.

இப்போது நினைத்துக் கொள்கிறேன். 'தாலி கட்டிய' புருஷன் அல்லவா அவன்? அவனுக்குள்ள உரிமையை யார் தடுக்க முடியும் என்று நின்றார்களோ, என்னவோ?

*

மறுநாள். வாத்தியாரம்மா மாணிக்கத்தின் முகம் அடையாளம் தெரியாத வகையில் மாறி இருந்தது. சிவந்து ஊதிக் காயங்களுடன் காணப்பட்ட அவள் முகத்தைச் சொல்லத் தெரியாத தொரு கலக்கத்துடன் நான் வெறித்துப் பார்க்கையில் அவள் புன்னகை செய்தாள்.

"என்ன கண்ணம்மா?" என்று கேட்ட அவளுக்குப் பதில் சொல்லத் தெரியாமல் நான் திகைத்தேன். மதுவரக்கனின் அத்தகைய கோரதாண்டவக் காட்சியை நான் அதற்கு முன்னும் பின்னும் பார்த்ததில்லை. அப்படி ஒருநாளா, இரண்டு நாட்களா? வருஷக்கணக்கில் அல்லவா அவனிடம் அவள் அல்லல் பட்டிருக்கிறாள். பாவம்!

கடைசியில் ஒரு வழியாக விடுதலை கிடைத்தது. ஆனால் அந்த விடுதலையும் சாதாரணமாக, இயற்கையாகவா கிடைத்திருக்கிறது? 'மாணிக்கத்தின் கணவன் குடிகாரனாக இருந்தான்; நல்ல வேளையாகச் செத்தொழிந்தான்' என்று சொல்லும்படியாகவா அவன் அவளுக்கு நிம்மதி தந்திருக்கிறான்?

அன்றுதான் நான் இந்த ஊருக்கு வந்திருந்தேன். முதல் முதலாகப் பள்ளிக்கு ஆரம்ப ஆசிரியை என்ற பெயருடன் சென்றுவிட்டுத் திரும்பி வீட்டினுள் கால் வைத்த போது, இன்று போல்தான் அவள்

எல்லோருக்கும் இதயம் ஒரே இடத்தில் இருக்கிறது. ஆனல், எல்லா இதயங்களி லும் இரக்கம் ஒரே மாதிரி இருப்பதில்லை.

— சிங்-சௌ.

அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்:

''சாமி பேரிலே ஆணை; இந்தப் பய பேரிலே ஆணை. சத்தியமாச் சொல்லு. இனி அந்தப் பக்கம் போகக் கூடாது''ன்னு கேட்டாம்மா. தறிகெட்டு அலையிற வழக்கம் உள்ள புருசன் ஒருநாள் நல்ல பேச்சுப் பேசி நயமாயிருக்கிற சமயத்திலே இப்பிடி ஆணை போடுவாளா? அவனுந்தான், 'இந்தா பார் மாணிக்கம், நீ சொன்னபடியே நான் ஆணையாச் சொல்லுறேன், அப்பிடிப் போனேன்னு இந்த வூட்டுக்குள்ளாற நொழையமாட்டேன்' அப்படின்னுன்.''

''மாணிக்கத்தின் புருசனு செங்கமலத்தம்மா?'' என்று ஆவலுடன் கேட்டபடியே நான் அவள் எதிரில் போய் உட்கார்ந்தேன்.

''ஆமாங்கறேன். அப்படி நயமா இருக்கறச்சே அவளும் நயமா இருந்துக்கிட்டா நல்லாயிருப்பானே என்னமோ? ஆம்பிளேங்க நாலும் பழகிப்போயிடறது சகசம் தான். எங்க பண்ணுடி கூடத்தான் கொஞ்ச நாளேக்கு அப்படியிருந் தாரு. நல்ல பயதான் அவனும்..''

''ஆணை வச்சுப் போனவன் என்ன ஆனுன் சொல்லுங்க, செங்கமலத்தம்மா'' என்றேன் நான்.

''ம், அப்படிச் சொன்னுனு? இது நடந்த மறுநாள் மில்லிலே சம்பளம் போடுருங்க. அதுக்கும் மறுநா விடிஞ்சா மாரியாத்தா நோம்பு. இவ சந்தோசமாத்தான் பள்ளிக் கொடம் போனு; வந்தா. ஆறு மணிக்கெல்லாம் அவன் சம்பளத்தை வாங்கிக்கிட்டு வந்திடுவான்னு தெருவிலேயே நின்னு நின்னு பாத்தா. ம், மணி ஏழாச்சு, எட்டாச்சு, ஒம்பதும் பத்தும்கூட ஆயிட்டது. அவன் வூட்டுக்கே வரலே. 'அப்படி ஆணை போட்டியேடி, ஆளேயே காணுேமே'ன்னு நாங்கூடப் பேசினேன்.''

''மறுநாளும் வரலே. ரெண்டு நாளாச்சு, மூணுநாளாச்சு, வெளேயாட்டுப் போலப் பத்து நாளும் ஓடிட்டது. பேசாமயே யிருக்கிருளேன்னு, 'உறமுறைக்கின்னுலும் சொல்லி விசாரிச்சுப் பாரு, மாணிக்கம். ஊரிலேயே இல்லேங்கிருங்களே'ன்னேன் நான். 'காயிதம்போட்டு விசாரிச்சேன் ஆத்தா. எங்குமே இல்லியாமே'ன்னு அழுதா. நான் சும்மா இருக்கலே. இந்தச் சாமியப்பன் கிட்ட மை போட்டுப் பாக்கச் சொன்னேன்.

''உசிரோட இருக்குருன், கிழக்கால போயிருக்கிறப்போலத் தெரியுது. ஆனு ஆளு இப்ப உங்களுக்குச் சிக்கமாட்டான்''– அப்படின்னிட்டான். ரெண்டு நாள்தான் அழுதுக்கிட்டு அவ வூட்டிலே குந்திக்கிட்டிருந்தா. அப்புறம் அவ பாட்டிலே பள்ளிக்கொடம் போகத் தொடங்கிட்டா. பதினஞ்சு நாளுக்குப் பொறவு, முப்பது கல்லுக்கு அந்தாண்ட தோட்டிப் பாளேயத்திலேந்து என் நங்கையா மவன் வந்திருந்தான். 'பாரு ஆத்தா, நம்ம பச்சையன் தோட்டத்துக்துக் கெணறிலே எவனேயோ அடிச்சுப் போட்டிருக்கிருனுக, யாருமே பாக்கலே. எல்லாம் அழுகிக்கெட்டு உருவே தெரியாமப் போயிடிச்சு. இந்தப் பக்கத்து ஆளுன்னு சொல்லிக்கிடருங்க'ன்னுன்.

''எனக்குச் சுருக்குன்னுது. உறமுறைக்கு எழுதி விசாரிச்சேன்னுளே, அந்தாண்ட அஞ்சு கல்லுத் தானே, அவ சித்தப்பன் மவன் இருக்கிருனேன்னு நினேச்சுகிட்டு, பள்ளிக்கொடத்துக்கு ஓடினேன்.

'அடி அதிட்டம் கெட்டவளே, மஞ்சக் கயிறுன்னாலும் கட்டிக்கிட்டிருந்தியே, இப்படியாம் விசயம்'ன்னு சொன்னேன். கோயில் செலைதான் ஆத்தா, அப்படி நின்னுட்டா. ஒரு பொட்டுத் தண்ணி கண்ணிலேருந்து விழணுமே? ஒருசொல்லு வரணுமே? ஊஹூம்....''

''பாவம், துக்கத்துக்கும் ஒரு எல்லையில்லையா, செங்கமலத்தம்மா? அது அவனேதானா?''

''நீலச் சட்டை போட்டிருந்தது ஒண்ணுதான் அடையாளம் இருந்திச்சு. ஏற்கனவேதான் அழுகிக் கெட்டுப் போச்சுதே? ஒடனே போலீசுக்காரங்க பொதைச்சுட்டாங்க. யாரோ திருவிழாவுக்கு வந்தவன், பணங்காசுக்காக அடிச்சுப் போட்டிருக்கிறாங்கன்னு இவங்க விசாரிக்கு முன்னப பேசிட்டிருந்தாங்க. அன்னைக்கு அதே போலச் சட்டைதான் இவன் போட்டிருந்தான். அதுங் கூடப் பிச்சுப் பிச்சு எடுத்து வச்சிருந்தாங்க, ஆத்தா....''

''என்ன கோரம், கேட்கவே சகிக்கலியே? யார்தான் அப்படிச் செய்தாங்களாம், செங்கமலத்தம்மா?''

''அதென்னமோ அம்மா, கிழக்கால உதிச்சு மேற்கால போறானே அவனுக்குத்தான் வெளிச்சம்!''

செங்கமலம் மேலே பார்த்துக் கையை காட்டவும் எனக்குச் சுருக்கென்று வேதனை தைத்தது. சொல்லக்கூடாதது எதையோ சொல்லப் போகிறாள் என்று அறிந்ததும் மனம் நடுங்கியது.

அவள் கழுத்தைத் தாழ்த்திக் குரலையும் இறக்கினாள்:

''இவ சித்தப்பன் மகன்னு சொன்னேனில்லே, அவன் ஒண்ணுக்கும் அஞ்சமாட்டான். அந்தப் பக்கத்துக்கே பெரிய கை அவன். அவன்தான் செஞ்சுப் போட்டான், இவளுக்கும் கூடத் தெரியும். மெப்புக்குத்தான் தெரியாதுபோல நடிக்கிறாள்ன்னு ஊரிலே சொல்லிக்கிடறாங்க. அது பொய்யோ, நெசமோ? அது அவனுக்குத்தான் தெரியும், ஆத்தா!''

என்னுள் மண்டிக் குமைந்த வெறுப்பு சீறி எழுந்தது. ''ஊராராம்—அவளைப் பார்த்து இப்படிச் சொல்ல அவங்களுக்கு எப்படித் துணிஞ்சுது, செங்கமலத்தம்மா? அந்தப் புருஷனை 'வீட்டை விட்டிறங்கு; நான் சம்பாதிச்சுக்கிறேன்'னு சொல்லாதவள், அவன்

படுத்திவச்ச பாட்டுக் கெல்லாம் தலைவணங்கி உட்பட்டவள், அவளைப் பாத்துச் சொல்ல ஊராருக்கு நாக்கு கூசலே?''

''அவ இமிசைப்பட்டாளில்லே? அதனாலேதான் அப்பிடி நினைக்கத் தோணுது'' என்று அந்த 'ஊர்க்காரர்களி'ல் தானும் ஒரு முக்கியமான புள்ளி என்பதைச் சொல்லாமல் விளங்க வைத்தாள் செங்கமலம்.

நான் உள்ளூற நைந்து உருகினேன். மாணிக்கத்துக்கு இந்தச் சொல் எட்டாமலிருக்குமா? எட்டித்தான் பொறுத்திருக்கிறாளோ? அவளுடைய பொறுமைக்கு எல்லையே கிடையாதா? தந்தையின் அடிச்சுவட்டில் மகன் வேறு காலை வைத்துவிட்டான். இனி, மாணிக்கத்துக்கு மீட்சி ஏது?

❋

பரபரத்த நடையுடன் கன்னியப்பன் வீட்டுப் படியேறி உள்ளே சென்றான்.

தட்டி மறைவிலிருந்து மாணிக்கம் வந்தாள்.

''அடேய், போவியாடா? சாமி ஆணையாச் சத்தியமாச் சொல்லிட்டுப் போடா...''

மகன் வாசல்படியிலிருந்தே சீறி விழுந்தான். ''அட என்னம்மா, ஒருதரம் சொன்னாப் பத்தாது? நான் படுற பாட்டிலே ஒன் ரோதனை வேறு!''—கன்னியப்பன் விடுவிடென்று இருளில் மறைந்து விட்டான்.

மாணிக்கம் தூணோடு சாய்ந்து நின்றாள். பொங்கி வந்த துயரம் இருமல்களாக வெடித்தது.

❋

இரவு வெகு நேரம் தூக்கம் வராமல் புரண்டதனாலோ என்னவோ, விடியற்காலையில் நான் அயர்ந்து தூங்கி யிருக்கிறேன். சேமக்கலத்தின் ஓசை என்னைத் திடுக்கிட்டு எழச் செய்தது.

மாணிக்கத்தைக் குறித்து வம்பும் தும்பும் பேசியவர்கள் கூடி அழுத ஒலி கேட்டது!

''பூமாதேவியாப் பட்டாயேடி ஆத்தா...''—பருத்திக்காரச் செங்கமலத்தம்மாளின் குரல் தனியாக ஒலித்தது.

மாணிக்கம் போய்விட்டாளா? கடைசியில் அவளுக்கு விடுதலை கிடைத்துவிட்டதா?

❋

அன்று. இடைநேரம். பாப்பம்மாளும் நானும் பேச்சில் ஈடுபட்டிருந்தோம். யாரோ வரும் அரவம் என்னை நிமிர்ந்து பார்க்கச் செய்தது. பாப்பம்மாள் வந்தவனைப் பார்த்து, ''யாருங்க வேணும்?'' என்று கேட்டாள்.

வயசு ஐம்பதைத் தாண்டி மதிக்கலாம். புழுதி படிந்த மேனி. தாடி மீசை வளர்ந்த முகம். அன்னம் கண்டு பல நாட்களானதைப் போன்ற தோற்றம். பரக்கப்பரக்க விழித்தவாறு, ''மாணிக்கம் டீச்சர் இல்லீங்களா?'' என்று அவன் கேட்டபோது குரல் கரகரத்தது.

''யார் நீங்க? மாணிக்கம் டீச்சர் இறந்துபோய் ஒரு மாசம் ஆகுதே?'' என்றாள் பாப்பம்மாள்.

''இறந்து போனாளா?.... இறந்து போய்விட்டாளா?....'' என்று அவன் திருப்பிக் கேட்டான். அவனுடைய விழிகளில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

''நீங்க யாருங்க? அவங்களுக்கு உறவா?''

கேட்கப்பட்ட கேள்வியைக் கவனிக்காதவன்போல் அவன் திரும்பினான். வேஷ்டி நுனியால் கண்களை ஒத்திக்கொண்டு அவன் வாசலில் சென்றது எனக்குக் கனவில் நடப்பது போலிருந்தது. ஒரு நிமிஷம் எனக்கு எதுவும் புரியவில்லை. பிறகு அதிர்ச்சியுற்றவள் போல் கத்தினேன்:

''பாப்பம்மா, அவன்.... அவன்... கூப்பிடேன்?'' என்று திணறிக்கொண்டு எழுந்தேன். இருவரும் வாசலுக்கு ஓடி வந்தோம்.

அவன் திரும்பிப் பார்த்தால் தானே....? ★

குணச்சித்திரத் தொடர்:

அந்தித் தாமரை

'பூவை'

குழந்தை உள்ளம் பூப்போல. அந்தப் பூ மனம் எரிமலையாக மாறுகிறது. முடிவு, பயங்கரம்....!

1. பெதும்பை மனம்

சூடாமணி ஆடினாள். கஞ்ச மலர்ப் பாதங்கள் 'ஜல், ஜல்' என்று சத்தமிட்டன. தாளக்கட்டும் நடனபாவங்களும் உயிர் உறவு கொண்டாடின. ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை ஆகியோர் ஒன்று கூடினர். அரங்க மேடை விண்ணில் பறந்தது.

''ஆஹா!'' என்றாள் ருக்மிணி. புருவங்களின் கரையில் பனித் திவலைகள் வேலிகட்டி நின்றன.

''அம்மா''

எதிர்த்து வந்தது குரல்.

சிலிர்த்தெழுந்தது அவள் பேதை மனம்.

''மணி''

''அம்மா, கனவு கினவு கண்டியா?''

''ம்...''

''என்ன கனவு அம்மா அது?''

''என் சூடா டான்ஸ் ஆடற மாதிரி கனவு''

''நிஜமாவா?''

''ஆமாம்.''

''சரி, ரெட்டைச் சடை போட்டுப் பின்னி விடம்மா; ஜல்தி, சிக்கிரம் ஆகட்டும். ஆண்டு விழாவுக்குரொம்ப நேரமாயிடுச்சு; மறந்துடாம ஒரே ஒரு ரோஜாப் பூவைச் சடையிலே செருகிப் பிடு, அம்மா.''

''ம்....''

பிறை நெற்றியைத் தழுவ ஓடி வந்த சுருள் கேசத்தை சூடாமணி நுனி விரலால் கோதிக் கொண்டிருந்தாள். ருக்மிணி குழற் கற்றையை இணை சேர்த்துக் கொண்டிருந்தாள். தந்தச் சீப்பு இடையில் தூது.

''அம்மா''

''இதோ ஆயிடுச்சு, கண்ணே!''

''ஐயையோ, பத்தடிக்கப் போகுதே''

''அவ்வளவு தான்''

''ரோஜாப்பூ''

''ஓ, வச்சிட்டேனே!''

''பொட்டு''

''வச்சிட்டேன், சூடாமணி''

எதிரிலிருந்த பெல்ஜியம் கண்ணாடிக்கு எவ்வளவு குறும்பு! தாயும் மகளும் சிரிப்பதை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறதே!

''மேக்கப் எப்படி, மணி''

''பஹுத் அச்சா!''

"ஊஹூம், பஹூத் அச்சா ஹை !"

"சரி, சீக்கிரம் புடவை மாற்றிக் கொண்டு புறப்படு, அம்மா"

"நான் எதற்கு, கண்ணே? நீ போய்ப் பரிசுகளை வாங்கிக் கொண்டு வா. அவற்றைப் பார்த்து நான் ஆனந்தப் படுகிறேன்"

"இன்னிக்கு என் டான்ஸ் வேறே இருக்குதே....?"

"உன் டான்ஸைத்தான் நான் ஒவ்வொரு நிமிஷமும் பார்த்து ஆனந்தப் படுறேனேம்மா !"

"போ, அம்மா. ஒரு ஜில்லா கலெக்டர் உன் மகளுக்குப் பரிசு வழங்கப் போருர். அந்தக் காட்சியைக் கண் குளிரப் பார்க்க உனக்கு ஆசை வரல்லியா? நீ வந்தால்தான் நான் இப்போ ஸ்கூலுக்குப் போவேனுக்கும்."

"கோவிச்சுக்காதே, சூடா. நானும் இதோ உன்கூட வந்திடுறேன்."

பெதும்பை மனம் சிரித்தது.

"பேஷ், அம்மான்னு அம்மா தான்! அம்மா, இன்றைக்காகிலும் சிரிக்க மாட்டாயா?"

புயல் மத்தியில் பூந்தென்றல் பிறந்தது.

2. பாவை விளக்கு

பாவை விளக்கில் ஒளிச் சுடர் ஏற்றம் புரிந்தது.

ஊர் பையப் பைய அடங்கிக் கொண்டிருந்தது.

ருக்மிணி சுரந்திருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்; பிறகு அவள் திருஷ்டி மகள் மீது சென்றது. சூடாமணி அமைதியை அணைத்துக் கொண்டு உறக்கம் கொண்டிருந்தாள். தாயின் மனத்தில் அடித்த புயலை மகள் எப்படி அறிவாள்?

புகைப்படம் பிடித்தாற் போல இன்னும் அந்தக் காட்சி அவள் நெஞ்சில் தடம் பதிந்திருந்தது. குழந்தைக்குக் கலெக்டர் பரிசுகளை வழங்கிஞர். அத்துடன் தன் அன்புப் பரிசிலாக தங்கப் பாவை விளக்கையும் அளித்தார். கடைசியில், "சூடாமணியைக் குழந்தையாகப் பெறப் பாக்கியம் செய்த தாய் தந்தையருக்கு என் பாராட்டுதல்கள்...!" என்ற அவருடைய புகழுரை அவளுள் இன்னமும் எதிரொலிக்கின்றன.

ஆனல் அந்தப் புயல்....?

பூ மனசைப் பொங்குமாங் கடலாகச் செய்து விட்ட புயல் அது; பெண் மனம் கொண்ட வைராக்கியத்தின் விளைவில் புறப்பட்ட பயங்கரப் புயல் அது; கண்ணீர் ஒன்றை மட்டுமே தோழியாக வாய்க்கப் பெற்றவளாக அவளை ஆக்கிவிட்ட புயல் அது !

3. டைப்பிஸ்ட் ஜூலா

'அத்தானுக்குக் கலியாணப் பரிசாக ஜூலா அளித்த பாவை விளக்கை, தன் உரிமைப் பரிசாக என் மகளுக்கு — தன் மகளுக்கு 'அவர்' திரும்பக் கொடுத்திருக்கிருர். எதிர்ப்பாராத இந்தச் சந்தர்ப்பம்கூடத் தெய்வச் செயல் என்றுதான் அர்த்தமா? தெய்வமே, நீ எங்கிருக்கிருய்?....'

ருக்மிணியின் விழிகள் பன்னிரண்டு கண்ணீர் முத்துக்களைச் சிந்தின. அவற்றிற்கு என்னதான் மாயமோ? அந்த ஜில்லா கலெக்டர், தாசில்தார் தண்டபாணியாகத் தோற்றம் தந்தார்.

தண்டபாணியைத் தன் பதியாக கொண்ட ருக்மிணிக்கு ஆனந்தம் பிடிபடவில்லை. கண் நிறைந்த கணவன்; கை நிறைந்த பொன்; எதிர்காலத்தில் பதவியை உயர்த்திக் கொடுக்கக் கூடிய உத்தியோகம். புன்னகையும் புது நிலவுமாக நாட்கள் ஓடின. அப்போது தான் கேள்வி முறையின்றி அவளுடைய

மனச் சாளரத்தினூடே தொப்பென்று குதித்துவிட்டாள் அந்தப் பெண். ஜலைா என்பது பெயர். அதே ஆபீஸில் டைப்பிஸ்ட் அவள். அத்துடன் தண்டபாணியின் கல்லூரிச் சிநேகிதி என்ற ஒட்டுறவு. ஜலைாவும் தண்டபாணியும் ஆதியில் தம்பதிகளாக எண்ணினராம். பெற்றோரின் கட்டுப்பாடு குறுக்கிடவே, தண்டபாணி ருக்மிணியைக் கைத்தலம் பற்றினனும். தங்கத்தாலான பாவை விளக்கு பரிசாக வந்தது ஜலைாவின் சூழலிலிருந்து. அதுவே தண்டபாணிக்குப் போதை ஊட்டியது. அங்கு ஜலைா காணப்பட்டாள். முதல் பூ மடலவிழ வேளை பார்த்திருக்கும் நல்ல சேதியைச் சொல்ல ஓடோடி வந்தாள் ருக்மிணி.

''ருக்மிணி,

என்னை மறந்துவிடு. மாதம் தவருமல் உனக்குச் செலவுக்குப் பணம் கிடைக்கும்.

தண்டபாணி''

ஜலைாவின் போதைக் கண் வீச்சில் தன் கணவன் அடக்கமான கதையைச் சொன்னது மேற்படி கடிதம்.

குழந்தை சூடாமணி மாத்திரம் இல்லையென்ருல், இந்நேரம் ருக்மிணி மாண்ட இடம் புல் மண்டிப் போயிருக்கும்.

கணவனிடமிருந்து பணம் வந்தது; திருப்பிவிட்டாள் மனைவி. அவளுடைய சங்கீத ஞானம் அவளுக்கும் குழந்தைக்கும் படி அளந்தது.

நாட்கள் ஓடின.

காலம் குழந்தைக்குப் பேசக் கற்றுக் கொடுத்தது!

ஒரு நாள் சூடாமணி, ''அம்மா'' என்று கூப்பாடுபோட்ட வண்ணம் ஓடிவந்து, ''அம்மா, எங்கே அம்மா நம்ப அப்பாவை மட்டும் இத்தனை நாளாக் காணல்லே.....?'' என்று திக்கித் திக்கிக் கேட்டாள்.

இதய ஓட்டத்தை யாரோ நிறுத்திவிட்ட மாதிரி உணரலானாள் ருக்மிணி. பேசத் தெரியவில்லை; ஆனாலும் பேசினாள்: ''மணி, உன் அப்பா வந்திடுவார், கண்ணே!''

ஜோடிக் குழந்தைகள் தங்கள் தகப்பன்மார்கள் தந்த பரிசுகளைக் கொண்டு வந்து காட்டின சூடாவிடம். சூடாவின் குழந்தை உள்ளம் குமுறியிருக்க வேண்டும்.

பின்னும் சில மாதங்கள் கழித்து ஒருநாள், ''அம்மா, எப்போ என் அப்பா வருவாராம்?...'' என்று கேட்டாள் சூடா.

வேறு வழியில்லை. தாய் நடந்த கதையை மகளிடம் விவரித்தாள்.

''அம்மா, அந்த அப்பாவின்— ஊஹூம், நம்ப வைரியின் படம் ஏதாச்சும் இருந்தாக் கொடு. ஒரு நாள் இல்லாட்டி ஒருநாள் அவனை நேரிலே கண்டால் நல்ல பாடம் சொல்லித் தருவேன்....'' என்று சபதம் செய்தாள் குழந்தை சூடாமணி.

இதற்குப் பயந்து, தன் புருஷனுடைய போட்டோவைக்கூட ஒளித்து வைத்து விட்டாள் ருக்மிணி.

''சூடா, உன் அப்பா எனக்காக இல்லா விட்டாலும் உனக்காக வேனும் என்ருவது ஒருநாள் கட்டாயம் நம் வீடு தேடி வருவார், கண்ணே!'' என்ற தாயின் சொற்கள் அந்தக் குழந்தை உள்ளத்திலே எந்தவித மாற்றத்தையும் விளைவித்தால்தானே...?

''பிரிய ருக்மிணி,

உன் வைராக்கியம் என்னைக் கிறுக்காக்கி விடும் போலிருக்கிறது. பணத்தைக் கூடப் பெற்றுக் கொள்ளக் கூடாதா? என் தவறை மன்னித்துப் பதில் போடு. உன்னையும் குழந்தையையும் அழைத்துப் போக வருகிறேன்.

தண்டபாணி''

பன்னிரண்டு ஆண்டுகளாக அல்லும் பகலும் தன்னுள்ளே

குமுறிக் கொந்தளித்துப் புரண்ட எரிமலையைக் கேவலம், இந்த நாலு வரிக் கடிதம் அணைத்துவிட முடியுமா?

4. காப்பி வந்தது

"சூடா, கண்ணே சூடா" என்று விநாடிக்கு ஆயிரந் தடவை அலட்டினாள் ருக்மிணி.

குழந்தையின் மேனியில் நெருப்பைக் கட்டி வைத்தாற் போல அப்படிக் கொதித்தது.

பெற்ற மனத்தில் தீ பற்றி எரிந்தது.

டாக்டர் வந்தார். நோய்க்குப் பெயர் சூட்டினார்—'டபிள் நிமோனியா'. பணம் விழுங்கும் நோய். அத்தனை பணத்துக்கு எங்கே போவாள், பாவம்?

பரிசாக வந்த தங்கப் பாவை விளக்கின் நினைவு வந்தது. அதை விற்றுப் பணமாக்கிக் கொள்ள மகள் யோசனை சொன்னாள். அப்போது தாய்க்கு மனமில்லை. இப்போது அதைத் தவிர வேறு உபாயம் இல்லை. 'விசுக்' கென்று உள் அறைக்கு ஓடினாள். அவள் துடிப்பு நின்று விட்டது. பாவை விளக்கு இருந்த இடத்தில் சூன்யம் கை கொட்டிச் சிரித்தது.

அவள் கண்கள் அழுதன.

டாக்டர் எழுதிக் கொடுத்திருந்த ஊசி மருந்தை வாங்கப் பணம் வேண்டுமே! பணம் அடுத்த வீட்டுத் தாத்தா உருவில் வலிய வந்தது. "தங்கச்சி, இதோ நூறு ரூபாய் இருக்குது; வைத்தியச் செலவுக்கு இருக்கட்டும்" என்றார்.

'ஸ்டெதாஸ்கோப்' விஜயத்தின் எண்ணிக்கை நீண்டது; முடிந்தது.

சூடாவுக்கு நல்ல உயிர் மீண்டது.

ருக்குவுக்கு நல்லமூச்சு மீண்டது.

வாசலில் 'கெடிலாக்' வந்து நின்றது. ஜில்லா கலெக்டர் தண்டபாணியின் உருவம் தெரிந்தது.

சூடாவுக்குக் கொள்ளை மகிழ்ச்சி. அன்றைக்குப் பரிசு வாங்குகையில் 'சல்யூட்' செய்தது போலவே இப்போதும் செய்து வணக்கம் தெரிவித்தாள்.

"அம்மா, கலெக்டர் ஸார் வந்திருக்காங்க; நம்ப வீடு தேடி வந்திருக்காங்க."

ருக்மிணி வந்தாள். தண்டபாணியைப் பார்வையிட்டாள்.

கலெக்டரின் சிரம் தாழ்ந்தது.

"அம்மா, என்னம்மா சும்மா

நிக்கிறே? போய் காப்பி கொண்டாம்மா, கலெக்டர் ஐயாவுக்கு. சொல்ல மறந்துப்பிட்டேன். எனக்கு மேலுக்கு முடியாமயிருந்தன்னிக்கு மத்தியானம் இவங்க என்னை வழியிலே கண்டதும் காரை நிறுத்தச் சொல்லி, பழங்களெல்லாம் கொடுத்தாங்க... ஒரு நாளைக்கு நம்ப வீட்டுக்கு வர்றதாகக்கூடச் சொன்னாங்க.... இவங்க மாதிரியே எல்லாப் பெரிய மனிதர்களும் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவாங்களான்னு எனக்குத் தோணல்லே. அம்மா, காப்பி கொண்டா.... போ....''

காப்பி வந்தது.

''ம்....சாப்பிடுங்க, ஸார். நாங்க ஏழைங்க. இதுதான் முடிஞ்சது. எனக்கு வேறே காய்ச்சல். என்னாலே அம்மாவுக்கு ரொம்ப சிரமம்... எங்க அப்பா இருந்திருந்தா இந்நேரம் நான்கூட உங்கமாதிரி ஒரு காரிலே போவேனுக்கும்...!''

''அழாதே, சூடா. உனக்கு ஒரு நல்ல சேதி சொல்லப்போறேன்'' என்றார் கலெக்டர் ஸார்.

''எனக்கு கார் கீர் வாங்கித் தரப்போறீங்களா?''

''ம்....''

''கார் வேண்டாம்!''

''வேறே?''

''என் அப்பாவை என் கிட்டே கொண்டுவந்து சேர்த்திடுறீங்களா?....''

''ஓ....''

''எப்போ?''

''இதோ, இப்பவே!''

''மெய்யாவா?''

''ஆமா''

''எங்கே?....''

''சூடா, நான்தான் உன் அப்பா, கண்ணே! இந்த கலெக்டர் ஸார்தான் உன் சொந்தத் தகப்பன்....!''

''அப்பிடியா?... நிறுத்து, காப்பியைக் குடிக்காதே....'' என்று உத்தரவிட்டாள் சூடா.

காப்பித் தம்பளர் நழுவியது.

''சூடா.... அப்படிச் சொல்லாதே....'' என்று குறுக்கிட்டாள் ருக்மிணி.

ஆனல் மறுகணம், அருகிருந்த மருந்துப் புட்டி ஒன்றை எடுத்துக் கலெக்டர் மீது வீசினுள் சூடாமணி

தண்டபாணியின் நெற்றி மேட்டில் ரத்தக்குளம் தோன்றியது.

''ஐயோ!'' என்று சொல்லித் தன் கணவனை அண்டி, ரத்தத்தைத் துடைக்கப் போனுள் ருக்மிணி.

''நில், அம்மா!'' — மீண்டும் தடை உத்தரவு பிறந்தது.

''ஏனம்மா கண் கலங்குகிருய்? இந்த பன்னெண்டு வருஷமா நீ வடிச்ச கண்ணீருக்குக்கூட இரக்கம் காட்டாத இவருக்கு இப்போ நீ ஏம்மா அனுதாபம் காட்ட வேணும்? என் அப்பாவாம் அப்பா! இதயமில்லாத இந்த அப்பா எனக்கு வேண்டவே வேண்டாம்!.... அம்மா, நீ எனக்காகப் பட்ட பாடுக்கு நான் என் கடமையைக் கட்டாயம் செஞ்சிடுறேன்.... அப்போ உடம்புக்கு முடியாம இருந்தப்போ, நீ சம்மதிக்க மாட்டாயேன்னுதான் நானே அடுத்த வீட்டுத் தாத்தாவைக் கூப்பிட்டு பாவை விளக்கை ரகசியமா விற்று வரச் சொன்னேன். இப்போ அது இருந்தா, அதையும் இவர் மூஞ்சியிலேயே வீசி எறிஞ்சிருப்பேன்....! ம்.... முதலில் அவரைப் போகச் சொல், அம்மா. இல்லேன்னு நான் இப்பவே வீட்டை விட்டு போயிடுறேன்....!''

குழந்தை உள்ளம் பேசும் பேச்சுக்களா இவை?

5. எரிமலை! எரிமலை!

தண்டபாணி கண்ணீரைத் துடைத்துக் கொள்ளவில்லை. மெல்ல எழுந்தார். குழந்தையை அண்டினர்.

''சூடா, நான் உன்கிட்டே சொன்னது பொய். பச்சைப் பொய். நான் உன் அப்பா இல்லை. நான் உன் அப்பாவுக்குத் தூரத்துச் சொந்தம். இவ்வளவு நாளும் வடக்கே இருந்தேன். உன் அப்பா செஞ்ச அநியாயத்தைத் தெரிஞ்சு, உன்னையும் உன் அம்மாவையும் பார்த்துவிட்டுப் போகத்தான் இப்போ வந்தேன்.... அவ்வளவுதான். நான் சொன்ன பொய்யையே நிஜம்னு நம்பி இவ்வளவு ஆத்திரப்பட்ட நீ, உன் அப்பாவை நேரில் கண்டால் கொன்று போட்டுடுவே போலிருக்கே...?''

''நிஜமா நீங்க என் அப்பா இல்லியா?''

''இல்லை.''

''கடவுளுக்குப் பொதுவாய் உண்மையா?''

''ஆமாம்....''

''உண்மையா, அம்மா?''

''ஆமாம்....கண்ணே!''

''ஐயையோ, பாவம்! என்னை மன்னிச்சிடுங்க, கலெக்டர் ஸார்! இதோ நொடியிலே போய் டாக்டரை அழைச்சுவர்றேன்...அம்மா, அவருக்கு காப்பி கொடு...!''

சூடாமணி ஓடிவிட்டாள்.

கலெக்டர் தண்டபாணி சிறு குழந்தை போலச் செருமிக் கொண்டே பேசினர்: ''ருக்மிணி, நீயாவது என்னை மன்னித்துவிடு. நம் வாழ்வில் இனியாவது ஆனந்தத் திருப்பம் வழிவிடுமென்று ஆசையோடு வந்தேன். குழந்தை சூடாவை அன்புடன் அணைத்து முத்தமிட ஓடோடி வந்தேன். இங்கே குழந்தை எரிமலையாகி விட்டதே! நான் கொடுத்து வைக்காத பாவி. உன்னை இத்தனை காலம் 'தள்ளி' வைத்ததற்குத் தண்டனை கிடைத்து விட்டது. அங்கே ஜீலாவை இழந்தேன். இங்கு என் குழந்தை என்னை 'அப்பா' என்று கூப்பிடக் கொடுத்து வைக்காத பாவியாகி விட்டேன். குழந்தையின் முன்னிலையில் உன்னை 'என் மனைவி' என்று அழைக்கும் உரிமையையும் இழந்துவிட்டேன். நான் மகாபாவி. ருக்மிணி, நம் குழந்தையின் முன்னிலையில்—அதன் ஆத்திரம் மாறும் வரை-நாம் இனி 'கணவன்-மனைவி' யாகக் காட்சியளிக்க முடியாது. உதயச் சூரியனின் வரவுக்குக்காத்திருக்கும் அந்திக் கமலத்தின் நிலையில் இருக்கிறேன் நான். என் விதி அப்படி. என் விடிவு-நம் விடிவு, நம் குழந்தையின் மனமாற்றத்தில் இருக்கிறது. தெய்வமே, என் குழந்தையை எனக்குக்கொடு!....''

(இன்னும் உண்டு)

மனப்புயல்

யோகி சுத்தானந்த பாரதியார்

8. "ஐயோ, கொலை!"

ஜிந்தாலால் அப்படியே மெத்தையில் சாய்ந்தான்; கண்ணை மூடினான். மனம் சுழன்றது; நெஞ்சில் கொந்தளித்து மோதும் கவலைத் திரைகள் உறக்கத்தைச் சிதறடித்தன. மனம் ரம்பாவைச் சுற்றியிருந்தது. 'நாளைத்தானே நேர்மையாக நடப்பதாகச் சொன்னேன்? இன்றிரவே ரம்பாவின் இன்பத்தை நுகரவேண்டும். வாய்த்த இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது. நாளை என்ன நேருமோ? லீலாவின் கோபாவேசம் என்னை என்ன செய்யுமோ?' என்று பலபட நினைத்துப் புழுங்கினான். அன்றைத் தூக்கம் கெட்டது. ஜிந்தாலால் எழுந்து அமர்ந்தான். மீண்டும் படுத்தான். ரம்பாவின் முகபிம்பமே அவன் முன் வந்தது. கண்ணை நினைத்தான்; ரம்பாதான் முன்னின்றாள்! ஆசைத்தினவு அதிகரித்தது. ரம்பாவைத் தொடாவிட்டால் உயிர் தாங்காது போலிருந்தது. 'சட்'டென்று எழுந்தான்; கடிகாரத்தைப் பார்த்தான். இரவு மணி மூன்று. முகத்தைக் கழுவினான். கைவிளக்கை எடுத்துக் கொண்டான். பூனை போல் அடி வைத்துச் சென்று ரம்பாவின் அறைக்குள் புலி போலப் பாய்ந்தான். அறையில் பயங்கர மௌனம் படர்ந்திருந்தது. சாவின் நிழல் அடர்ந்திருந்தது. ரம்பாவின் மெத்தையை நோக்கி ஆவலாகப் பாய்ந்தான் ஜிந்தாலால். எதையோ கட்டித் தழுவிக் "கண்ணே, கண்ணே" என்று கொஞ்சினான்.

"வள் வள்!" என்ற பயங்கரக் குரல் எதிரொலித்தது.

மின் விளக்கை ஏற்றப் போனான். ஏதோ கால் தட்டித் தடாலென்று விழுந்தது. ஒரு கண்ணாடிப் புட்டி நொறுங்கியது. ஜிந்தாலாலின் காலில் ஒரு கண்ணாடித் துண்டு குத்தி ரத்தம் வந்தது. அவன் மின் விளக்கை அழுத்தினான். ரம்பா இல்லை....! அவள் படுத்த மெத்தை, தலையணி, அவளது 'மேக்கப்' அணிமணிகள், கண்ணாடி, கைப்பை எல்லாம் அப்படியே இருந்தன. மெத்தை மேல் அவளது பச்சைப் போர்வையும் இருந்தது. ஆனால் அதை அந்த நாய் போர்த்தி யிருந்தது. அது மயங்கி விழுந்ததுடன் சரி. பிறகு எழுந்திருக்கவில்லை. கீழே கால் தடுக்கிப் பால் செம்பு கவிழ்ந்திருந்தது. அதிலிருந்து பால் கொட்டித் தரையெல்லாம் வழிந்தோடி யிருந்தது.

செல்லம் மெல்ல மெல்ல வந்தாள். "ஐயோ, சேட்ஜீ" என்று திகைத்தாள். "அம்மா அம்மா" என்று அலறினாள். போனை எடுத்து "அபாயம், அபாயம்" என்று கூச்சலிட்டாள்.

லீலா ஓடி வந்தாள். "ரம்பா மோகமா? இங்கென்ன வேலை உமக்கு?" என்று பயங்கர விழிகளை உருட்டிப் பத்ரகாளி போலப் பாய்ந்தாள்.

செல்லம்: பாருங்கள் அம்மா, பகவானே காத்தார். இதோ, இந்தச் செம்பிலிருந்த பாலைக் குடித்து நமது நாய் இறந்துபோய் விட்டது. பாலில் விஷம்!

லீலா : ஆம், செம்பில் மிச்சமிருக்கும் பால் நீல நிறமாயிருக்கிறது. கடவுளே, இது யார் செய்த சதி? யாருக்கு விஷம்?

செல்லம் : எல்லாம் அவள் சதி தானம்மா. பொல்லாத தட்டு வாணி. இங்கே வாருங்கள், சொல்லுகிறேன்.

லீலா : தெரிந்தது தானே? மோசம், மோசம்! பாசம் மோசம்!

செல்லம் : சூழ்ச்சியைக் கேளுங்கள்: ஜிந்தாலால் தன்னிடம் இரவு வருவார். அவருக்கு இந்தப் பாலைத் தரலாம், அவரைக் கொன்று விடலாம், லீலாவை அழிக்கலாம், லீலா ஸ்டுடியோவைக் கைப்பற்றித் தடபுடல் செய்யலாம், ஊரைக் கொள்ளையடித்துக் கொழுக்கலாம் என்ற எண்ணம் அவளுக்கு.

லீலா : அடி பாதகி! பாருங்கள், உமது காதலி ரம்பாவின் மோசடியை. நாயகனுக்கு வந்தது நாயுடன் ஒழிந்தது.

ஜிந்தா : லீலா, நிதானித்து பேசு. ரம்பா ஒருக்காலும் அப்படிச் செய்ய மாட்டாள். இதில் ஏதோ சூதுள்ளது. யாரோ சதி செய்கிறார்கள்!

லீலா : என்னை நம்ப மாட்டீர்களா?

ஜிந்தா : நீ என்ன சொன்னாலும் நம்ப வேண்டுமா?

லீலா : ஆமாம், அதுதான் பணிவுள்ள கணவனுக்கு அழகு.

ஜிந்தா : சரி, நீ இப்போது என்ன சொல்லுகிறாய்?

லீலா : நீர் நீடூழி வாழவேண்டும் என்கிறேன். அதற்கு ரம்பா மோகத்தை விடவேண்டும்.

ஜிந்தா : அவள் மேல் என்ன குற்றம்?

செல்லம் : இதெல்லாம் எதற்கம்மா? போலீசை வரவழைத்து இந்தப் பாலைச் சோதித்தால் குட்டு வெளியாகிறது.

லீலா : சரியான யோசனை. எடுங்கள் போனை; பேசுங்கள்.

ஜிந்தா : போலீஸ் வந்தால் வீண் வம்பு வளரும். எனக்குப் பயமாயிருக்கிறது.

லீலா : நான் சொன்னதைச் செய்ய வேண்டும். ஆண்பிள்ளை பயப்பட்டால் பெண் சிங்கம் பேசும்.

லீலா 'போனை' எடுத்தாள். எண்ணைத் திருப்பினாள். "ஹல்லோ, எஸ். ஐ. தானே....? நான் லீலா ஸ்டுடியோவிலிருந்து பேசுகிறேன், லீலாபாய். இங்கு கொலை நடந்து விட்டது; உடனே வாருங்கள்!" என்று செய்தி பரப்பினாள்.

9. சப்-இன்ஸ்பெக்டர் சாமுண்டி

சப்-இன்ஸ்பெக்டர் சாமுண்டி வந்தான். அவனுடன் ஹெட் கான்ஸ்டபிளும் ஒரு சேவகனும் வந்தனர். ஒட்டகமும், யானையும், புலியும், வேட்டை நாயும் சேர்ந்த ஒரு பயங்கரத் திருமேனி சாமுண்டி. அவனுக்குத் 'தடியடி சாமுண்டி' என்ற பட்டப் பெயர் உண்டு. 1942-ல் நடந்த சத்தியாக்கிரகத்தில் அவன் செய்த தடியடி தர்பார் அப்போதிருந்த ஆங்கிலேய அதிகாரியின் கவனத்தைக் கவர்ந்தது; அதற்காகவே அவ

னுக்கு சப்-இன்ஸ்பெக்டர் வேலை யும் கிடைத்தது.

சாமுண்டியின் மனைவி அவனை விட முதியவள்; ஒரு பெண் பிறந்ததும் அவளுக்குக் கருப்பையில் கோளாறு ஏற்படவே, நலிந்து மெலிந்து போனாள். ஆதலால் சாமுண்டி ஊரில் வேட்டையாடத் தொடங்கினான். அவன் கண் வைத்தால் கன்னிதான்! கண்ணியில் சிக்காதவரை அவன் வெகு பாடுபடுத்துவான். அவன் மனப்படி இணங்கினவளுக்கு அவனும் மனப்படி இணங்குவான். அவன் லீலா ஸ்டுடியோவைச் சுற்றிச் சில காலமாக வட்டமிட்டுக் கொண்டிருக்கிறான். ரம்பாவிடமும் அவன் விழிகள் சென்றன. ரம்பா அவனை மதிப்பதே இல்லை. அவன் வந்தாலும் பேட்டி அளிப்பதில்லை. அதனால் அவன் ரம்பாவைக் கறுவினான். ரம்பாவின்மேல் ஆத்திரம் வைத்திருந்த செல்லம் அவனிடம் செல்வாள், சிரித்து விளையாடுவாள். அவள் சொல் அவனுக்கு மந்திரம்.

சாமுண்டி ஹெட் கான்ஸ்டபிளுடன் புகுந்து பங்களாவைச் சுற்றிப் பார்த்தான். செல்லம் அவன் காதில் முன்பே எல்லாம் 'ஓதி'விட்டாள். சாமுண்டி ஒரு மணி நேரம் விரைவாக விசாரணை செய்தான். ''ரம்பாவைப் பிடித்துக்கொண்டா; ராஜனையும் கொண்டா!'' என்று உத்தரவு பிறப்பித்தான்.

10. ''நீயே கதி!''

ரம்பா விலாஸ் நள்ளிரவில் உறங்கிக் கொண்டிருந்தது. தட தட என்று கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. ராஜன் அவசரமாகச் சேவகனை எழுப்பினான்; கதவு திறந்தது; போலீஸ் ஜவான்கள் உள்ளே பாய்ந்து, நேராக ரம்பாவின் அறைக்குத் தாவினர். ரம்பா இல்லை. ராஜன் பதறினான்.

சப் இன்ஸ்பெக்டர்: எங்கே ரம்பா? சொல்லும், உமது மனைவி எங்கே?

ராஜம்; ஐயா, ரம்பா இங்கே பத்து மணிக்கு வந்தாள்; அவள் நடத்தையில் எனக்குச் சந்தேகம்; இருவருக்கும் மனத்தாங்கல்; ஆதலால் நான் அவளைக் கடுமையாகப் பேசி வெளியே துரத்தினேன். அவள் அழுது கொண்டு கடற்கரைப் பக்கம் சென்றாள். சற்று தாமதித்து என் மனத்தில் இரக்கம் ஏற்பட்டது. மோட்டாரில் சென்று பார்த்தேன். ''ரம்பா, ரம்பா'' என்று கூவினேன். ரம்பா எங்கோ போய்விட்டாள். நீங்களே அவளைக் கண்டுபிடித்துத் தரவேண்டும். அவள் என் உயிர்.

இன்ஸ்பெக்டர்: மிஸ்டர், ராஜம்! உமக்கு 'வாரண்டு'ள்ளது. வாரும் போலீஸ் ஸ்டேஷனுக்கு. இந்த வீட்டைப் பூட்டி 'சீல்' வைக்கவேண்டும். மிஸ்டர் 144, கடற்கரையில் ரம்பாவைத் தேடி, விடிவதற்குள் கைது செய்து கொண்டு வர வேண்டும். ஜல்தி, போ!

சாமுண்டியின் சட்ட வரம்பில் ராஜன் கைதிக் கோலம் தரித்தான்!

ராஜம்: ஐயோ, நான் நிரபராதி; எனக்கு ஒன்றுமே தெரியாது. ஹே, திருப்பதி வேங்கடேசா! நீயே கதி! என்னப்பனே, இந்த ஆபத்திலிருந்து நீயே என்னைக் காக்கவேண்டும். மிஸ்டர் சாமுண்டி ரம்பா என் மனைவிதான்; ஆனால், அவள் சினிமாவுலகின் தீமைகளுக்கு அடிமைப்பட்டாள். அவள் ஜிந்தாலாலிடம் ஆசை வைத்தாள். இது என் ஐயப்பாடே. மற்றைப்படி ரம்பா மிக மிக நல்லவள். நான், அவளை உண்மையாகக் காதலித்தேன். அவள் இனிமேல் படவுலகிலிருந்து விலகி வீட்டுடன் இருக்கவேண்டும்.

சாமுண்டி மீசையை முறுக்கி ராஜத்தை ஒரு தள்ளுத் தள்ளினான். அங்கே மனச் சாட்சிக்கு விரோதமில்லாமல் வாக்குமூலம் கொடுத்தான் சாமுண்டி. அவனைத் தனியறையில் போட்டுப் பூட்டினான். ராஜம் தன் பழைய வினைகளுக்குத் தண்டனை என்று பொறுத்துக்கொண்டு திருப்பதிப் பெருமாளையே நினைத்தான். இந்தச் சம்பவம் அவன் மனத்தை முற்றிலும் மாற்றி விட்டது. ஸ்ரீமத் பாகவதத்தைப் படித்துப் படித்து அவன் மனம் எம்பெருமானிடம் பதிந்து போனது. இப்படித் திடீர் சம்பவங்களால் மானிட வாழ்க்கை புதுமை பெறுவதும் புதுமையே!

11. அந்த ஆள்...?

ரம்பாவைத் தேடி யலைந்தது நகரப் போலீஸ் படை. அவளுடைய மோட்டார் தடத்தைப் பின்பற்றிச் சென்ற போலீஸ் கார் மெரீனா மட்டும் சென்றது; பிறகு மறைந்தது. மெரீனாவை அலசிப் பார்த்தனர் ஒற்றர்கள்.

சாமுண்டியே இங்கு மங்கும் சுழன்று சுழன்று புலன் விசாரித்தான். அவனுக்கு அருந்துணையான செல்லம் தன் பொறாமைத் தீயை எல்லாம் எரிமலைபோல் உமிழ்ந்து, ரம்பாவின் கலையும் புகழும் கரிந்து போகும்படி செய்தாள். ராஜனைப் பற்றி அவள் உயர்வாகவே பேசினாள். சாமுண்டியும் அவளும் அடிக்கடி சந்தித்தனர். இதோ அவர்களின் குரல்கள் குழைகின்றனவே!

சாமுண்டி: செல்லம், உன்னிடம் இருக்கும் ஜிலு ஜிலுப்பு அந்த ரம்பாவிடம் இல்லையே!

செல்லம்: நான் நன்றாகப் படித்தவள். ஆங்கிலம் ஐ நோ;, தமிழ் வித்துவான்; இந்தி மாலும், தெலுங்கு தெலுசுனா, மலையாளம் அறியும்; கன்னடம் தெளிது. என் குரலும் நாட்டியமும், நடிப்பும் அவளுக்கு எப்படி வரும்?

சாமுண்டி: ரம்பாவும் நடிக்கிறாள்; நாட்டியமாடுகிறாள்; ஆனால் கிட்ட நெருங்கமுடியவில்லை—இந்த ராஜனிடம் அவளுக்கு மோகம். இவனுக்கும் அப்படியே.

செல்லம்: அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்? என்னை விடவா அவளுக்கு நடிப்பும் நாட்டியமும்

தெரியும்? இந்தக் கலைக்கே நான் பிறந்தவள். எனக்கு ஐரோப்பிய நடனம் தெரியும், மணிபுரி தெரியும், கதகளி தெரியும், ஜாஸ் தெரியும், பரதநாட்டியத்தை முறைப்படி பயின்றவள் நான்.

சாமுண்டி: பிறகு, ஏன் ஜிந்தாலால் உன்னைப் 'புன்னகை' யில் கதாநாயகி யாக்கவில்லை?

செல்லம்: ஜிந்தாலால் ஒரு அசடன். அவனுக்குக் கலைமதிப்புத் தெரியாது. தக்கடா புக்கடா என்று குதிப்பதெல்லாம் நடனம் என்கிறான். அவன் மனைவி கெட்டிக்காரி—அவளாலேதான் அவன் முன்னுக்கு வந்தான். அவளே அவன் கண்ணைத் திறந்த உத்தமி. ஜிந்தாலால் ரம்பா மோகத்தில் கண்ணிழந்து மதிமயங்கி அழிந்தான். அதனாலேதான் அந்த ரம்பாவுக்கு அவ்வளவு கொழுப்பு—ரம்பம் அவன் கழுத்தை அறுக்க முனைந்தது. அவள் படு கொலைகாரி—அவள் சூழ்ச்சியெல்லாம் எனக்கே தெரியும்.

சாமுண்டி: சொல்லு, செல்லம்.

செல்லம்: சொல்லுவதென்ன? ஜிந்தாலாலுடன் ரம்பா 'பதிவுத் திருமணம்' செய்து கொள்வாளாம்; பிறகு காதலருக்கு நச்சுப் பாலை ஊட்டி ஆளை உருட்டித்தள்ளிவிட்டு, லீலா ஸ்டுடியோவைக் கைப்பற்றுவாளாம்—மனப்பால் குடித்தாள் பேதை. நல்லவேளையாகத் தாங்கள் வந்தீர்கள். அவள் பெரிய சித்தராங்கி.

சாமுண்டி: அவளை என்ன செய்யச் சொல்லுகிறாய்?

செல்லம்: என்னவா, நான் சொன்னதை மறந்தீரா? அவளைக் கொலைகாரி என்று கூண்டில் நிறுத்தி, மானம் கெடுத்துச் சிறையில் அடைக்க வேண்டும். அவள் மறுபடி படவுலகை எட்டிப் பாராமல் செய்யவேண்டும். அவளால் என் மதிப்பெல்லாம் போய் விட்டது. சாது ராஜனையும் அவள் கெடுத்தாள்.

சாமுண்டி: அவனே தானே அவளை மணந்து கொண்டான்? அவன் அவளை நேசிக்கிறானே!

செல்லம்: ஐயையோ, நேசமும் இல்லை; பாசமும் இல்லை. அதுவும் சினிமா நடிப்புத்தான்.

இப்படியே பேச்சு வளர்ந்து இருவரும் கொஞ்சிக் குலாவும் போது, யாரோ ஒருவர் அருகே செடி மறைவிலிருந்து உற்றுக் கேட்டுப் பிறகு 'சட்' டென்று எழுந்து நடந்தார்.

அந்த ஆளை யாரென்று சாமுண்டி கவனிப்பதற்குள், செல்லம், ''இதோ, இதோ ரம்பாவின் மோட்டார் எண் 2500. பாருங்கள் ரோல்ஸ் ராய்ஸ்—!'' என்று சத்தமிட்டாள்.

சாமுண்டி பார்ப்பதற்குள் அந்த மோட்டார் ஒரு நொடியில் ஸாந்தோம் ரஸ்தாவை எட்டிச் சென்று விட்டது.

''செல்லம், நீ போ'' என்று அவளை அனுப்பிவிட்டுச் சாமுண்டி மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு அந்த மோட்டாரைத் தொடர்ந்தான்.

(அடுத்த இதழில் முடியும்.)

மயிலுக்கு தோகையும்
மங்கையருக்கு கூந்தலும்
அழகு என்பார்கள்.
மாதர் குலத்தின் பொக்கிஷம்

பட உலகம்

குலேபகாவலி

ஆர். ஆர். பிக்சர்ஸாரின் 'குலேபகாவலி' ஜூலை 29ல் தென்னாடெங்கும் திரையிடப் படுகிறது. பல நாட்களாகப் பயமுறுத்தி வந்த பயங்கரப் புலியுடன் சண்டையிட்டு, 'ஜம்'மென்று புலிவாயிலிருந்து மீண்ட எம். ஜி. ராமச்சந்திரனைக் கண்டு மகிழ ரசிகர்கள் துடித்துக் கொண்டிருப்பார்கள். உணர்ச்சி நிறைந்த பல கட்டங்கள் டி. ஆர். ராஜகுமாரியின் பெயருக்குப் புத்துயிர் அளிக்குமாம்; ஜி. வரலட்சுமி, ராஜசுலோசனா, தங்கவேலு போன்றவர்களுக்கும் முக்கிய பாகங்கள் உண்டு. டைரக்டர் திரு ராமண்ணாவின் உழைப்புக்குத் தக்க பலனாக இப்படம் அமைந்திருக்கும்.

*

ஆசை அண்ணா அருமை தம்பி

விசித்திரமான தலைப்புக் கொண்ட இப்படம் ஸ்ரீமதி பிக்சர்ஸின் தயாரிப்பு. மாதுரிதேவி, ஏ. பி. நாகராஜன், டி. ஆர். ராமச்சந்திரன், ராஜசுலோசனா போன்றவர்களின் பெயர்கள் பட்டியலில் தென்படுகின்றன. இதன் வெளியீட்டுத் தேதியும் ஜூலை 29 தான். இந்தப் படமும் ரசிகர்களின் ஆதரவைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



அருகில் காத்து நிற்கும் அழகு நிதியை ஒதுக்கிவிட்டு, சேமநிதியில் ஏனோ நாட்டம்!
'அலிபாபா'வில் எம். ஜி. சக்ரபாணியும், வித்யாவதியும்.

நாடக உலகம் :

ராஜராஜ சோழன்

சென்ற 24-7-55 ஞாயிறு மாலை மைலாப்பூர் ரசிக ரஞ்சனி சபாவில் டி. கே. எஸ் சகோதரர்களின் 'ராஜராஜ சோழன்' என்ற நாடகம் நடைபெற்றது. நானும் தலைவர் ம. பொ. சியும் சென்றிருந்தோம்.

நாடகம் ஆரம்பமானவுடன், மறைந்து போன சோழ குலக் குடும்பங்கள் மீண்டும் உயிர் பெற்று வந்தன. 'நாங்கள் இப்படி வாழ்ந்தோம்' என்று சோழ வம்சத்தின் கதையை நடித்துக் காட்டினார்கள்—இல்லை, வாழ்ந்து காட்டினார்கள், நம் கலைச்சோதரர்கள்.

திரு பகவதி, ராஜராஜசோழனாக வந்தார். புன்முறுவல் பூத்த முகத்துடன் தன் மகளோடும் மகனோடும் தமக்கையோடும் பேசிய பொழுதும், சூதுக்கார ராஜ தந்திரியின் ரகசியச் சதிகளைத் தான் அறிந்திருந்தும், எதையும் அறியாதவன் போலப் பேசிய போதும், அவர் போற்றத் தக்க முறையில் நடித்தார். திரு சண்முகம் ராஜராஜனின் மகன் ராஜேந்திரனாக தோற்றம் தந்தார். தான் மாபெரும் வீரனாக இருந்தாலும், மக்களால் பெரிதும் மதிப்புப்பெற்றிருந்தாலும் மாமன்னன் முன்னே—இல்லை, தந்தைக்கு முன்னே தான் ஓர் அடக்க புருஷனாகவே வாழ வேண்டும் என்பதை நன்கு உணர்த்திக் காட்டியதுடன், வீரனாகவும், காதலனாகவும், அன்பு அண்ணனாகவும், நண்பனாகவும் நடித்து நம்மை மலைக்க வைத்து விட்டார். விமலாதித்தனாக தோன்றிய சீதாராமன், குந்தவி நாச்சியாராக வந்த புதுநடிகை ஹேமலதா, ராஜ தந்திரி பாலதேவராய பட்டராக வேடம் புனைந்த ராஜரத்தினம், குந்தவைப் பிராட்டியாகப் பாகமேற்ற ஜெயலக்ஷ்மி, நகைச்சுவை விருந்து நல்கிய கருப்பையா—சிவதாணு ஆகியவர்களும் ரசிகர்களின் போற்றுதலுக்கும் புகழ்ச்சிக்கும் இலக்கானார்கள்.

'ராஜ ராஜ சோழன்' நாடகத்தை எழுதிய 'காதல்' ஆசிரியர் திரு ராமனாதன் அவர்களுக்கும், டி. கே. எஸ் குழுவினருக்கும் இந் நாடகம் ஒரு வெற்றி. கடந்த கால அரசினரின் பெருமையை நாடக வாயிலாக இப்படித் தமிழகமெல்லாம் நடித்து காட்டி, தமிழ் நாட்டின் பெருமையைச் சகோதரர்கள் நிலைநாட்டுவார்களென்று நம்புகிறேன்.

—ஜி. உமாபதி

*

ஏசுநாதர்

நாடக கலாநிதி நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம் அவர்களின் நாடகத் தொண்டு பற்றித் தமிழ் நாடு நன்கு அறியும். நாஸ்திகத்திற்கு அவ்வப்போது 'சூடு' கொடுத்து முற்றுபுள்ளியிட்டுக் கொண்டிருக்கும் பணியார்களில் நவாப்பின் பெயர் பசுமையானது. கிருஷ்ண லீலா, ராமாயணம் போன்ற இந்து மதப் புராண நாடகங்களை மட்டுமன்றி, 'ஏசுநாதர்' போன்ற நாடகத்தையும் நடத்தி வருவது அவருடைய சகலமதப் பற்றை மக்களுக்குப் புலப்படுத்துகிறது. ஏசுநாதரின் பிறப்பு வளர்ப்பில் கையளப்பட்டிருக்கும் நாடக உத்திகள் போற்றற்குரியன. ஏசுநாதர் வேடம் புனைந்தவரின் வேஷப் பொருத்தம் மெச்சத்தக்கது. சிலுவையில் அறையப்படும் காட்சி மெய் சிலிர்க்க வைக்கிறது. ஏசுநாதரின் பொன் மொழிகள் இன்னும் நம் காதுகளில் எதிரொலிக்கின்றனவே !

—'பைரவி'

பிரஸிடென்ட்

வெஜிடபிள் ஹேர் ஆயில், ஸ்னே, டால்கம் பவுடர் தான், மிகவும் சிறந்தது என, என் அனுபவத்தில் கண்டு கொண்டேன்.

(Sd.) சாவித்திரி·

தயாரிப்பாளர்கள் :

ராதோட் டிரேடிங் கம்பெனி,

சென்னை-1.

STATIONERY TWINS

RITEWEL INK

FOR FOUNTAIN PENS

★

PASTEWEL GUM

FOR OFFICE USE

★

MACO PRODUCTS

P. B. No. 1654. MADRAS-1.

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர் : ஜி. உமாபதி, எம். சி., உமா பிரிண்டர்ஸ்,
4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1.

Phone: 2200

4/32, THATHAMUTHIAPPAN ST, MADRAS-1.

எல்லாரக அட்டைப்பெட்டிகள் தயாரிப்பதில் சிறந்தது

உமா பிரிண்டர்ஸ் போன்: 2200

4/32, தாதாமுத்தியப்பன் தெரு, மதராஸ்-1.

வெள்ளித் திரையில் இன்று விண்மீனெனத்
திகழும் பிரபல நக்ஷத்திரம்
ஸ்ரீமதி ராஜ சுலோசனா கூறுகிறார்:
'நான் என் வதன சௌந்தர்யத்திற்கு ரெமி
தயாரிப்புகளையே உபயோகிக்கிறேன்: அவைகள்
மிக்க உயர்தரமானவை'

P. R. சுலோசனா.

Edited, Printed and Published by G. Umapathy, M.C. at Uma Printers, "Uma House" 4/32, Thathamuthiappan Street, Madras-1. Phone: 2200